# வருடாந்த அறிக்கை 2021

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

# உள்ளடக்கம்

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்** ... **2**
எங்கள் ஒருங்கிணைந்த அறிக்கை பற்றி ... 3
எங்களின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி ... 4
நாங்கள் யார்? ... 5
எமது கூட்டிணைவுப் பெறுமதிகள் ... 6
நிதியியல் முனைப்புறுத்தல்கள் ... 7
தலைவரின் செய்தி ... 8
பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு ... 9

**முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு** ... **11**
இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் உபாயமார்க்கங்கள் ... 12
சூழல் மீளாய்வு ... 13
நிதியியல் செயலாற்றுகை மீளாய்வு ... 14
பிரிவு மீளாய்வு ... 16

**ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு** ... **19**
நிறுவன ஆளுகை ... 20
பணிப்பாளர் சபை ... 21
கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவக் குழு ... 23
நிறுவன இடர் முகாமைத்துவம் ... 25
நிலைபேறான அறிக்கையிடல் ... 27
பணிப்பாளர்களின் அறிக்கை ... 28

**நிதியியல் அறிக்கைகள்** ... **29**
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ... 30
விரிவான வருமானக் கூற்று ... 39
நிதி நிலைமைக் கூற்று ... 40
உரிமைப்பங்கு மாற்றக்கூற்று ... 41
காசுப்பாய்ச்சல் கூற்று ... 44
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் ... 45

**துணைத் தகவல்கள்** ... **77**
தசாப்தம் ஒரே பார்வையில் ... 78
கூட்டுரிமைத் தகவல்கள் ... 80



# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்


எங்கள் ஒருங்கிணைந்த அறிக்கை பற்றி....................................................3
எங்களின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி........................................4
நாங்கள் யார்?..........................................................................................5
எமது கூட்டிணைவுப் பெறுமதிகள்.............................................................6
நிதியியல் முனைப்புறுத்தல்கள்..............................................................7
தலைவரின் செய்தி...................................................................................8
பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு.............................................9

# எங்கள் ஒருங்கிணைந்த அறிக்கை பற்றி

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 31 டிசம்பர் 2021 அன்று முடிவடைந்த ஆண்டுகான நிதியத்தின் செயலாற்றுகை மீதான விரிவான மற்றும் போதியளவான தகவல்களை வழங்கும் 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கின்றது.**

### எங்களின் 15வது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கைக்கு உங்களை வரவேற்கின்றோம்

2006ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் பயணம், நிதியத்தினால் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் உருவாக்கக்கூடிய பெறுமதியின் திறனைப் பற்றியும் தொடர்ந்து 15வது ஆண்டாக எங்கள் முக்கிய பங்குதாரர்களுக்கு போட்டித்தன்மை வாய்ந்த நிலையான மதிப்பை உருவாக்கும் திறனைப் பற்றியதுமான முழுமையான பார்வையை வழங்குகின்து. இந்த அறிக்கை அரச தொழில்முயற்சித் திணைக்களத்தில் வழிகாட்டல்கள் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் எங்களுடைய வழமையான நிதியில் அறிக்கையுடன் இணைத்தும் தயாரிக்கப்பட்டுள்ளது.

### எங்கள் ஒருங்கிணைந்த சிந்தனை

இந்த அறிக்கையின் உள்ளடக்கம் மற்றம் கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்கு நிதியத்தின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் கிடைக்கப்பெறும் அனைத்து வளங்களையும் இணைப்பதன் ஊடாக நாங்கள் எங்கள் உபாயமார்க்கம் மற்றும் உள்ளக செயல்முறையை நாங்கள் வடிவமைக்கின்றோம்

### உபாயமார்க்க நோக்கநிலை

இந்த வருடாந்த அறிக்கையானது நிலையான வளர்ச்சியை இலக்காகக் கொண்ட நிதியத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால உபயமார்க்கங்களையும் மற்றும் திறைசேரி மற்றும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு விளக்கத்தையும் வழங்குகின்றது

### நிதியியல் அல்லாத தகவல்கள்

நிதியத்தின் நிலை, செயலாற்றுகை மற்றும் உபாயமார்க்கம் தொடர்பான பரந்த விளக்கத்தை உருவாக்குதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல் என்பவற்றுக்காக இந்த அறிக்கை அவசியமான மற்றும் பொருத்தமான நிதியல்லாத் தகவல்களையும் வெளிப்படுத்துகின்றது.

### ஒப்பீட்டுத் தகவல்கள்

இந்த அறிக்கை சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குதற்காகவும் ஒப்பீட்டுத்தகவல்களை வழங்குகின்றது.

### எல்லை மற்றும் பரப்பெல்லை

இந்த ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கை 31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேசிய காப்பறுதி நிதியத்தின் செயலாற்றுகையையும் நிதியத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கியமான நிகழ்வுகளையும் கொண்டுள்ளது.

### எதிர்கால அறிக்கையிடல் காலங்கள்

எங்களைப் பற்றி அறிக்கையிடும் போது, குறுகிய காலம், இடைக் காலம் மற்றும் நீண்ட காலம் என பொருத்தமானவாறு மூன்று காலங்களில் தகவல்களை அறிக்கையிடுகின்றோம்

# எங்கள் தொலைநோக்கு



தேவையுடைய அனைத்து காப்புறுதித் துறைகளுக்கும் பாதுகாப்பான நிலை மற்றும் காப்பீடு



# எங்கள் செயற்பணி

கீழ்க்காணும் செயற்பாடுகளினூடாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குதல்.

- ✓ சமூகத்திலுள்ள அனைத்து காப்புறுதித் தேவையுடைய துறைகளுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய, வினைத்திறன்வாய்ந்த மற்றும் முன்னேற்றகரமான காப்புறுதி செயல்திட்டங்களை வழங்குதல்.
- ✓ ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளினூடாக மாறிவரும் தேவைகளிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான இடர்களினை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டு சந்தைகளுக்கான தீர்வுகளினை வழங்குதல்.
- ✓ உள்நாட்டு காப்புறுதி சந்தைக்கு மேலதிக இயலளவினை வழங்கும் நோக்குடன் இலங்கையில் மீள் காப்புறுதி சந்தையினை உருவாக்குதல்.

# நாங்கள் யார்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பு மீள்காப்புறுதி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி, அக்ரஹார மருத்துவக் காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதி, தேசிய இடர் காப்புறுதிக் காப்பீடுகள் உள்ளடங்கலாக ஏனைய வகைகளான பொதுக் காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பங்கள் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி நிதியம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் ஆரம்பத்தில் நிர்வகிக்கப்பட்டதுடன், அது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்வாங்கப்பட்டது. அதேவேளையில், அதன்பின்னர் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அனைத்துக் காப்புறுதிப் பூட்கையாளர்களும் சேகரித்த தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பாக செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் 31 டிசம்பர் 2012ஆம் திகதி வெளியிடப்பட்ட 1791/4ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனைத்து முதல்நிலை காப்புறுதியாளர்களும் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி ஒப்பந்தத்தினால் எழும் மொத்த மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தில் 30% வீதத்தை இணங்கி ஒப்பிவித்தல் வேண்டும்.

அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 12/2005இன் கீழ் அமுல்படுத்தப்பட்டதுடன், அது 1 ஜனவரி 2006இல் இருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் கீழ் வந்தது. அரசாங்க சேவை மற்றும் மாகாண பொது சேவையில் உள்ள அனைத்து ஊழியர்களும் அக்ரஹார மருத்துவக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியைக் கொண்டுள்ளதுடன் இக்காப்புறுதி தங்க மற்றும் வெள்ளித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் ஊடாக மேலும் நன்மைகளை வழங்குகின்றது. மேலும், முழுமையாக அரசு அல்லாத ஊழியர்களுக்கும் அக்ரஹார காப்பறுதித் திட்டம் வழங்கப்படுகின்றது. அத்துடன், 2016ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வுபெற்ற, இந்த அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் ஓய்வூதியம் பெறுபவர்களும் உள்ளடக்கப்படுகின்றனர்.

அரச துறையினருக்கு மட்டுமன்றி தனியார்துறையினருக்கும் முழுமையான கோரிக்கைத் தீர்வுகளை வழங்கும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கும் மோட்டார் காப்புறுதி காப்பீட்டினை வழங்குகின்றது. பொதுக் காப்புறுதியின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் மோட்டர் காப்புறுதியல்லாத திட்டத்தினை வழங்குகின்றது. புதிய தொழில்நுட்பங்களினைப் பயன்படுத்துவதனூடாக எமது உள்ளக மற்றும் வெளியக வினைத்திறன்கள் மேம்படுத்தப்படுகின்றதுடன் அடிமட்டத்திலிருந்து நிலையான வெற்றியினை நோக்கியதான எமது நடவடிக்கையினை முன்னெடுப்பதில் காத்திரமான பங்களிப்பினையும் வழங்குகின்றது.



# எமது கூட்டிணைவுப் பெறுமதிகள்

எமது ஆறு முக்கிய கூட்டிணைவுப் பெறுமதிகளும் நிலையான தாபனமென்றை உருவாக்குவதுடன் எமது தொழில்முயற்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கான நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டலை வழங்குகின்றன.




| | | |
|---|---|---|
| 1. **வாடிக்கையாளர நலன்பேணல்** | - | வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வியாபாரங்கள் வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்கும் வலுவான வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியக் கலாச்சாரத்தை வளர்க்கின்றன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சமூகம் சார்நத காப்புறுதிகளை வழங்குவதுடன் அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றுகின்றது, இங்கு வாடிக்கையாளர் திருப்தி என்பது முக்கியமானதாகும். |
| 2. **நல்லிணக்கம்** | - | நேர்மையான மற்றும் வலுவான தார்மீகக் கொள்கைகளைக் கொண்ட தரத்தினைக் கொண்டு, அரசாங்க அமைப்பாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் கொள்கைகளை நன்கு பராமரித்து அதன் உட் தரப்பினருக்கும் வெளித்தரப்பினருக்கும் நேர்மையாக உள்ளது. |
| 3. **தரம்** | - | ஏதொவென்றின் சிறப்பின் அளவு. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் எப்போதும் தரத்தினை விரிவுபடுத்துவதற்கும் நீடித்த காப்புறுதி வகைகளையும் சேவைகளையும் வழங்கும் நோக்குடனும் செயற்படுகின்றது. |
| 4. **கௌரவம்** | - | யாரோ ஒருவர் அல்லது ஏதாவதொன்று முக்கியமானதாக கருதும் ஒரு விடயத்தை நோக்கி பண்பட்ட, மரியாதை மற்றும் அக்கறை காட்டப்படுகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் எப்போதும் சிறந்த சேவையை வழங்க மற்றவர்களின் வார்த்தைகள் மற்றும் செயல்களை மதிக்கின்றது. |
| 5. **புத்தாக்கம்** | - | புதிய விடயங்களைச் செய்து புதிய யோசனைகளைக் கொண்டு வருவதற்கான செயல் அல்லது செயன்முறை ஆகும். மற்ற நிறுவனங்களைப் போல தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு புதுமை மிகவும் முக்கியமானதாகும். |
| 6. **தொடர்ச்சியான மேம்படுத்தல்** | - | வெறுமனே நடந்துகொண்டிருக்கும், வேறு வார்த்தைகளில் கூறின் தொடர்ச்சியாக, மேம்படுத்துவதற்கான முயற்சி அல்லது சிறப்பாக செய்தல். |

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் உள்ள காப்புறுதி வியாபாரம், இது ஒரு நிறுவனம் வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் உட்பட பல்வேறு வகையான விடயங்களைக் குறிக்கும், அத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உள் மற்றும் வெளிப்புற பயன்பாட்டில் உள்ள அனைத்து செயல்முறைகளும் அடங்கும்.**

# நிதியியல் முனைப்புறுத்தல்கள் -2021

| நிதியியல் செயலாற்றுகை | 2021 இ.ரூபா | 2020 இ.ரூபா | % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | **10,630,972,523** | 9,818,040,011 | 8 |
| தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் | **17,378,904,399** | 17,475,027,816 | (0.6) |
| வரிக்கு முன்னரான இலாபம் | **5,935,721,923** | 8,865,926,371 | (33) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | **4,944,217,918** | 7,526,099,442 | (34) |
| திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு | **1,824,000,000** | 782,000,000 | 133 |
| **வருட இறுதியில் நிதியியல் நிலை** | | | |
| மொத்த சொத்துகள் | **31,564,649,760** | 27,358,314,000 | 15 |
| மொத்த உரிமைப்பங்குகள் | **16,865,970,344** | 14,062,543,942 | 20 |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | **11,580,703,508** | 9,825,591,002 | 18 |
| மொத்தப் பொறுப்புகள் | **14,698,679,413** | 13,295,770,055 | 11 |

மொத்த சொத்துகள்

இ.ரூபா **31.5** பில்.

மூலதனப் போதுமை வீதம்

**600%**

சொத்துகள் மீதான வருமானம்

**14.66%**

வரிக்கு முன்னரான வரி

இ.ரூபா **5.9** பில்.

பிட்ச் ரேட்டிங்

**A+** LKR

திரட்டிய நிதிக்கான பங்களிப்பு

இ.ரூபா **1.8** பில்.

# தலைவரின் செய்தி



> மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், கோவிட் 19 தொற்றுநோயால் ஏற்படும் சவால்கள், அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற நிலையிலும் கூட, அரச துறை மற்றும் தேவைப்படும் அனைத்துத் துறைகளின் தேவையைப் பூர்த்திசெய்ய இந்த விலைமதிப்பற்ற சேவைகளை வழங்கும் போது, இலாபத்தைப் பேணுவதற்கான அதன் முக்கிய தேவைகளை தேசிய காப்பறுதி நம்பிக்கை நிதியத்தினால் வெற்றிகரமாக சமப்படுத்த முடிந்தது.

### 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின் சமர்ப்பித்தல்

டிசம்பர் 31, 2021இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளை எங்கள் மதிப்புமிக்க பங்குதாரர்களுக்கு மீண்டும் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டு மீண்டும் ஒருமுறை நினைவுகூறப்படும் வகையில் கற்பனை செய்ய முடியாத வழிகளில் உலகெங்கிலும் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் சீர்குலைத்துள்ள கோவிட் 19 தொற்றுநோய் வெடித்தது. பல சவால்கள் இருந்தபோதிலும், வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அதிகரித்து வரும் சமூகத்தின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில் பூட்கையாளர்களுக்கு காப்புறுதிகளை வழங்குவதில் தேசிய காப்பறுதி நிறுவனம் தொடர்ந்து வலிமை, நெகிழ்ச்சி மற்றும் துடிப்பான திறனை வெளிப்படுத்துகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, புதிய விதிமுறை பாதுகாப்பாக இருப்பதற்கும், நமது சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் பொறுப்பைப் பகிர்ந்துகொள்வது மற்றும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் எங்கள் பங்குதாரர்களுக்கு குறிப்பிட்டளவு மதிப்பை உருவாக்கல். வாழ்வதற்கும், சம்பாதிப்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும் ஏற்றவாறு விரைவாகச் செயற்படும் திறனை மேலும் நிரூபித்துள்ளது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றுகை மற்றும் பங்களிப்பு

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், கோவிட் 19 தொற்றுநோயால் ஏற்படும் சவால்கள், அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற நிலையிலும் கூட, அரச துறை மற்றும் தேவைப்படும் அனைத்துத் துறைகளின் தேவையைப் பூர்த்திசெய்ய இந்த விலைமதிப்பற்ற சேவைகளை வழங்கும் போது, இலாபத்தைப் பேணுவதற்கான அதன் முக்கிய தேவைகளை தேசிய காப்பறுதி நம்பிக்கை நிதியத்தினால் வெற்றிகரமாக சமப்படுத்த முடிந்தது.

காப்புறுதிச் சந்தையானது மந்தமடைந்துள்ள வேளையில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2020ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 9.818 பில்லியன் தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 10.631 பில்லியன் வளர்ச்சி காணப்பட்ட போதிலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2020ஆம் ஆண்டு பதிவுசெய்த வரிக்குப் பின்னரான இலாபமான ரூபா 7.526 பில்லியன் 2021ஆம் ஆண்டில் ரூபா 4.944 பில்லியனாக குறைவடைந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பிட்ச் தரப்படுத்தலில் (Fitch rating) AA-(lka) தரத்தைப் பெற்றுக்கொண்டு, 2021ஆம் ஆண்டுக்கான அதன் பலமான நிதி நிலையை உறுதிசெய்தது.

### எதிர்காலத் திட்டங்கள்

இந்த சவாலான சூழலுடன் முன்னோக்கிச் செல்வதில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, தற்போதுள்ள காப்புறுதித் திட்டங்களை விரிவுபடுத்தி பொது மக்களுக்கு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும் அதேவேளையில், சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கும் உற்பத்தித் திறனை மேம்படுத்தவதற்கும் மனிதவள நிர்வாகத்தை வலுப்படுத்துகின்றது. நிறுவனத்தின் திடத்தன்மையை உறுதிசெய்வதற்காக புதிய பங்குடமைகளை உருவாக்கவதற்கு நிறுவனம் தொடர்ந்து சேவையாற்றுகின்றது.

### பாராட்டு

நான் இந்த நிறுவனம் யாருடைய பரப்பெல்லையின் கீழ் செயற்படுகின்றதோ, அந்த கௌரவ பிரதமர், செயலாளர்கள் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் திறைசேரி செயலாளர் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் நெருக்கமாக தொடர்புகளைக் கொண்டுள்ள அதிகாரிகளுக்கும், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் அலுவலர்களுக்கு அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆதரவுக்கும் நன்றியை ஒப்படைக்க விரும்புகின்றேன். இறுதியாக இந்த வருடம் முழுவதும் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நிறுவனத்தை இந்த உயரத்திற்கு கொண்டு வருவதற்கு ஆதரவளித்த பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினால் தலைமை தாங்கப்பட்டு வழிநடத்தப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.



**மவாஹிப் மவ்ஜூட்**
தலைவர்

# பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு



"2020 இல் ரூ. 21.666 பில்லியனாக இருந்த நிதிச் சொத்துகளின் மதிப்பு 2021 இல் ரூ. 24.954 பில்லியனாக சற்று அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் போன்ற அரசாங்கப் பத்திரங்களுக்கான தேவை அதிகரித்ததே இதற்கு முக்கியக் காரணம்."

2021 ஆம் ஆண்டில் முழு உலகையும் இக்கட்டான நெருக்கடிக்குள் ஆழ்த்திய கோவிட் -19 தொற்றுநோயின் தாக்கம், இலங்கையிலும் பேரழிவு விளைவை ஏற்படுத்தியது. 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2021 இல் சிறந்த பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்ட போதிலும், 2021 இன் கடைசி இரண்டு காலாண்டுகளில் கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் இலங்கையின் சமூக-பொருளாதார நிலையில் பல்வேறு அவநம்பிக்கையான தாக்கங்களுக்கு வழிவகுத்தது. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு முழுவதும் அதன் நிழலை வீசும் உலகளாவிய தொற்றுநோய்க்கு மத்தியில் எவ்வாறு மீள்திறன் கொண்ட நிறுவனங்கள் வலுவாக வெளிப்படுகின்றன என்பதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஒரு உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாக நிரூபித்தது.

கோவிட்-19 இன் தாக்கத்திற்கு பதிலளிப்பதற்காக நிறுவனம் தனது டிஜிட்டல் மூலோபாயத்தை இந்த ஆண்டில் மேலும் துரிதப்படுத்தியது. இதன் விளைவாக, எங்களது பல முக்கிய செயல்பாடுகளை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ டிஜிட்டல் தளங்களுக்கு மாற்றியுள்ளோம். வாடிக்கையாளர் உரிமைகோரல்களைச் செயல்படுத்த ஒன்லைன் முறையைப் பயன்படுத்துதல், எங்கள் பெரும்பாலான ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதித்தல் மற்றும் பல, எங்கள் டிஜிட்டல் பயணம் நம்மை எவ்வாறு பாதித்தது என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில், பொதுத் துறைக்கான ஒரே மற்றும் மிகப்பெரிய மருத்துவக் காப்புறுதி வழங்குநராக உள்ள நாங்கள், எந்தவொரு கோவிட்-19 உரிமைகோரல்களையும் நிதிப் பலனைப் பொருட்படுத்தாமல் மதிப்போம் என்று எங்கள் பூட்கையாளர்களுக்கு உறுதியளிக்க முன்முயற்சி எடுத்தது எனக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது.

### நிறுவனத்தின் செயலாற்றுகை

தொற்றுநோயின் விளைவாக கணிசமான பின்னடைவை எதிர்கொண்ட போதிலும், 2021 இன் நிலையற்ற காலகட்டத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தனது நிதி இலாகாவை விவேகத்துடன் நிர்வகித்து, காப்புறுதித் துறையில் நீடித்து நிற்பதற்கு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குகிறது. 2020 இல் எழுதப்பட்ட மொத்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூ. 9.818 பில்லியனாக இருந்ததுடன் இத் தொகையானது 2021 இல் ரூ. 10.631 பில்லியனாக அதிகரித்தது, இது 2020 ஐ விட 2021 இல் 8% அதிகரிப்பைக் குறிக்கிறது. இது முக்கியமாக மறுகாப்பீடு மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதி ஆகியவற்றின் மொத்த எழுதப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் அதிகரிப்பு காரணமாக நிகழ்ந்ததாகும்.

மறுபுறம், ஒமேகா லைன் லிமிடெட் நிறுவனத்திற்கு மறுகாப்புறுதிக் கோரிக்கையை செலுத்தியதன் காரணமாகவும், கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கான அக்ரஹார மருத்துவக் காப்புறுதிக் கோரிக்கைகளை செலுத்தியதாலும், 2021 இல் ஏற்பட்ட மொத்த நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் 27% வீதத்தால் அதிகரித்துள்ளன, 2020 இல் ரூ.7.978 பில்லியனாக இருந்த தொகை 2021 இல் ரூ. 10.147 பில்லியனாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகின்றது. இதன் விளைவாக, மொத்த விரிவான வருமானம் 2020ல் ரூ. 7.652 பில்லியனில் இருந்து ரூ. 2021 இல் 4.627 பில்லியனாக குறைவடைந்துள்ளது. இச் சரிவு 40% ஆகும்.

நிதி நிலையை கருத்தில் கொள்ளும்போது, மொத்த உரிமைப் பங்கு மற்றும் மொத்த சொத்துக்கள் முறையே ரூ.14.063 பில்லியனில் இருந்து ரூ. 16.866 பில்லியனாகவும் மற்றும் ரூ. 27.358 பில்லியனில் இருந்து ரூ. 31.565 பில்லியனாகவும் சிறிது அதிகரித்துள்ளது. மேலும், பொறுப்புகள் 2020 இல் ரூ.13.296 பில்லியனாக இருந்து ரூ. 2021 இல் ரூ. 14.699 பில்லியனாக அதிகரித்தன் ஊடாக 11% ஆல் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

2020 இல் ரூ. 21.666 பில்லியனாக இருந்த நிதிச் சொத்துகளின் மதிப்பு 2021 இல் ரூ.24.954 பில்லியனாக சற்று அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள் போன்ற அரசாங்கப் பத்திரங்களுக்கான தேவை அதிகரித்ததே இதற்கு முக்கியக் காரணம்.

ஒட்டுமொத்தமாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அந்தக் காலகட்டத்தில் எதிர்கொள்ளப்பட்ட கோவிட்-19 தொற்றுநோய் சவால்களை மீறி நியாயமான நிதி நிலையை வெளிப்படுத்துகிறது.

**தொழிற்பாட்டு முன்னேற்றம்**

2021 ஆம் ஆண்டில், கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் மருத்துவமனைக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன, மேலும் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே சிகிச்சை பெற்று வரும் அரசு ஊழியர்களையும் சேர்க்கும் வகையில் நன்மை விரிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் சமூகப் பாதுகாப்பு அமைப்பில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு முக்கியப் பங்கு இருப்பதுடன் நாட்டின் மிகப்பெரிய மக்கள் நலன் சார்ந்த காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகியாக இருப்பதால், மாவட்டச் செயலக அலுவலகங்களில் இருக்கும் பிரதிநிதிகளின் வலையமைப்பு அனைத்து மாவட்டங்களிலும் எங்களிடம் உள்ளது. இந்த நாடு தழுவிய பிரதிநிதித்துவம் உள்ளூர் சமூகங்கள் மத்தியில் மேம்படுத்துவதற்கும் துல்லியமான தகவலுடன் பதிலளிப்பதற்கும் ஒரு நல்ல சேவை நிலையை செயல்படுத்துகிறது.

**பாராட்டு**

எல்லாவற்றிற்கும் மேலாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சமீபத்திய முன்னேற்றம் நாடு முழுவதும் உள்ள எங்கள் ஊழியர்களின் நீடித்த வலிமை மற்றும் அர்ப்பணிப்பின் நேரடி விளைவாகும், மேலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை இதயத்தில் வைத்திருக்கும் அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவிக்க வேண்டும். எப்பொழுதும் போல, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மீது நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் தொடர்ந்து வைப்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வலிமையை ஆதரிப்பதில் அவர்களின் தொடர்ச்சியான வழிகாட்டுதல், ஆலோசனை மற்றும் தொழில்முறை நுண்ணறிவுக்காக எங்கள் மூத்த நிர்வாகம், எங்கள் தலைவர் மற்றும் இயக்குநர்கள் குழு, நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நீண்ட காலமாக நினைவுகூரப்படும் ஒரு கடினமான ஆண்டில் நாம் ஒன்றாகச் சாதித்ததைப் பற்றி நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.



எல். ஏ. ஜி. என். லியனாராச்சி
**தலைமை நிர்வாக அதிகாரி (பதில்)**



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு


இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் உபாயமார்க்கங்கள் .................12
சூழல் மீளாய்வு........................................................................13
நிதியியல் செயலாற்றுகை மீளாய்வு...........................................14
பிரிவு மீளாய்வு .........................................................................16

# இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் உபாயமார்க்கங்கள்

| | இலக்குகள் | குறிக்கோள்கள் | உபாயமார்க்கங்கள் |
|---|---|---|---|
| 1. | அதி உயர் காப்புறுதி தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொள்ளும் அரசாங்க காப்புறுதி நிறுவனம் | 2023இல் அக்ரஹார மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை அதிகரித்தல் | - பல்முக பண்டங்களை அபிவிருத்தி செய்தல்<br>- புதிய வளங்களை கவர்தல் (மனித மற்றும் ஏனைய வளங்கள்)<br>- புதிய வாடிக்கையாளர்களைக் கவருதல்<br>- வெப்தளத்தின் வேகத்தை உச்சப்படுத்தல்<br>- முன்வெளியீட்டுக்கு அப்பால் ஒழுங்குசெய்தல்.<br>- மீள் சந்தைப்படுத்தலுடன் ஒரு சந்தர்ப்பத்தைப் பெறல்.<br>- விதப்புரை செய்யப்பட்ட முறைமையொன்றை உருவாக்கல்<br>- புதிய பண்டங்களுக்கு விழிப்பணர்வையும் நம்பிக்கையையும் உருவாக்கல்<br>- விநியோக ஊடகங்களை உருவாக்கல |
| 2. | தெற்காசிய பிரதேசத்தில் மீள்காப்புறுதியில் பிராந்திய ஆட்டக்காரராக உருவாகுதல். | 2023 இல் மீள்காப்புறுதி நியதியத்தை உருவாக்கல் | - குழுவொன்றை உருவாக்கி செயலாக்க பாதையை முடித்தல்<br>- முன் வெளியீட்டுக்கு அப்பால் ஒழுங்குசெய்தல்.<br>- மின்-விளம்பரத்தின் ஊடாக என்ஜடீஎப் இன் பலம் மற்றும் காப்பறுதித்துறையினருக்கான நன்மைகள் தொடர்பாக விழிப்புணர்வை உருவாக்கல் |
| | | 2020இல் 30% வீதத்திற்கு மேற்பட்ட மீள்காப்புறுதி பொறுப்பினை ஏற்றுக்கொள்ளல் | - இடர்களை ஏற்றுக்கொள்ளும் முன்னர் சந்தையைக் கற்றல்.<br>- புதிய வளங்களைக் (மனிதவளம் மற்றும் ஏனைய வளங்கள்) கவர்தல் |
| | | 2020இல் பொது காப்புறுதிக்கு புதிய ஒப்பந்த மீள்காப்புறுதி ஏற்பாடுகளை உருவாக்கல் | - குழுவொன்றை உருவாக்கி செயற்படுத்தும் முறை பற்றித் தீர்மானித்தல்<br>- அவசியமான தகவல்களை சேகரித்தல்<br>- முன் வெளியீட்டுக்கு அப்பால் ஒழுங்குசெய்தல்.<br>- சந்தைப்படுத்தலின் ஊடாக புதிய வியாபாரச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளல் |
| 3. | SRCC & T இல் அரசாங்கத்தின் சிறந்த பதிலீட்டு நிதி வைத்திருப்பாளராக உருவாதல் | 2023இல் SRCC & T தொடர்பாக சிறந்த முதலீட்டுக் கொள்கையை உருவாக்கல். | - சிறந்த முதலீட்டுத் தேர்வை கற்கை செய்தல் தேர்ந்தெடுத்தல்<br>- காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அனைத்து தவணைக் கட்டணங்களையும் சேகரிப்பதற்கு உள்ளக கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தல |
| 4. | கோரிகையாளரிடமிருந்து போதிய தகல்கள் பெற்றுக்கொள்ள முடியாத வேளையிலும் விரிவான மோட்டார் வாகனம் தொடர்பான கோரிக்கைகளைத் தீர்ப்பதை விரிவுபடுத்தல | 2023இல் கோரிக்கைகளை ஒரு வாரத்தினுள் தீர்த்தல். | - இற்றைப்படுத்தப்பட்ட சேவை நிலையத்தையும் அழைப்பு நிலையத்தையும் அபிவிருத்தி செய்தல்.<br>- குறைபாடுகளைக் கையாளும் முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.<br>- வினைத்திறனான ஆவண முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்<br>- தகவல் தொழில்நுட்பம் ஊடான புத்தாக்கம்.. |

# சூழல் மீளாய்வு

அண்மைக் காலங்களில், மனித செயற்பாடுகளுக்கும் சூழலுக்கும் இடையிலான உறவுமுறை சிக்கல் அடைந்ததனால், சட்ட, பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த பிரச்சினைகள் அதிகரிகின்றதுடன், அது பாரிய பொதுமக்கள் அக்கறையாக மாறியுள்ளது. சுற்றுச்சூழலை கருத்தில் கொள்ளும் போது: உள்ளூர் சூழல் மற்றும் உலகளாவிய சூழல் ஆகியவை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயல்பாடுகளை கணிசமாக பாதிக்கின்றன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்யும் அதேவேளையில், 2021 ஆம் ஆண்டு, தொற்று நோயைக் கையாள்வது, காப்புறுதிச் சேவைக்கான அணுகலை உறுதி செய்து, மக்களை முகாமைப்படுத்துவதற்கான ஒரு ஆண்டாக விளங்கியது. 2021ஆம் ஆண்டு, கோவிட்-19 தொற்றுநோயைக் கையாளவதில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மக்களை முதன்மைப்படுத்துவதற்கான ஒரு ஆண்டாக விளங்கியது, அதேநேரத்தில் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளையில் காப்புறுதி சேவைகளுக்கான அணுகலை உறுதிப்படுத்தியது. காப்புறுதி வியாபாரத்தின் விரிவாக்கத்திற்கு காரணம், கடந்த இரு ஆண்டுகளில் அதிகரித்த உடல்நல காப்புறுதியின் தேவை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. காப்புறுதித்துறையில் சமூக பொருளாதார நிலைமைகளின் தாக்கத்துடன் நிறுவனத்தின் முன்னுரிமைகளுடன் சீரமைக்கப்பட்ட நீண்ட கால உபாயமார்க்க இலக்குகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் புதுப்பித்துள்ளது. இதன் விளைவாக காப்புறுதிக் கம்பனிகள் அவற்றினுடைய இடர்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் 30மூ வீதத்தினையும் மிகுதியை வெளிநாட்டு மீள்காப்புறுதிக் கம்பனியிடமும் மீள் காப்புறுதி செய்வதன் ஊடாக மாற்றுகின்றன. அதனால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் உபாயமார்க்கத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது நாட்டின் பொருளாதார மதிப்பீடுகளை மேற்கொள்ளுதலையும் காப்புறுதிக் கைத்தொழில் அபிவிருத்தியையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

## இலங்கையின் பொருளாதாரச் சூழல்

கோவிட்-19 தொற்றுநோயின் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்கள், கைத்தொழிற்முறையில் பல்வேறு சவால்களையும் சந்தர்ப்பங்களையும் பதிவுசெய்துள்ளது. சந்தர்ப்பங்களாக, நுகர்வோர் விழிப்புணர்வு அதிகரித்தமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆர்வம் உயர்ந்தையைக் குறிப்பிட முடியும். பண வீக்க அழுத்தங்கள் மற்றும் அடக்கமான பொருளாதார நிலை காரணமாக ஏற்பட்ட கொள்வனவு செய்யும் சக்தியின் தாக்கம் அச்சுறுத்தலாக அமைந்தமையைக் குறிப்பிட முடியும்.

2021 இல், விரைவான தடுப்பூசி பிரச்சாரம் பொருளாதார மீட்சிக்கு பங்களித்தது. 2020 இல் 3.6% வீதமாக சுருங்கிய பின்னர் 2021இல் 3.7% வீதமாக இலஙகை பொருளாதார வளர்ச்சியை அடைந்தது. ஆனால், உலகில்உள்ள பல பொருளாதாரங்களைப் போலவே, இலங்கைப் பொருளாதாரமும் 2021இல், கோவிட் தொற்றுநோய் காரணமாக பேரழிவுகரமான தாக்கத்தையும் தடைகளையும் கொண்டிருந்தது.

தொற்றுநோய்களின் மத்தியில் அதிகரித்த செலவினங்களும் குறைந்த வருமானங்களும் நிதி நிலைமையின் சரிவுக்கு பங்களித்தன, இருப்பினும், தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய்க்கு முந்தைய வரிக்குறைப்புகளினால், நிதிப் பற்றாக்குறை கடுமையாக விரிவடைந்ததுடன் அரச கடன் கணிசமாக அதிகரித்தது.

## கைத்தொழில் மீளாய்வு

கோவிட்-1 தொற்றுநோய், பொது மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்க்கை முறை மீது அதிக நிட்சயமற்ற நிலையை உருவாக்கி வேறுபட்ட அம்சங்களுக்கான காப்புறுதிப் பூட்கைகளை உருவாக்கி, காப்பறுதித்துறையைப் பாதிக்கின்றது. மேலும், காப்புறுதிக் காப்பீட்டுக்கான தேவையின் வடிவம் மற்றும் உடல்நலக் காப்புறுதி மீதான காப்பீடுகளின் நியதிகள், மோட்டார் காப்புறுதி மாற்றமடைந்ததுடன் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் நடத்தை மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்கியது. அத்துடன், செலவழிக்கக்கூடிய வருமான மட்டத்தின் நலிந்த நிலைமை குறைந்த கால காப்பறுதிப் பண்டங்களுக்கான கேள்வியில் தாக்கத்தை விளைவிக்கும் என எதிர்பார்க்கபார்க்கப்பட்டாலும், கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிந்தைய தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் பாதுகாப்பு பண்டங்களில் அதிக ஆர்வம் மற்றும் விழிப்புணர்வு, நீண்ட காலத் துறையில் தொழில்வாய்ப்புகளை நன்றாகக் காட்டுகின்றது. காப்புறுதி வியாபாரத்தின் விரிவாக்கத்திற்கு காரணம், கடந்த இரு ஆண்டுகளில் அதிகரித்த உடல்நல காப்புறுதியின் தேவை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. வாடிக்கையாளர்கள் பெருகிய முறையில் எளிமையான மற்றும் வசதியான தீர்வுகளைத் தேடுவதால், காப்பறுதி வியாபாரத்தின் டிஜிடல் மயமாக்கல் வெற்றிக்கான திறவுகோலாக இருக்கும். மறுபுறம், மேலும் வாடிக்கைகளாயர்கள் எளிமையான மற்றும் வசதியான பாதுகாப்பைத் தேடுவது அதிகரிக்கின்றமையினால், டிஜிடல் மயமாக்கல் காப்புறுதித்துறையைச் சீர்குலைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது,

நிலையான பெறுமதி சேர்ப்பு மற்றும் சுறுசுறுப்பான வியாபார மாதிரிகள் ஆகியவற்றின் மேலோட்டமான உபாயமார்க்கத்தை பயன்படுத்துவதன் மூலம்: இலங்கை காப்புறுதித்துறையானது 2021இல் சவாலான பாரிய பொருளாதார சூழலில் நிலைத்து நிற்கின்றது. இலங்கையின் காப்புறுதித்துறையானது 2021ஆம் ஆண்டு வரிக்கு முன்னரான மொத்த தேறிய இலாபமான இ.ரூபா 38.4 பில்லியன் (அமெரிக்க டொலர் 502 பில்லியன்) ஐ பெற்றுள்ளது, இது 2020ஆம் ஆண்டை விட 4.9% வீதம் குறைவு என காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தரவு காட்டுகின்றது.

# நிதியியல் செயலாற்றுகை மீளாய்வு -2021

**நிதியியல் செயலாற்றுகை மீளாய்வு வியாபாரத்தின் செயல்திறனை கூர்ந்து அவதானிக்கின்றது.**

| | 2017<br>இ.ருபா மில்லியன் | 2018<br>இ.ருபா மில்லியன் | 2019<br>இ.ருபா மில்லியன் | 2020<br>இ.ருபா மில்லியன் | 2021<br>இ.ருபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் | 9,071 | 9,684 | 12,693 | 9,818 | 10,631 |
| தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம் | 11,614 | 13,653 | 16,448 | 17,475 | 17,379 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1,077 | 3,289 | 3,008 | 8,866 | 5,936 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 976 | 3,183 | 3,114 | 7,526 | 4,944 |
| மொத்த சொத்துகள் | 18,553 | 15,595 | 20,707 | 27,358 | 31,565 |
| தேறிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள் | 9,901 | 9,691 | 12,079 | 7,955 | 10,761 |
| முதலீடுகள் மற்றும் ஏனைய வருமானம் | 1,143 | 1,343 | 1,265 | 1,385 | 1,589 |
| ஏனைய வருமானம் | 1,149 | 1,460 | 1,269 | 1,387 | 1,590 |
| மொத்த உரிமைப்பங்கு | 7,146 | 6,956 | 7,192 | 14,062 | 16,866 |
| சொத்துகள் மீதான வருமானம் | 5.26% | 20.41% | 15.04% | 27.51% | 14.66% |

மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம்




தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம்




வரிக்குப் பின்னரான் இலாபம்




தேறிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள்




முதலீட்டு மற்றும் ஏனைய வருமானம்



மொத்த சொத்துக்கள்

**Total Assets**




மொத்த உரிமைப் பங்கு

**Total Equity**




நாடு முழுவதும் கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டதனால், வருடம் முழுவதிலும் காணப்பட்ட சவால்களின் மத்தியில் 2020 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2021ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ரூபா 9.818 பில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு எதிராக 2021இல் ரூபா 10.61 பில்லியனைப் பெற்றுக்கொண்டது. இது 8% வீத வளர்ச்சியாகும். தேறிய எழுதப்பட்ட தவணைக்கட்டணமானது 2020ஆம் ஆண்டில் ரூபா 17.475 பில்லியனாக இருந்ததுடன், இது 0.6% வீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2021ஆம் ஆண்டில் ரூபா 17.379 பில்லியனைப் பதிவுசெய்தது. மேற்குறித்த இரு வரைவுகளும் மொத்த தவணைக் கட்டணம் மற்றும் தேறிய உழைக்கப்பட்ட தவணைக்கட்டணம் என்பன கடந்த ஐந்து வருடங்களில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகின்றன.

2020இல் ரூபா 7.526 பில்லியனாக காணப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் 2021 இல் ரூ.4.944 பில்லியனாக குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்தது. ஏனைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 இல் பெறப்பட்ட ரூபா 1.589 பில்லியன் முதலீட்டு மற்றும் ஏனைய வருமானம் தற்போது அதிகரித்துள்ளது. முதலீட்டு வருமானம் சாதகமான அதிகரிப்பைக் கொண்டிருந்தாலும், தேசிய நன்மைகள் மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட கோரிக்கையின் உயர் வீதம் காரணமாக நேர்மறையாக வரிக்குப் பின்னரான இலாபம் பாதிப்படைந்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மொத்த சொத்துக்கள் 2020இல் ரூபா 27.358 பில்லியனில் இருந்து ரூபா 31.565 பில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த 15% வீத அதிரிப்புக்கு நிதிச் சொத்துக்கள் மற்றும் பெறத்தக்க தவணைக் கட்டணம் ஆகியவற்றின் கணிசமான வளர்ச்சியே காரணமாகும். அதேவேளையில் மொத்த உரிமைப் பங்கு 2020இல் ரூபா 14.062 பில்லியனாக இருந்ததுடன், 2021இல் 16.866 பில்லியனாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடைந்துள்ளது. இந்த 20மூ வீத அதிகரிப்புக்கு தக்கவைக்கப்பட்ட உழைப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்

# பிரிவு மீளாய்வு

### அக்ரஹார மருத்துவ காப்புறுதித் திட்டம்

அக்ரஹார என்பது 875,000 ற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கையின் மிகப் பெரிய காப்புறுதித் திட்டமாகும். இந்த திட்டத்தின் நன்மைகள் குடும்ப அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படுவதனால், இது 2.5 மில்லியன் இலங்கையர்களை காப்பீடு செய்கின்றது. இத்திட்டத்திற்கு அனைத்து ஓய்வூதியத்திற்கு தகைமை பெற்றுள்ள அரசாங்க அலுவலர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து ஒரு பெயரயவான பங்களிப்பு கழிக்கப்படுகின்றது.

2021 நிதியாண்டில் திறைசேரியிடமிருந்து ரூபா 824 மில்லியன் பங்களிப்பாக கிடைக்கப்பெற்றதுடன், ரூபா 5.45 பில்லியன் அங்கத்தவர்களின் பங்களிப்பாக கிடைக்கப்பெற்றது. இந்த வருடத்தில் ரூபா 6.38 பில்லியன் மருத்துவ காப்புறுதிக் கோரிக்கைகள் வழங்கப்பட்டது.

### அட்டவணை: வருமானத்தின் வகைப்படுத்தல்

| அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்காக சேகரிக்கப்பட்ட பங்களிப்பு | 2021 இ.ரூபா | 2020 இ.ரூபா | 2019 இ.ரூபா |
|---|---|---|---|
| அங்கத்தவர்களின் பங்களிப்பு | 4,778,171,594 | 4,090,359,038 | 3,617,114,527 |
| திறைசேரியின் பங்களிப்பு | 824,000,000 | 782,000,000 | 767,970,000 |
| ஓய்வூதிய காப்புறுதித் திட்டம் | 236,438,800 | 166,837,400 | 142,321,400 |
| பகுதியளவு அரசாங்க காப்புறுதித் திட்டம் | 444,549,525 | 430,102,300 | 311,317,625 |
| | 6,283,159,919 | 5,469,298,738 | 4,838,723,552 |

### அரசாங்கத் துறையினருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டம்

அரசாங்க துறையினருக்கு 2016இல், அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்களுக்கு தகைமை பெறுவதற்கு அவர்களின் பங்களிப்பை முறையே ரூபா 600 மற்றும் ரூபா 300 ஆக அதிகரிப்பதற்கு தமது விருப்பத்தைத் தெரிவித்திருத்தல் வேண்டும். 2021ஆம் ஆண்டின் இறுதியில், அக்ரஹார அங்கத்தவர்களில் அரைவாசியானோர் அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்களின் இணைந்ததுடன், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலக்குக்கு அமைவாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் தவணைக் கட்டணத்தை அதிகரிக்க முடிந்ததுடன் வருடம் முழுவதிலும் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட நன்மைகளும் அதிகரித்தன..

### முழுமையாக அரசாங்கத்துறையினரல்லாதோருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளி

அரை அரசாங்க துறையினருக்கு 2017இல், அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் எங்களின் உச்சளவான இயலுமைக்கு பயன்பெறுனர்களை திருப்திப்படுத்துவதற்கு சிறந்த சேவையை வழங்குவதற்கு 2021இலும் அது தொடர்ப்பட்டது.

### அக்ரஹார ஓய்வூதியத் திட்டம்

அக்ரஹார ஓய்வூதியத் திட்டம் 2016 மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இந்தக் காப்புறுதி வகைக்கு கிடைத்த கேள்வி காரணமாக 2017ஆம் ஆண்டு மேலும் இது விரிவாக்கப்பட்டது. இந்த ஓய்வூதியத்திட்டமானது, 01 ஜனவரி 2016ற்குப் பின்னர் அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த ஓய்வூதியத்திட்டம் பிரயோகிகப்படும். 2021 டிசம்பரில், 23,000 ஓய்வூதியதாரர்கள் அக்ரஹார ஓய்வூதியத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெற்றனர்.

### மீள்காப்புறுதி

இலங்கையில் உள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினால் காப்புறுதி செய்யப்பட்ட தொகையில் 20% வீதத்தினை மீள்காப்புறுதியாக ஏற்றுக்கொள்வதற்காக 19 டிசம்பர் 2007ஆம் திகதி வெளியிடப்பட்ட 1528/20ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக மீள்காப்புறுதித் திணைக்களம் 2008ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது 2012ஆம் ஆண்டு வரை தொடரப்பட்டது. 2013இல் இத்தொகை 30% வீதமாக அதிகரிக்கப்பட்டு, இன்று வரை தொடரப்படுகின்றது.

2021 இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஐந்தொகையைப் பாதுகாப்பதற்காக 01 ஒகஸ்ட் 2020 இல் இருந்து 31 ஜனவரி 2022 வரையில் மீண்டும் மீண்டும் மீள்காப்புறுதியை நீடித்து அதற்குரிய அமைச்சுடன் உடன்பாட்டுக்கு வந்தது. மீள்காப்புறுதி காப்புறுதித் தொகை 7.5 பில்லியனாக வரையறுக்கப்பட்டதுடன் மிகை 1 பில்லியன் ஆவதுடன் மீள்காப்புறுதித் தளத்தில் தலைமைத்துவ மீள் காப்புறுதியாளர் எவரெஸ்ட் ரீ இன்சூரன்ஸ் கம்பனியாகும்.

பின்னடைவு காப்புறுதிக்கு மேலதிகமாக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அவர்களுடைய பொறுப்பினை 10 பில்லயன் வரை பாதுகாப்பதற்காக வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்திற்காக மீள்காப்புறுதிக் காப்பீட்டை 01 ஒகஸ்ட் 2020 வரை பெற்றுக்கொண்டதுடன், அதனை 31 ஜனவரி 2022 வரை தொடர்ந்தது.

2021இல் மீள்காப்புறுதி திணைக்களத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 3.549 பில்லியன் ஆவதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 2.920 பில்லியன் ஆகும். 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தவணைக் கட்டணம் 9.7% வீதத்தினாலும் கோரிக்கைக் கொடுப்பனவுகள் 73% வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

### வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம்

2008 மார்ச் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1542/11ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, இலங்கையில் பதிவுசெய்துள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான இடர்களை பெற்றுக்கொண்ட காப்புறுதியாளர்களுக்கு காப்பீட்டினை வழங்குவதற்கான பணி வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியத்திற்குச் சாட்டப்பட்டுள்ளது.

2021 இல், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஐந்தொகையைப் பாதுகாப்பதற்காக 01 ஒகஸ்ட் 2020 இல் இருந்து 31 ஜனவரி 2022 வரையில் மீண்டும் மீண்டும் மீள்காப்புறுதியை நீடித்து அதற்குரிய அமைச்சுடன்

# பிரிவு மீளாய்வு

உடன்பாட்டுக்கு வந்தது. மீள்காப்புறுதி காப்புறுதித் தொகை 7.5 பில்லியனாக வரையறுக்கப்பட்டதுடன் மிகை 1 பில்லியன் ஆவதுடன் மீள்காப்புறுதித் தளத்தில் தலைமைத்துவ மீள் காப்புறுதியாளர் MS/ Chaucer Syndicate 1084 கம்பனியாகும்.

2021இல் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத் திணைக்களத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 6.754 பில்லியன் ஆவதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 2 பில்லியன் ஆகும். 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தவணைக் கட்டணம் 10.6% வீதத்தினாலும் கோரிக்கைக் கொடுப்பனவுகள் 0.19% வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

### பொதுக் காப்புறுதி

ஓகஸ்ட் 20, 2009ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி எண் 1615/20 இன் விதிகளின்படி 2009 ஆம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அரச காப்புறுதிச் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. அதன்படி, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்கு சொந்தமான ஆதனங்களுக்கும் நபர்களுக்கும் காப்புறுதி காப்பீட்டினை வழங்கியது. இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, 2011ஆம் ஆண்டு 03/2011 காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஊடாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது..

### மோட்டார் காப்புறுதி

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்களுக்கு மோட்டார் காப்புறுதித் திட்டம் 2008ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைவாக, அரசாங்க சுற்றுநிருப இலக்கம் பிஎப் 427 மற்றும் அதற்கு பின்னரான பிஎப் 437ற்கு அமைவாக அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் மோட்டார் மற்றும் மோட்டர் அல்லாத காப்புறுதிகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடம் அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான காப்புறுதிக் கம்பனியிடம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் சேவைகளை தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கும் நீடித்ததுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து தனியார் வாடிக்கையாளர்களின் தவணைக் கட்டண பங்களிப்பு படிப்படியாக அதிகரித்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2017ஆம் ஆண்டு அரச சார் அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் உள்ளடங்களாக அரசாங்க அலுவலர்களுக்கு “அக்ரஹார மோட்டார்” எனும் புதிய காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன், மோட்டார் காப்புறுதிப் பிரிவு பிரதான காப்புறுதியாகவும் அமைந்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நாடு முழுவதிலுமுள்ள விபத்துக்கள் தொடர்பான தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் ஆவணத்தை சமர்ப்பித்து சில நாட்களில் கோரிக்கைகளை தீர்க்கப்படுதல் உள்ளடங்களாக பெறுமதி சேர் சேவைகளை வழங்குகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நாடு முழுவதிலும் கிளை வலையமைப்பு மூலம் அதன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. 2021ஆம் ஆண்டில் மோட்டார் காப்புறுதி மூலம் எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டணம் இ.ரூபா 175 மில்லியனாக இருந்ததுடன் 2020இல் இத்தொகை இ.ரூபா 260 மில்லியனாகும். இது 30% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. மேலும், தவணைக் கட்டணம் மட்டுமன்றி தீர்க்கப்பட்ட கோரிக்கைகளும் 2020இல் இ.ரூபா 169 மில்லியனில் இருந்து 2021இல் இ.ரூபா 147 மில்லியனாக குறைவடைந்தது. இந்த தவணைக் கட்டண வீழ்ச்சிக்கு 2019ஆம் ஆண்டில் நிதிச் சுற்றறிக்கை இல 4/2015 ஐ மாற்றியதன் மூலம் அரசாங்க காப்புறுதி வியாபாரத்தை தனியார் துறை காப்புறுதி நிறுவனங்களுக்கு திறந்துவிட்டதுடன், 2021 முழுவதிலும் காணப்பட்ட கோவிட் 19 நோய்பரவலும் காரணமாகியது.

| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 2021<br>இ.ரூபா | 2020<br>இ.ரூபா | 2019<br>இ.ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - மோட்டார் | 175,571,681 | 260,600,235 | 390,150,125 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (146,839,942) | (169,250,954) | (257,432,249) |

### மோட்டார் அல்லாதவை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மோட்டார் அல்லாத காப்புறுதிப் பிரிவு அரச மற்றும் அரச சார் நிறுவனங்களுக்கு கடல், தீ மற்றும் பொறியியல் மருத்துவ மற்றும் நானாவித வகைகளின் கீழ் காப்புறுதிப் பூட்கைகளை வழங்குகின்றது.

| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதாவை | 2021<br>இ.ரூபா | 2020<br>இ.ரூபா | 2019<br>இ.ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம | 132,482,523 | 213,469,435 | 301,979,246 |
| மொத்த நன்மைகள் மற்றும் செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | (218,546,666) | (156,059,649) | (307,223,184) |

### கிளை வலையமைப்பு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வியாபாரத்தை மேம்படுத்துவதற்கும், பொதுக் காப்புறுதி போர்ட்போலியோவை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் நடாளாவிய ரீதியில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கும் தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக நாடளாவிய கிளை வலையமைப்பு செயல்படுகின்றது. ஒவ்வொறு அலகிலும் பணிபுரியும் அலுவலர்கள் மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாத காப்புறுதி எனும் இருவகை காப்புறுதிகளையும் கையாளுகின்றனர். மேலும், அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பினர்களுக்கும் அவர்கள் சேவை வழங்குகின்றார்கள். முக்கியமாக மாவட்ட அலகுகள் மாவட்ட செயலகங்களிலும், சில பிரதேச செயலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டில், அனுராதபுரம், மாத்தறை மற்றும் கண்டி பிராந்திய அலுவலகங்களின் கீழ் 29 அலகுகள் செயல்பட்டன, மேலும் கிளை வலையமைப்பில் 60 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

2021ஆம் ஆண்டில், பொதுக் காப்புறுதி வியாபாரங்களின் கீழ் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச அளவிலான அலுவலகங்களின் ஒட்டுமொத்த செயல்திறன் கிட்டத்திட்ட ரூபா.109 மில்லியனாக இருந்தது. 2021 ஆம் ஆண்டுக்கான தவணைக் கட்டணம், 2020ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலகங்களில் இருந்து ஈட்டப்பட்ட தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில், அந்தக் காலகட்டத்தில் எதிர்கொள்ளப்பட்ட கோவிட்-19 தொற்று சவால்களின் பிரதிபலிப்பு காரணமாக குறைவாக இருந்தது

# பிரிவு மீளாய்வு

தவணைக் கட்டணத்துடன் ஒப்பிடுகையில், அந்தக் காலகட்டத்தில் எதிர்கொள்ளப்பட்ட கோவிட்-19 தொற்று சவால்களின் பிரதிபலிப்பு காரணமாக குறைவாக இருந்தது

### தகவல் தொழில்நுட்பம்/ தொழில்நுட்பம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, நாடு முழுவதிலும் காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிளவுட் கம்பூட்டிங் மற்றும் தரவு மத்தியநிலையம் போன்ற நவீன தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பெரிய அளவிலான செயல்பாடுகள் காரணமாக, கையாளப்பட வேண்டிய பெரிய அளவிலான தரவைக் கொண்டு காப்புறுதி வியாபாரத்திற்கு உதவும் வகையில் நவீன, இதற்கு பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்ட, ஒராக்கிள் அடிப்படையிலான மென்பொருள் தீர்வுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ERP முறைமை, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தொழிற்பாடுகளில் பயன்படுத்தக்கூடிய முடிவுத் தீர்வுகளை வழங்கும்.

கணக்கீடு தொடர்பான செம்மையை மேம்படுத்துவதற்கு SAGE ACCPAC இன் நவீன வேரஷன் மற்றும் நிதியியல் மென்பொருள் பக்கேஜ்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### மனிதவளம் மற்றும் நிர்வாகம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஊழியர்கள், வசதிகள், உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத்தின் அடிப்படைத் தேவைகளை திறம்படப் பூர்த்திசெய்வதற்கான ஒருங்கிணைப்பு ஆதரவை வலுப்படுத்துவதற்கு தேவையான உதவியினை மனிதவளம் மற்றும் நிர்வாகத் திணைக்களம் வழங்குகின்றது. பௌதீக உட்கட்டமைப்பு மற்றும் மனிதவளத்தின் வினைத்திறனான பயன்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 2021ஆம் ஆண்டிலும் நிறுவன இலக்குகளை அடைவதற்கு நாங்கள் பணியாற்றியுள்ளோம்.

உலகம் முழுவதையும் பாதித்த கோவிட்-19 தொற்றுநோயால் 2021ஆம் ஆண்டு சமூதாயத்திற்கு ஒரு சவாலான ஆண்டாகும். இந்த சூழ்நிலையில் சில உபாயமார்க்கங்கள் அதற்கேற்ப சீரமைக்கப்பட்டன. கல்வியறிவு பெற்ற ஊழியர்களின் திறனை சந்தையில் செழிப்பதற்கு போட்டித்திறன் கொண்டவர்களாக நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். எனவே, ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் அதேற்கேற்ற பயிற்சி நிகழ்ச்சிகள் 2021 இல் ஒன்லைன் ஊடாக நடாத்தப்பட்டது. மேலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் கோவிட்-19 நோய்ப்பரவலில் இருந்து அதன் பெறுமதியான சொத்துக்களையும் மனிதவளத்தையும் பாதுகாப்பதற்கு அதிகளவில் முதலீடு செய்தது.

இருப்பினும் நாட்டின் இந்த நிலைமையிலும் கூட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மனிதவளத் திணைக்களத்தினால் பல்வேறுபட்ட இலக்குகளை பூர்த்திசெய்வதற்கு இயலுமானது;

- நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கையேடுகளின் ஊடாக முறைமையை நெறிப்படுத்தல்.
- அனைத்து ஊழியர்களுக்கும் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை இன்னும் தெளிவாக வரையறுத்து, அவர்களை அதிக உற்பத்தித்திறனுள்ள வழியில் ஈடுபடுத்தல்.
- "சிறந்த நடைமுறைகள்" தீர்மானிக்கப்பட்டு வலையமைப்பு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல்.
- அனைத்து நிலை ஊழியர்களின் தேவைகளையும் சிறந்த முறையில் பூர்த்திசெய்யும் கட்டமைப்பை உறுதிசெய்தல்.
- அனைவருக்கும் வினைத்திறன் மற்றும் செயல்திறன் மிக்க நிரிவாக நடைமுறைகள் மற்றும் பிரயோகங்களை வழங்குதல்.
- பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு அமைவாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் அவசியமான அயிட்டங்களின் கொள்வனவு.

### துணைச் சேவைகள்

முக்கிய பணிகளைத் தவிர்த்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மனிதவளம் மற்றும் நிர்வாகம், உள்ளக கணக்காய்வு, சட்டம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் திணைக்களங்கள் போன்ற துணைச் சேவைகளும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஒட்டுமொத்த இலக்குகளை அடைய முழு ஆதரவை செயல்படுத்துகின்றன.



# ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு


நிறுவன ஆளுகை ........................................................ 20
பணிப்பாளர் சபை ........................................................ 21
கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவக் குழு ............... 23
நிறுவன இடர் முகாமைத்துவம் .......................................... 25
நிலைபேறான அறிக்கையிடல் ............................................ 27
பணிப்பாளர்களின் அறிக்கை ............................................. 28

# தொழில்முயற்சி ஆளுகை

### முன்னுரை

நிறுவன முகாமைத்துவத்துடன் நலன்விரும்பிகளின் விருப்பத்தை சமநிலைப்படுத்துவதையம் சீரமைப்பதையும் உறுதிப்படுத்தும் எங்கள் நிறுவனத்தின் கூட்டிணைந்த ஆளுகை சட்டகமானது இணக்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது ஒரு வலுவான, விரிவான மற்றும் ஒருங்கிணைந்த கட்டமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது, இது வியாபார மாதிரியின் நீண்ட கால நிலைபேற்றில் கவனம் செலுத்துகின்றது. தொழில்முயற்சி ஆளுகை என்பது, “உபாயமார்க்க பணிப்புரையை வழங்குதல், இலக்குகள் அடைவதை உறுதிசெய்தல், இடர்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்தல் மற்றும் நிறுவனத்தின் வளங்கள் பொறுப்புடன் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைச் சரிபார்த்தல் ஆகியவற்றின் குறிக்கோள்களுடன் குழு மற்றும் நிர்வாகத்தால் செயல்படுத்தப்படும் பொறுப்புகள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பு” என வரையறுக்கலாம். (தகவல் முறைமைகள் கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு, 2001). நிறுவன நிர்வாகமானது நிறுவனத்தின் முழுப் பொறுப்புக்கூறல் கட்டமைப்பை உருவாக்குகின்றது. நிறுவன நிர்வாகத்தில் இணக்கம் மற்றும் செயலாற்றுகை எனும் இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளதுடன், அவை சமநிலையில் இருக்க வேண்டும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, நல்ல கூட்டிணைந்த ஆளுகையானது நீடித்த நீண்ட கால மதிப்பை விளைவிக்கின்றது என்பதை முழுமையாக அங்கீகரித்துள்ளது, எனவே அதன் நன்கு நிறுவப்பட்ட கூட்டிணைந்த ஆளுகைக் கட்டமைப்பைத் தொடர்ந்து செம்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை நடைமுறை மற்றும் சிறந்த ஆளுகை மற்றும் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டலின் உரிய பரப்புகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு அதன் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் கொண்டு செல்லப்படுகின்ற

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபையானது கூட்டிணைந்த ஆளுகைத் தளத்தின் மையத்தில் உள்ளது, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அனைத்து உறுப்பினர்களும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், அதன் மேலான இலக்குகளை நிறைவேற்றுவதற்கு, பிரயோகிக்கக்கூடிய அனைத்து அரசாங்கத்தின் கொள்கைகள், அரசியலமைப்பு மற்றும் சட்டத் தேவைகளுக்கு ஏற்ப நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்கின்றது. 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கு அமைவாக, நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கீழ்வரும் ஏழு அங்கத்தவர்களை உள்ளடக்கிய சபையினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. சட்டத்திற்கு அமைவாக சபையின் தலைவராக நபரொருவரை நியமிப்பதற்கான அதிகாரம் அமைச்சரிடம் உள்ளது. சட்டத்திற்கு அமைவாக, அனைத்து அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவியை வகிப்பர். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தற்போதைய வணிகத்தைப் பற்றி விவாதிப்பதற்கு, அவசியமான போது கூடுகின்றது.

### நிதிக் கூற்றுகள்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுகள், இலங்கை கணக்கீட்டுத் தரங்களையும் ஏனைய சகல பிரயோகிக்கத்தக்க சட்ட ஒழுங்குவிதிகளையும் கைக்கொண்டு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் செயலாற்றுகையின் விபரமான மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பகுப்பாய்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### பெறுகை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பெறுகைகள் தேசிய பெறுகை வழிகாட்டல் மற்றும் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. பெறுகைகள் கவனத்திற் கொள்ளப்படும் பெறுமதி அடிப்படையில் அமைச்சரவை நியமித்த பெறுகைக்குழு, அமைச்சின் பெறுகைக்குழு மற்றும் திணைக்களத்தின் பெறுகைக் குழு என்பவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

### உள்ளக கட்டுப்பாடு

2021ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயல்பாடுகளை வலுப்படுத்த உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் எனும் எதிர்பார்ப்புடன் உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### வெளியகக் கணக்காய்வு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் நியதிகளுக்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளியகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டதுடன் அரச கூட்டுத்தாபனங்கள், வர்த்தகங்கள் அல்லது ஏதேனும் எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் அரசிற்கு உரித்தளிக்கப்பட்ட ஏனைய பொறுப்புகள் என்பவற்றின் கணக்குகளினையும் கணக்காய்வு நியமங்கள் செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளார். 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கணக்காய்வு நியமக் குழுவால் தீர்மானிக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமம், பிரிவு 29இல் கீழ் நிறுவப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளுக்கும் பொருந்தும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல்யாப்பின் நியதிகளுக்கிணங்க 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகளின் வருடாந்தக் கணக்காய்வை மேற்கொண்டார்.

# பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் -2020



திரு. மவாஹிப் மஂஜூட்
(தலைவர்)



திரு. பிரதீப் குமார
சபை அங்கத்தவர்



திரு. டி.பி.ஜி. பிரதீப்
சபை அங்கத்தவர்



திருமதி. டி.எல்.யு. பீரிஸ்
சபை அங்கத்தவர்



திருமதி. எச்.எம்.டி.பி. ஹேரத்
சபை அங்கத்தவர்



திரு. சந்தன குமாரசிங்க
சபை அங்கத்தவர்

### திரு. மவாஹிப் மஂஜூட் (தலைவர்)

திரு. மவாஹிப் மஂஜூட் 19.02.2020 ஆம் திகதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் MFE, கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தின் CMA பட்டங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் இவர் ACMA UK & SL, B. Com (Hons) என்பவற்றுடன் சர்வதேச உறவுகளில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளார

### திரு. பிரதீப் குமார (சபை அங்கத்தவர்)

திரு.பிரதீப் குமார சபை அங்கத்தவராக 2020 இல் நியமிக்கப்பட்டார். அவருக்கு அரச துறையில் 25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளது. அவர் நிதி அமைச்சின் வர்த்தகம் மற்றும் முதலிட்டக் கொள்கைத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக பணிபுரிகின்றார். அவரது கல்வித் திறமையானது அவுஸ்திரேலியாவின் பிளின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொதுக் கொள்கையில் முதுநிலைப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் பிளின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் பட்டப்பில் டிப்ளோமாவையும் பதிவுசெய்துள்ளது. அத்துடன் இவர் இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1ஆம் வகுப்பு வணிகமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

### திரு. டி.பி.ஜி. பிரதீப் (சபை அங்கத்தவர்)

திரு. டி.பி.ஜி. பிரதீப் 10.05.2019இல் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது நிதி அமைச்சின் பிரதான கணக்காளராக பணியாற்றுகின்றார், அத்துடன் இவருக்கு கணக்காளர் சேவையில் கிட்டத்தட்ட 20 வருட கால அனுபவம் உள்ளது. திரு பிரதீப் திசாநாயக்க களனிப் பல்கலைக்கழகத்தில் வணிகப் பட்டத்தில் முதுமானியைப் பெற்றிருப்பதுடன், நிதி அமைச்சின் மிலோடா அக்கடமியில் பொதுப் பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் லைசன்ல் பகுதி I மற்றும் பகுதி 11ஐப் பூர்த்திசெய்துள்ளார். இவர் அவுஸ்திரேலியா கம்ப்யூட்ர் ஸொசைடியிட்டியில் அசோசியேட் அங்கத்தவராக உள்ளார

**திருமதி. டி.எல்.யு. பீரிஸ் (சபை அங்கத்தவர்)**

திருமதி.டி.எல்.யு பீரிஸ் 2020 நவம்பரில் திருமதி காந்தி குணவர்தண பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டதுடன், அதிலிருந்து சபைக் கூட்டங்களுக்கு வருகை தந்தார். அவ்வருடத்தில் இவர் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சில் மேலதிக செயலாளராக (நிர்வாகம்) பணியாற்றினார். திருமதி பீரிஸ் அரச சேவையில் 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமானியைப் பெற்றிருப்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி பொருளாதாரத்தில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பெற்றுள்ளார். அத்துடன், இவர் என்ஐபிஎம் நிறுவனத்தில் ஆங்கிலத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகவியல் பட்டத்தையும் பெற்றுள்ளார். தற்போது இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுமானிக் கல்வியைத் தொடர்கின்றார

**திருமதி. எச்.எம்.டீ.பி. ஹேரத் (சபை அங்கத்தவர்)**

திரு.சந்தன குமாரசிங்க இராஜினாமா செய்ததன் பின்னர், 2021 ஏப்பிரல் மாதத்தில் திருமதி.என்.எம்.டீ.பி.ஹேரத் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார. அவர் தற்போது பொது நிர்வாக, உள்நாட்டு விவகாரங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி சபை அமைச்சின் தாபனப் பிரிவில் பணிப்பாளராக செயலாற்றுகின்றார். அத்துடன், இவருக்கு இலங்கை நிர்வாக சேவையில் 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளது.

திருமதி.ஹேரத் களனி பல்கலைக்கழகத்தில் மனித வளங்கள் தொடர்பாக முதுமானிப் பட்டத்தையும், பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார், இவர் கலைமானிப் பட்டத்தை களனி பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுமானிக் கல்வியைத் தொடர்கின்றார

**திரு. சந்தன குமாரசிங்க (சபை அங்கத்தவர்)**

திரு.சந்தன குமாரசிங்க 2015 டிசம்பரில் பணிப்பாளர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவர் 2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டு வரை மட்டுமே பணிப்பாளர் சபை அங்கத்தவரராக பணிபுரிந்ததுடன், அதன் பின்னர் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். அவர் தற்போது பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சில் பணிப்பாளர் நாயகமாக பணிபுரிவதுடன், இவருக்கு இலங்கை அரச சேவையில் 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளது.

இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், இரஜரட்ட பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளதுடன் களனிப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானியைப் பெற்றுள்ளார்.

# கூட்டிணைந்த மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**மஞ்சுல ஹெட்டியாராச்சி**
பிரதான நிறைவேற்று அலுவலர் (பதில் கடமை) 2020



**திருமதி. நிமாலி பத்திரன**
உதவிப் பொது முகாமையாளர் - காப்புறுதி



**திரு. லசந்த யு குமார**
தலைவர், மனிதவளம் மற்றும் நிர்வாகம்



**திருமதி. நிர்மலி பெரேரா**
தலைவி, கிளை மேற்பார்வை



**திருமதி. தம்மிகா வீரகோன்**
தலைவர், நிதி



**திருமதி. உபெக்ஷா ஏக்கநாயக்க**
தலைவி, பொறுப்பேற்றல்



**திரு. அனுர சமரகோன்**
தலைவர், கோரிக்கைகள்



**திருமதி. நிமேஷா சகபந்து**
தலைவி, எம்என்டிஜஎஸ், பயிர் காப்புறுதி



**திருமதி. தேஷானி நாணயக்கார**
தலைவி, மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சிசிடி நிதியம்



**திரு. டீ.ஜி. லக்ஷ்மன்**
தலைவர், மோட்டார் கோரிக்கைகள்



**திருமதி. ரந்திம மனகே**
தலைவி, பொதுக் கோரிக்கைகள்



**திரு. ரஞ்சித் குணசேகர**
தலைவர், உள்ளக கணக்காய்வு



**திரு. கவிந்ர ஜயசிங்க**
தலைவர், தகவல் தொழில்நுட்பம்



**திருமதி காயத்ரி சொய்சா**
தலைவி, ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு



**திரு. அசங்க ஜயலத்**
தலைவர், நிர்வாகம்



**திரு நாமல் காஞ்சன**
தலைவர் செலவுகள் மற்றும் வருமானம்



**திரு. சிசித சந்திரகுமார**
தலைவர், நிதி அறிக்கையிடல்



**திருமதி. லும்பினி உதயன்**
தலைவி - சட்டம்



**திருமதி கயானி சியம்பலாகொட**
தலைவரின் செயலாளர்



**திரு. எம்.என். கே. பண்டிகம**
தலைவர், மாத்தறைக் கிளை



**திரு. இந்தீர விக்ரமாராச்சி**
தலைவர், அனுராதபுரக் கிளை

# நிறுவன இடர் முகாமைத்துவம்

## முன்னுரை

தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம் என்பது சாத்தியமான இடர்களை அவை நிகழும் முன் அடையாளம் காணும் பொறுப்பாகும், இது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இடரைக் குறைப்பதற்கு அல்லது அதன் தாக்கத்தைக் குறைப்பதற்கு அல்லது குறைந்தபட்சம் அதன் தாக்கத்தை சமாளிக்கும் வகையில் நடைமுறைகளை உருவாக்குவதற்கு உதவுகின்றது. தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான சந்தர்ப்பங்களையும் அச்சுறுத்தல்களையும் அடையாளம் காணல், மதிப்பிடுதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதுடன் இடரை மையமாகக் கொண்டு முடிவெடுப்பதை செயற்படுத்துகின்றது. ஒரு வெற்றிகரமான இடர் முகாமைத்துவ முயற்சியானது நிறுவனத்தின் உள்ள இடர் நிலைக்கு ஏற்ப மற்ற நிறுவன நடவடிக்கைகளுடன் இணைந்து, அதன் நோக்கத்தில் விரிவான, வழக்கமான செயல்பாடுகளில் உட்பொதிக்கப்பட்டு, மாறும் சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பதன் மூலம் ஆற்றல்மிக்கதாக இருத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவத்தின் கவனம் குறிப்பிடத்தக்க அபாயங்களின் மதிப்பீடு மற்றும் பொருத்தமான பதில்களை செயல்படுத்துவதாகும். அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் அதிகபட்ச நிலையான மதிப்பை அடைவதே குறிக்கோளாகும்.

இது வெற்றியின் நிகழ்தகவை அதிகரிக்கின்றது மற்றும் தோல்வியின் நிகழ்தகவு மற்றும் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதில் தொடர்புடைய நிச்சயமற்ற நிலை ஆகிய இரண்டையும் குறைக்கின்றது. இடரினை பகுப்பாய்வு செய்வதின் முக்கிய பகுதியாக இடரின் தாக்கத்தின் இயல்பு, மூலம் அல்லது வகையை தீர்மானித்தல் வேண்டும். இடர் வகைப்படுத்தல் முறைமையின் பயன்படுத்துவதன் ஊடாக இடர்களை மதிப்பீடு செய்தல் மேம்படுத்தப்பட முடியும். இடர் வகைப்படுத்தல் முறைமைகள் முக்கியமானது, ஏனெனில் அதையொத்த இடர்களை சேர்த்து அடையாளம் காண்பதற்கு நிறுவனத்தினால் இயலுமாகும். இடர் வகைப்படுத்தல் முறைமை நிறுவனத்தின் எந்த உபாயமார்க்கம், தந்திரோபாயம் மற்றும் தொழிற்பாடுகள் பாதிப்படையக்கூடியவை என்பதை நிறுவனம் அடையாளம் காண உதவும். இடர் வகைப்படுத்தல் நிதியியல் கட்டுப்பாடு, தொழிற்பாட்டு வினைத்திறன் மதிப்பு வெளிப்பாடு மற்றும் வணிக நடவடிக்கைகள் தொடர்பான இடர்களின் பகுதியை அடிப்படையாக் கொண்டு இடர் வகைப்படுத்தல் முறைமைகள் வழமையாகக் காணப்படும். எனினும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொண்ட அனைத்து வகையான நிறுவனங்களினாலும் பயன்படுத்தக்கூய இடர் வகைப்படுத்தல் முறைமையொன்றில்லை.

## பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி இடர்கள்

பொதுக் காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதியுடன் தொடர்புடைய பல இடர்கள் உள்ளன. தாக்கம்/விளைவு மற்றும் நிகழ்வின் சாத்தியக்கூறு/ நம்பகத்தன்மை ஆகியவற்றின் அளவை மதிப்பிடுவதில் பின்வரும் இடர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## R01 - உபாயமார்க்க இடர்கள்

உபாயமார்க்க இடர்கள் நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் பயணிக்கும் திசை பற்றிய குழு மற்றும் உயர் முகாமைத்துவ முடிவுகளால் தீர்மானிக்கப்படுகின்றன. உபாயமார்க்க முடிவுகளை திறம்பட எடுப்பதற்கு, குழு மற்றும் முகாமைத்தவத்திற்கு வியாபாரம் எவ்வாறு செயற்படுகின்றது மற்றும் பொருளாதார, வியாபார மற்றும் தொழில்நுட்ப சூழல்களுடன் தொடர்புடைய அம்சங்களைப் பற்றிய போதுமான தகவல்கள் அவசியம். நிறுவனம் எதிர்கொள்ளும் பல்வேறு உபாயமார்க்க இடர்களை மதிப்பிடுவதற்கு, பணிப்பாளர் சபை பரந்த பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும், எனவே முகாமைத்துவ அறிக்கைகள் நிறுவனத்தில் உள்ள உயர் அதிகாரிகள் திறன்கள், அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் சமநிலையுடன் இருக்க வேண்டும் என பரிந்துரைக்கின்றது.

எனினும், பணிப்பாளர் சபையும், முகாமைத்துவமும் உபாயமார்க்க முடிவெடுப்பதற்கான நடைமுறைகள் தொடர்பான கூட்டிணைந்த ஆளுகையின் சிறந்த நடைமுறையைப் பின்பற்றினாலும், அதிகாரிகள் சரியான முடிவுகளை எடுப்பதை இது உறுதிப்படுத்தாது. இவை நீண்ட காலத்தில் தொடர்வதற்காக இருந்த போதிலும், நிறுவனங்களை விரிவாக்கம் செய்வதற்கும் (நிட்சயமாக) காணப்படும் இடர்களாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை சபை குறுகிய கால உபாயமார்க்க இடர்களை ஏற்றுக்கொள்ளக்கூடும், ஆனால் நீண்டகாலத்தில் இந்த இடர்களை குறைப்பதற்கு அல்லது இல்லாது ஒழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இறுதியில், சில இடர்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும், மற்றும் சில வியாபார வாய்ப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது, ஏனெனில் சாத்தியமான தாக்கங்கள் மிக அதிகமாக இருக்கலாம் அல்லது வெற்றிக்கான நிகழ்தகவு மிகவும் குறைவாக இருக்கலாம், அதனால் வழங்கப்படும் வருமானம் இடரை எடுத்துக்கொள்வதற்கு போதுமானதாக இல்லை என்பதனால் இம் முடிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## R02 -தொழிற்பாட்டு இடர்கள்

பணிப்பாளர் சபை தாங்கள் முடிவெடுப்பதில் உபாயமாரக்க இடரை இணைக்க வேண்டும் என்றாலும், அவர்கள் உயர் மட்டத்தில் அதிக கவனம் செலுத்தி நிறுவனத்தின் கீழ் மட்டத்தில் என்ன நடக்கின்றது என்பதை புறக்கணிக்கும் ஆபத்து உள்ளது. இயந்திர செயலிழப்பால் உற்பத்தி தடைப்பட்டால், பிரதான ஊழியர்கள், திருப்தியின்மை காரணமாக வெளியேறுவதுடன் மோசமான சேவை வழங்கல் காரணமாக விற்பனையும் வீழ்ச்சியடையும், அனைத்து அற்புதமான புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னர் பிரதானமான பிரச்சினை வியாபாரத்தை முடிவுக்கு கொண்டுவரும். இவை அனைத்தும் தொழிற்பாட்டு இடர்கள் - இடர்கள் நிறுவனத்தின் உள்ளக வளங்கள், முறைமைகள், செயன்முறைகள் மற்றும் ஊழியர்களுடன் தொடர்புபட்டவையாகும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை இடர்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்பட்ட இடர்களின் வெளிப்பாடுகளை கண்காணிக்க பல்வேறு குழுக்களை நியமித்துள்ளது. குழுக்கள் ஒட்டுமொத்தமாக, முழு நிறுவனத்திலும் உள்ள தொழிற்பாட்டு இடர்களை மதிப்பீடு செய்து, அந்த இடர்கள் மிகவும் முக்கியத்துவம் உள்ளவை மற்றும் அவற்றை எதிர்கொள்ள என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். இதில் கட்டுப்பாட்டு முறைமைகளுக்கான முன்னுரிமைகளை அமைப்பது மற்றும் கணக்காய்வுப் பணி இந்த இடர்களை உள்ளடக்கும் என்பதை உறுதிப்படுத்த உள்ளக கணக்காய்வுடன் தொடர்பு கொள்ளல் என்பவை அடங்கும்.

வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஏனைய திணைக்களங்களின் உள்ளக கணக்காய்வு செயல்பாடு, தவணைக் கட்டண சேகரிப்பு மற்றும் கோரிக்கைகளைச் செலுத்துவதில் உள்ள பிழைகள் மற்றும் முரண்பாடுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், பிழைகள் மற்றும் முரண்பாடுகளைக் குறைக்கும் வகையில் அலுவலக செயல்பாடுகள் கணணிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், வரிசை முகாமையாளர்களின் முக்கிய பொறுப்பாக, அவர்களின் பொறுப்பில் இருக்கும் பகுதியில் இருக்கும் தொழில்பாட்டு இடர்களை நிர்வகித்தல் அமைந்துள்ளது. அத்துடன், குறிப்பிட்ட இடர்களை திறம்பட கையாளுவதை உறுதிசெய்தல் வேண்டும். முகாமையாளர்கள் அவர்களின் உள்ளக பணிச்சூழலில் அக்கறை கொண்டவர்களாக இருப்பதுடன் இடர்களை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளை கையாளக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

# நிறுவன இடர் முகாமைத்துவம்

### R03 - சந்தை இடர்

சந்தை இடர் என்பது பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளை நிறுத்துதல் அல்லது குறைத்தல் போன்ற இடர்களைக் குறிக்கின்றது. மீள்காப்புறுதி, பயிர்க் காப்புறுதி, பொதுக் காப்புறுதி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி, மோட்டார் காப்புறுதி, அக்ரஹார காப்புறுதி போன்ற பல உபாயமார்க்க வியாபார பிரிவுகளில் பல்வகைப்படுத்துவதன் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இடர் குறைக்கப்பட்டுள்ளது.

### R04 – திரவநிலை இடர்

திரவநிலை இடர் என்பது தற்போதைய சூழ்நிலையிலோ அல்லது அழுத்த சூழ்நிலைகளிலோ பணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுான காசு வளங்கள் போதுமானமாக இல்லாத சந்தர்ப்பம் ஆகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சூழ்நிலையில், திரவநிலை இடர் என்பது நிதி அமைச்சினால் கோரப்படும் போது மேற்கொள்ப்படும் நிதி மாற்றல்கள் , உரிமைக் கோரல் கொடுப்பனவுகள், மீள்காப்புறுதிக் கொடுப்பனவுகள் போன்ற ஒப்பந்தத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய இயலாமையாகும். இந்த வகை இடரானது, ரிப்போக்கள், திறைசேரி உண்டியல்களின் வேறுபட்ட முதிர்வுகள், திறைசேரி பிணையங்களின் வேறுபட்ட முதிர்வுகள் மற்றும் தொகுதிக் கடன்கள் போன்ற வேறுபட்ட முதிர்வுகளைக் கொண்ட பல்வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் மூலம் அகற்றப்படுகின்றது. நிதியியல் நிலைபேறு மற்றும் மேற்பார்வை நோக்கங்களுக்காக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் திரவநிலை இடர்களை எதிர்கொள்ளும் பல்வேறு வகையான திரவநிலை இடர்களை பகுப்பாய்வு செய்வது முக்கியமாகும். காப்புறுதிக் கம்பனிகளின் உள்ளகத் தரவுகளை மதிப்பிடுவதன் ஊடாக திரவநிலை இடத்தினைக் கணிப்பீடு செய்ய முடியும்.

### R05 – சர்வதேச இடர்

சர்வதேச அரசியல் மற்றும் சமூக பொருளாதார மாற்றங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் கண்காணிக்கப்படுகின்றது, இது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வியாபாரத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி தொடர்பான சர்வதேச வியாபாரப் போக்குகளைக் குறிப்பாகக் கணகாணிப்பதன் ஊடாக இந்த இடர் நிர்வாகிக்கப்படுகின்றது.

### R06 – நற்பெயர் இடர்

ஒரு நிகழ்வு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நற்பெயரில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இயல்பான செயல்பாட்டின் திறனை பாதிக்கக்கூடிய ஒரு குறிப்பிடப்பட்ட இடர்களுக்கு நீங்கள் வெளிப்படுத்தும் அளவீடுதான நற்பெயர் இடர் ஆகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், அதன் பெயரைச் சுற்றியுள்ள சந்தை நற்பெயரை நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கின்றது, அதனால் வாடிக்கையாளர், நலன்விரும்பி மற்றும் பொது மக்கள் கருத்தினை தீவிரமாக கருத்தில் கொள்வதுடன், அதனைக் கவனத்திலும் கொள்கின்றது. கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் முறையாகப் பின்பற்றுவதை உறுதிசெய்ய வலுவான கட்டுப்பாடு மற்றும் இணக்க வழிமுறைகளுடன், அனைத்து முயற்சிகளும் நல்ல நிறுவன மதிப்புகளுடன் நேர்மறையான பணிக் கலாச்சாரத்தை உருவாக்கி வலுப்படுத்துவதை நோக்கி இயக்கப்படுகின்றன. தரப்படுத்தல், தொழில்நுட்பம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் நற்பெயருக்கு சேதத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளின் சாத்தியக்கூறு மற்றும் தீவிரத்தைக் குறைக்கின்றது. தரமான சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதில் கவனம் செலுத்துவதன் மூலம், தீங்கு விளைவிக்கும் தவறு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. மேலும், எல்லா சூழ்நிலைகளிலும், நேர்மறையான தகவல்தொடர்புகளை தொடர்ந்து அனுப்புவது முக்கியம். காலப்போக்கில் இது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நற்பெயரை பொது மக்களின் மனதில் வளர்க்கும், எதிர்கால சேதங்களின் தாக்கத்தைக் குறைக்கும்.

### R07– மோசடி இடர்

மோசடி ஆபத்து என்பது நிறுவனத்திற்கு உள் அல்லது வெளிப்புற நபர்களின் மோசடி நடவடிக்கைகளின் விளைவாக எதிர்பாராத நிதி, பொருள் அல்லது நற்பெயர் இழப்பு ஏற்படும் அபாயம் ஆகும். தொழில்சார் பயிற்சி என்பது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்குள் மோசடி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதிலும் செயல்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருக்கக்கூடிய தகவல் மற்றும் அமைப்புகளின் பகுப்பாய்வு என்பன அடங்கும். மேலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பயனுள்ள உள் காட்டுப்பாட்டு முறைமை மற்றும் கணக்கீட்டு முறைமையை நிறுவியுள்ளது. இது பயனுள்ள உள் கணக்காய்வு செயல்பாட்டைக் கொண்டுள்ளது, இது நிறுவனத்திற்குள் உள்ள அனைத்து உள்ளக கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து மீளாய்வு செய்து மோசடி நடவடிக்கைகளின் இடரைத் தடுக்கின்றது.

### R08 – வெளிநாட்டு நாணயமாற்று இடர்

அந்நியச் செலாவணி இடர் என்பது ஒரு வியாபாரத்தின் நிதி செயல்திறன் அல்லது நிதி நிலை நாணயங்களுக்கு இடையிலான மாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களினால் பாதிக்கப்படும் அபாயமாகும். வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல் இடரை ஒழிக்கும் பொருட்டு, மீள் காப்புறுதி உடன்படிக்கைகள் மீள்காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவிற்கான உள்நாட்டு நாணயப் பெறுமதியில் ஒப்பந்தமிடப்பட்டுள்ளன.

### R09 – மீள்காப்புறுதி இடர்

மீள்காப்புறுதி இடர் என்பது சரணடையும் நிறுவனத்தின் இயலாமை அல்லது பிரதான காப்புறுதியாளர் ஒரு மீள்காப்புறுதியாளரிடமிருந்து சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான செலவில் காப்புறுதியைப் பெறுவதற்கு இயலாமையைக் குறிக்கின்றது. சாதகமற்ற சந்தை நிலைமைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் இயலாமை ஏற்படக்கூடும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2018இல், உயர் நிதித்தரம் மற்றும் உயர் சர்வதேசத் தரம் என்பவற்றைக் கொண்ட மீள் காப்புறுதியாளர்களுடன் அதன் மீள் காப்புறுதி விடயத்தை உள்ளடக்குதற்கான நியாயமான செலவைக் கொண்ட மீள்காப்புறுதித்திட்டத்தைப் பெற்றுக்கொண்டது. 2020இல் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம், பின்னடைவு நிகழ்ச்சித்திட்டம், என்பனவற்றுக்கும் மீள்காப்புறுதிக் காப்பீடுகள் பெறப்பட்டது.

### R10 – தகவல் தொழில்நுட்ப இடர்

தகவல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்ப இடர் என்பது ஒரு வியாபாரத்தின் தரவுகள், முக்கியமான முறைமைகள் மற்றும் வியாபாரச் செயன்முறைக்கு ஏற்படும் ஏதேனும் அச்சுறுத்தலாகும். இது ஒரு நிறுவனத்திற்குள் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, உரிமை, செயல்பாடு, ஈடுபாடு, செல்வாக்கு மற்றும் தத்தெடுப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய இடராகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் தகவல் தொழில்நுட்பமானது இறுதிக் காப்புறுதி மற்றும் பின் இறுதி ERP தீர்வுகள் மற்றும் காப்புறுதி, மீள்காப்புறுதி, நிதி மற்றும் நிர்வாகத்திற்கான ஆதரவு தீர்வுகளைப் பயன்படுத்தியுள்ளது. 2007ஆம் ஆண்டிலிருந்து எப்போதும் தேவைப்படும் வியாபாரக: கேள்வியைப் பூர்த்திசெய்ய சேவைகளை வழங்குவதன் மூலம் துல்லியமான மற்றும் தற்போதைய தகவல்களுடன் எங்கள் வாடிக்கையாளர் மற்றும் கட்டுபாட்டாளர் ஆகியோருக்கு ஆதரவு அளிக்கின்றது. தகவல் பாதுகாப்பு, பணிநீக்கம் மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவை உள்கட்டமைப்பு மற்றும் தரவுத்தள அம்பங்களினால் அடையப்படுகின்றது.

### R11 – உரிமைக் கோரிக்கைத் தீர்வு இடர்

மோசடி, சட்ட, தொழில்நுட்ப காரணிகளால் எழும் பிணக்கு, உரிமைக் கோரிக்கைச் செயன்முறையை பிரிப்பதிலும் உரிமைக் கோரிக்கையை அங்கீகரிப்பதிலும் ஒழுங்கு விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

# நிலைபேறான அறிக்கையிடல்

நிலைபேறான அறிக்கையிடல் என்பது சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை(ESG) இலக்குகளை வெளிப்படுத்துதல் மற்றும் தொடர்புகொள்வதுடன் அவற்றை நோக்கிய ஒரு நிறுவனத்தின் முன்னேற்றமும் ஆகும். நிலைபேற்றின் நன்மைகளை அறிக்கையிடலில் மேம்படுத்தப்பட்ட கூட்டியணைந்த நற்பெயர், வாடிக்கையாளரின் நம்பிக்கையை கட்டியெழுப்பல், அதிகரிக்கப்பட்ட புத்தாக்கம் மற்றும் சமமான இடர் முகாமைத்துவத்தின் மேம்படுத்தல் என்வற்றை உள்ளடக்கியிருக்கும்.

நிலைபேறான அறிக்கையிடல், முற்றிலும் நிதி வெளிப்பாட்டிற்கு அப்பால், செயல்திறன் குறித்த கூட்டிணைந்த அறிக்கையிடலுக்கான முழுமையான அணுகுமுறையின் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் உள் நிர்வாகத்தை மேம்படுத்தலாம், ஏனெனில் வியாபார முடிவுகள் எடுக்கப்படும் அடிப்படையை நீங்கள் விரிவாக்கலாம். கூட்டிணைந்த நிகழ்ச்சி நிரலில் நிலைபேறு உறுதியாக தங்கியுள்ளதுடன் பல வியாபார சவால்களைப் போலவே நடவடிக்கைகளை எடுப்பதென்பது கடினமாகவே உள்ளது. நிலைபேற்ற முன்முயற்சிகள் பெரும்பாலும் உறுதியான, குறுகிய கால ஈட்டுகைகளை நீண்ட கால பலன்களுடன் இணைத்து புதிய மூலத்திலிருந்தான வருமானத்தை உருவாக்கி வர்த்தக நாமம் மற்றும் நற்பெயர் போன்ற அருவமான சொத்துக்களை மேம்படுத்துகின்றன.

நிலைபேறு மற்றும் அது உருவாக்கும் மதிப்பு அளவிடப்பட வேண்டும். அத்துடன், நிலைபேறுக்கான வழக்கு உருவாக்கப்பட வேண்டும் மற்றும் நன்மைகள் உணரப்பட வேண்டும் என்றால் வணிக செயல்திறனுடன் இணைக்கப்பட் வேண்டும்.

எனவே, சுருக்கமாக, நிலைபேற்று அறிக்கையிடல் எந்தவொரு நிறுவனத்திற்கும் நான்கு முக்கிய நன்மைகளைக் கொண்டிருக்கும்:

- இது பயனுள்ள இடர் முகாமைத்துவக் கருவி
- இது சேமிப்பை உருவாக்க உதவும்
- இது சிறந்த தீர்மானம் எடுத்தலுக்கு உதவும்
- இது நலன்விரும்பிகள் நம்பிக்கையை அதிகரிக்க உதவும

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொருளாதார செழிப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தரம் ஆகிய மூன்று நிலைகளின் புதிய செயல்திறன் பரிமாணங்களை அடைவதன் மூலம் அதன் வியாபார செயலாற்றுகைகளை மேம்படுத்த முயற்சிக்கின்றது, அத்துடன் ஒரு “நல்ல பொறுப்புள்ள கூட்டிணைந்த குடிமகன்” போல் இருக்க பாடுபடுகின்றது. நிலைபேற்று அறிக்கையிடல் மற்றும் இடர் முகாமைத்துவம் எனும் இரண்டும் உண்மையில் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என வாதிட்டனர். இடரையும் நிலைபேற்றையும் ஒன்றாகக் கருத்தில் கொள்வது குறிப்படத்தக்கது, நிலைபேறு என்பது பெரிய உபாயமார்க்க அடிப்படையில், வியாபார நெகிழ்வை உணர்ந்து, வெளிப்படைத்தன்மை மற்றும் கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகும். நிலைபேறானது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் எதிர்கால தொழிற்பாட்டு சூழலையும், அதன் நிறுவன எண்ணக்கருவையும் வடிவமைக்கின்றது, அதே நேரத்தில் வியாபாரத்தில் நெகிழ்ச்சி மற்றம் வினைத்திறனை கொண்டு வருகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது, அரசாங்கத்திற்கு 2020 மற்றும் 2021இல் முறையே இ.ரூபா 0.782 மில்லியன் மற்றும் இ.ரூபா 1,824 மில்லியனாக திரட்டிய நிதியத்திற்கு தனது பங்களிப்பை அதிகரித்ததுடன், கீழ் உள்ள அடட்டவணை கடந்த கால பங்களிப்பைக் காட்டுகின்றது.

**அட்டவணை: திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்புகள்**

| வருடம் | தொகை ரூ. |
|---|---|
| 2021 | 1,824,000,000 |
| 2020 | 782,000,000 |
| 2019 | 3,267,970,000 |
| 2018 | 2,750,000,000 |
| 2017 | 1,500,000,000 |
| 2016 | 3,200,000,000 |
| 2015 | 3,000,000,000 |
| 2014 | 4,000,000,000 |
| 2013 | 3,200,000,000 |

திரவத்தன்மை மற்றும் கடன் இடரைக் குறைப்பதன் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காகவும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிரதிவிம்பத்தை மேம்படுத்தி, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தொடர்ச்சியாக பிட்ச் தரப்படுத்தலில் ‘A’யாக இற்றைப்படுத்தப்படுகின்றது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

## 1. முன்னுரை

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் 7 உறுப்பினர்களைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது

(அ) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சிலுள்ள அலுவலர் ஒருவர்

(ஆ) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் பிரதம கணக்காளர்

(இ) சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

(ஈ) அரச நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர்

(உ) நிதி வங்கியியல், காப்புறுதி முகாமைத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தகைமையுடைய அல்லது நிபுணத்துவமுடையவர்களிலிருந்து அமைச்சரால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் மூவர்,

நிபுணத்துவமுடையவர்களிலிருந்து அமைச்சரால் பெயர் குறிப்பீடு செய்யப்படும் மூவர்,

அமைச்சர் இவர்களில் ஒருவரை தலைவராக நியமிக்கும் தகைமையுடையவராவார். இச்சட்ட நியதிகளின் கீழ், சபையின் சகல உறுப்பினர்களும் நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் மற்றும் அனைத்து தொடர்புடைய சட்டரீதியான தேவைகளுக்கு இணங்க அந்த நிதிக்கூற்றுகள் பற்றிய சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கையுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கையை பங்குதாரர்களுக்கு வழங்குவதில் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்த அறிக்கை, 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம், 2000 ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் 1995ஆம் ஆண்டு 15ஆம் ஆண்டு கணக்கியல் நியமங்கள் சட்டம் மற்றும் அதில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றுக்கு இணங்கும் வகையிலும் கூட்டிணைந்த ஆளுகையின் சிறந்த நடைமுறைக்கு அமைவாகவும் தேவையான தகவல்களை வழங்குகின்றது.

2021 காலப்பகுதியில் 4 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் கூட்டத்திற்கு சிறந்த வரவுப் பதிவுகள் பேணப்பட்டிருந்தன.

அங்கீரிக்கப்பட்ட வியாபாரத் திட்டத்தின் அடிப்படையிலும் நிறுவனம் பெற்றுக்கொண்ட நிதி, பௌதீக இலக்குகளின் அடிப்படையிலும் சரியான முறையில் வியாபாரம் நடத்தப்படுகிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு நிறுவனத்தின் பங்குதாரர்களிற்கு சபை பொறுப்புக் கூறத்தக்கதாக உள்ளது.

## 2. வியாபாரத்தை மீளாய்வு செய்தல்

### 2.1 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் கூட்டிணைந்த நடத்தை

நிதியத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பன வருடாந்த அறிக்கையின் 6ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதியத்தின் வியாபார நடவடிக்கைகள் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்கு உயர் மட்டத்தில் நெறிமுறையின் தரங்கள் பேணப்படுவதுடன், நபர்கள் அல்லது நபர்களின் குழுவிற்கு காப்புறுதி வழங்கும் போது, அவர்கள் அவ்வப்போது அமைச்சரரின் கட்டளைப்படி அடையாளம் காணப்படலாம், இது வியாபார நடத்தையின் உயர் தரநிலைகள் மற்றும் செயல்பாட்டில் நெறிமுறைகளில் நமது உறுதிப்பாட்டை பிரதிபலிக்கின்றது.

### 2.2 முதன்மை நடவடிக்கைகள்

2021 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முதன்மைச் செயற்பாடுகளாவன, அரச அலுவலர்களிற்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் (அக்ரஹார), கட்டாய மீள் காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகன காப்புறுதித் திட்டம் , மோட்டார் அல்லாத காப்புறுதித் திட்டம், பகிஸ்கரிப்பு, சிவில் கலகம், வன்முறை மற்றும் பயங்கரவாத நிதிய முகாமை என்பவற்றை அமுல்படுத்துதலாகும்.

### 2.3 நிதிப் பெறுபேறுகள்

கம்பனியின் நிதிக்கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம், 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் வகுத்துள்ள இலங்கை கணக்கியல் தரநிலைகள் LKAS/SLFRS ஆகியவற்றுக்கு இணங்கவும் காப்புறுதித்துறையின் விதிமுறைகளுக்கு இணங்கவும் மற்றும் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைகளுடன் இணங்கும் வகையிலும் தயாரிக்கப்படுகின்றன.

2021 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முழுமொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 1.630 மில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2020ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான இ.ரூபா 9.818 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டணத்தில் ஏற்றபட்ட அதிகரிப்பு காரணமாக எல்லை அதிகரிக்கு காணப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இ.ரூபா 4,944 மில்லியனை வரிக்கு பின்னரான இலாபமாக உழைத்துக்கொண்டது.

### 2.4 கணக்காய்வாளர்கள்

சபையின் 2021ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றானது, 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்ட நியதிகளின் கீழ் கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

#### கூட்டிணைந்த ஆளுகை

இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த நடைமுறைக்கான கூட்டிணைந்த ஆளுகைக் குறியீடு மற்றும் நல்லாட்சி மற்றும் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைக்கான பொது நிறுவன வழிகாட்டல்களுடன் தொடர்புடைய பகுதிகளுக்கு உரிய கவனம் செலுத்தப்பட்டு கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மவாஹிப் மஃஜூட்**
தலைவர்

**லும்பினி உத்பலா**
சபைக்கான செயலாளர்

கொழும்பு
31.08.2022



# நிதியியல் அறிக்கைகள்


கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........................................ 30

விரிவான வருமானக் கூற்று ........................................ 39

நிதி நிலைமைக் கூற்று ........................................ 40

உரிமைப்பங்கு மாற்றக்கூற்று ........................................ 41

காசுப்பாய்ச்சல் கூற்று ........................................ 44

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் ........................................ 45

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. INF/A/05/NITF/AR/2021 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date மார்ச்சு 2023

தலைவர்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபை 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

(a.) பின்வரும் காரணங்களால் பலவீனமான கட்டுப்பாட்டு சூழல் அவதானிக்கப்பட்டது.

- நான்கு (04) முக்கிய முகாமைத்துவப் பதவிகளில் இருந்து மூன்று (03) பதவிகள் வெற்றிடமாக உள்ளன. தலைமைச் செயல் அதிகாரி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - நிதி ஆகிய வெற்றிடங்கள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. உதவி பொது முகாமையாளர் - செயல்பாடு, பதவியானது பணிநிலை விபரம் அங்கிகரிக்கப்பட்ட திகதியான 01 நவம்பர் 2016 முதல் வெற்றிடமாகவே உள்ளது. மேலும் ஏழு (07) முகாமைத்துவப் பதவிகளில் ஐந்து (05) பதவிகள் வெற்றிடமாக இருந்தன மற்றும் மூன்று (03) முகாமைத்துவப் பதவிகள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. எனவே வலுவான உள்ளக கட்டுப்பாட்டு அபிவிருத்தியின் சாத்தியக்கூறுகள், உள்கட்டுப்பாட்டு முறையை திறம்பட கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் ஆகியவை குறைவாகவே உள்ளன.

- அந்த செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான திறன்களைக் கொண்ட பொறுப்புள்ள பிரிவுகள் மற்றும் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடு மற்றும் முதலீட்டுச் செயற்பாடு ஆகிய செயற்பாடுகள் பயனுறுதி மிக்க வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே, இடர்களை சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் அந்த அபாயங்களை குறைப்பதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல்இ உண்மையான மதிப்பீடுகளைச் செய்வதற்கான துல்லியமான தகவல்களை வழங்குதல் ஆகியவை பயனுள்ளதாக இருந்திருக்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

- பெப்ரவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரை (20 மாதங்கள்) உள்ளகக் கணக்காய்வு செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு குழு நடத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, வழக்கமான அடிப்படையில் உள் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்து பலப்படுத்தவும், நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கான நிதி அறிக்கைகள் தயாரிப்பு செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அக்ரஹாரா இன்சூரன்ஸ் திட்டத்தில் ஊழியர் ஒருவர் செய்த மோசடி தற்செயலாக அக்டோபர் 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடி 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்டுள்ளது மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையின் படி கண்டுபிடிக்கப்பட்ட நிதி இழப்பு ரூபா. 5,136,000 ஆகும். முறையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புடனான உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் என்பவை பற்றாக்குறையான காரணத்தால் இது நடந்தது. மேலும் நிதிக்கான கட்டுப்பாட்டுச் சூழலின் உறுதியான முறைமை இல்லை என்பதை இது காட்டுகிறது. மேலும், இது தொடர்பான தற்போதைய நிலை கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(b) உரிமைக்கோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது முதல் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பது வரையான அக்ரஹாரா உரிமைக்கோரல்களை கையாள்வதற்கான ஒருங்கிணைந்த முறைமை நிதியத்திற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. எனவே, உரிமைகோரல் விண்ணப்பங்கள் பொறுப்பற்ற முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், உரிமைகோரல் தகவல் இழப்பு மற்றும் உரிமைகோரல் செயலாக்கத்தில் தேவையற்ற தாமதம் ஆகியவை அவதானிக்கப்பட்டிருந்தன.

(c.) வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியம் (SRCC & Tr Fund) ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் மூல ஆவணங்களைப் பயன்படுத்தி எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஆண்டின் இறுதியில் எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கையேட்டு பேரேட்டிற்கு புதுப்பிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் SAGE கணக்கியல் முறைமையில் இந்த வசதி வழங்கப்பட்டிருந்தாலும்இ வேலைநிறுத்தம் கலவரம் சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் (SRCC & Tr Fund) நிதி அறிக்கை செயல்முறைக்கு நிகழ்நேர அடிப்படையில் அந்த வசதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, இரு அமைப்புகளிற்கு இடையேயும் ஒரே தரவு செயலாக்கத்தின் போது நகல் வேலைகள் மற்றும் தரவு நகல்களின் அதிக ஆபத்து மற்றும் வழுக்கள் ஏற்படலாம். மேலும், ஒருங்கிணைப்புகளின் போது கையாளுதலின் அதிக சாத்தியக்கூறு இருப்பதாக தோன்றுகிறது.

(d.) அக்ரஹாரா சாதாரண, வெள்ளி மற்றும் தங்கத் திட்டங்களுக்கான நிதிநிலை அறிக்கைகளில், அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு ஒரு வருமானப் உருப்படியாக இனங்காணப்பட்டிருந்தது. முறையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளம் இல்லாததால் ஒவ்வொரு அக்ரஹாரா காப்புறுதித் திட்டங்களிற்கும் அளிக்கப்பட்ட பங்களிப்புகளிற்கான தகவல்களைப் பெறுவதும் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தாலும் ஒவ்வொரு காப்புறுதி பத்திர உரிமையாளராலும் நிதியத்திற்கு வழங்கிய மாதாந்த பங்களிப்புக்களின் விரிவான பதிவைப் பெறுவதும் கடினமாகும்.

(e.) மீள்காப்புறுதி நிலுவையில் உள்ள கோரிக்கைகளில் நிதித் தகவல் ரூபா 2,623,829,593 மற்றும் செலுத்தப்பட்ட மீள்காப்புறுதிக் கோரிக்கைகள் நஓஉநட தாள்களில் கைமுறையாக பராமரிக்கப்பட்டன. எனவே மீள்காப்புறுதி பிரிவில் பரிவர்த்தனைகளை கையாள்வதற்கும் பதிவுகளை வைத்திருப்பதற்கும் முறையான அமைப்பு இல்லை என்பது கவனிக்கப்படுகின்றது. எனவே, மீள்காப்புறுதி பிரிவில் நிதித் தகவல் அறிக்கையிடலில் உள்ள பலவீனங்கள் காரணமாக தரவு ஒருமைப்பாட்டின் அதிக ஆபத்து உள்ளது. மேலும், மீள்காப்புறுதி உரிமைக்கோரல்களை சேகரிப்பதற்கான சரியான நேரத்தில் நடவடிக்கைகள் மற்றும் அந்தத் தகவலின் துல்லியம் கேள்விக்குரியது.

(f.) ஒரு ஊழியர் கடன் பதிவேடு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒரு ஊழியர் கடன் பதிவேடு எக்செல் கோப்பு வடிவமாக தயாரிக்கப்பட்டிருந்தது, இது அங்கீகரிக்கப்படாத மாற்றங்களின் சாத்தியக்கூறுகள், வரலாற்றில் உள்ள தகவல்களின் நீக்கம் மற்றும் பதிப்பித்தல் போன்ற பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் தகவலின் வரலாற்றின் துல்லியத்தை சரிபார்க்க இயலாமை போன்ற காரணங்களால் குறைந்த அளவிலான தரவு ஒருமைப்பாட்டிலிருந்து ஏற்றுக்கொள்ளவும் நம்பவும் முடியாது உள்ளது. நிதி அறிக்கைகளின் படி 31 டிசம்பர் 2021 இல் ஊழியர்களின் மொத்தக் கடன்கள் ரூபா 47,326,145 ஆகும்.

(f.) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் (SOEs) வழிகாட்டுதல்கள் 2.3 இன் படி, அனைத்து SOE களும் அவற்றின் சொந்த அமைப்புகள், செயல்முறைகள் மற்றும் நெறிமுறைகளை அனைத்து முக்கிய செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கையேடுகளில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும், அவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்புக் கொள்கை நிதியத்திற்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே, IT பாதுகாப்புக் கொள்கை, பதிவுகள் முகாமைத்துவக் கொள்கை, வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவம் மற்றும் பேரிடர் மீட்புத் திட்டம், மீறல் பதில் திட்டம் மற்றும் தனியுரிமைக் கொள்கை ஆகியவை நிதியத்திற்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே, இது செல்லுபடியாகும் தன்மை, முழுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவு மற்றும் செயலாக்கப்பட்ட தகவல்களின் கிடைப்பனவுத் தன்மையை பாதிக்கும்.

### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(a.) SLFRS 07 - நிதிக் கருவிகள்: வெளிப்படுத்தல்கள்

(i) நியமத்தின் பந்தி 33(a) இன் படி, இடருக்கான வெளிப்பாடுகள் மற்றும் மீள்காப்புறுதி பெறவேண்டியவைகள், மோட்டார் பிரீமியம் பெறவேண்டியவைகள் மற்றும் மோட்டார் அல்லாத பெறவேண்டியவைகள் தொடர்பாக அவை எவ்வாறு எழுகின்றன என்பது குறித்து நிறுவனம் தேவையான வெளிப்படுத்தல்களைச் செய்திருக்கவில்லை.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

(ii) நியமத்தின் பந்தி 33(b) இன் படி, நிறுவனம் இடரினை நிர்வகிப்பதற்கான அதன் நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் மீள்காப்புறுதி பெறவேண்டியவைகள், மோட்டார் பிரீமியம் பெறவேண்டியவைகள் மற்றும் மோட்டார் அல்லாத பெறவேண்டியவைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடரினை அளவிடப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து போதுமான வெளிப்பாடுகளை வழங்கியிருக்கவில்லை.

(b.) LKAS 08 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள்

நியமத்தின் 42 வது பந்தியின் படி, ஒரு நிறுவனம் அதன் கண்டுபிடிப்புக்குப் பிறகு வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் முதல் தொகுப்பில் முந்தைய காலப் பொருண்மையான பிழைகளை பின்னோக்கிச் சரி செய்யும். தேசிய இயற்கைப் பேரிடர் காப்புறுதித் திட்டத்தின் (NNDIS) 26 மே 2018 முதல் 31 யூலை 2018 வரையிலான காலப்பகுதி சீராக்கத் தவணை ரூபா. 123,387,679 மற்றும் 15 மார்ச் 2018 முதல் 15 செப்டம்பர் 2019 வரையிலான காலப்பகுதிக்கான நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடருக்கான (Retrocession) மீள் காப்புறுதி சீராக்க தவணை ரூபா. 466,292,684 ஆகிய தொகைகளானது மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டுக்கு இனங்காணப்பட்டிருந்தது. எனவே, நியமத்தின் விதிகளின் படி இந்த பிழை சரி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஆண்டுக்கான இலாபம் ரூபா.589,680,363 ஆல் குறைத்துக்கூறப்பட்டிருந்தது.

(c.) LKAS 12 - வருமான வரி

ஒத்திவைக்கப்பட்ட வரியை இனங்காண்பது மற்றும் அளவிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதியமானது ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து ரூபா. 4,081,840 தொகையினை 31 டிசம்பர் 2021 இல் இனங்கண்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

(a.) SLFRS 4 இன் பந்தி 36 மற்றும் 37(a) இன் படி - காப்புறுதி ஒப்பந்தங்கள், காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து எழும் அதன் நிதி அறிக்கைகளில் உள்ள தொகைகளை அடையாளம் கண்டு விளக்கும் தகவலை காப்புறுதியாளர் வெளியிடுவார். எவ்வாறாயினும், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான மீள்காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தை இனங்காண்பது மற்றும் அளவிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கையை நிறுவனம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. மீள்காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணை ரூபா. 3,548,784,649 ஆனது மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக இனங்காணப்பட்டிருந்தது.

(b.) LKAS 08 இன் பந்தி 13 இன் படி - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள், நிறுவனமானது ஒரே மாதிரியான கொடுக்கல் வாங்கல்களுக்கு அதன் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். இருப்பினும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மதிப்பீட்டிற்கு நிதியமானது வெவ்வேறு கொள்கைகளைப் பயன்படுத்தியிருக்கிறது. 2019 இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளைக் கணக்கிடுவதற்கு நிதியமானது சராசரி விளைவினைப் பயன்படுத்தியிருக்கிறது. எவ்வாறாயினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளைக் கணக்கிடுவதற்கு வாங்கும் விளைவு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மதிப்பீட்டு முறையை முதலீட்டுக் கொள்கை வரையறுக்கவில்லை.

### 1.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

(a.) கட்டுப்பாட்டு பொதுப் பேரேட்டுக் கணக்கின் படி பெறவேண்டிய மீள்காப்புறுதி நிலுவைகள் ரூபா. 1,590,481,053 மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வயது பகுப்பாய்வு அறிக்கையின் படி பெறவேண்டிய மீள்காப்புறுதி ரூபா. 1,581,447,299 ஆகும். எனவே, கட்டுப்பாட்டு பொதுப் பேரேட்டுக் கணக்கு பெறவேண்டிய மீள்காப்புறுதி மற்றும் வயது பகுப்பாய்வு அறிக்கை பெறவேண்டிய மீள்காப்புறுதி என்பவற்றுக்கிடையே ரூபா. 9,033,754 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. நிதியத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படிஇ இந்த வேறுபாடானது வயது பகுப்பாய்விலிருந்து ஒரு காப்புறுதி கம்பனியிடமிருந்து பெறவேண்டிய நிலுவைகள் ரூபா 9,053,364 இன் விடுபாட்டினை குறிக்கிறது. மேலும் அடையாளம் காணப்படாத ரூபா. 19,610 வித்தியாசமானது அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மதிப்பாய்வில் உள்ள ஆண்டிற்கான நிதி அறிக்கைக்கு ஏதேனும் சீராக்கம் தேவையா என்பதை முடிவு செய்யவதற்கு அடையாளம் காணப்பட்ட விடுபாடு ரூபா. 9,053,364 இற்கான சான்று கணக்காய்விற்கு கிடைப்பனவற்றதாக உள்ளது.

(b.) நிதி அறிக்கையின் படி ஊழியர் இடர் கடன் மீதி மற்றும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட விபரமான அட்டவணை என்பவற்றுக்கடையில் ரூபா 568,087 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

(c.) 2020 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூபா. 3,445,057 ஆனது 2021 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூபா. 2,280,680 ஆனது 2022 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. எனவே, ஆண்டுக்கான மொத்தச் செலவுகள் மிகைப்படுத்தப்பட்டிருந்தது அத்துடன் ஆண்டுக்கான லாபம் ரூபா. 1,164,377 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

(d.) 2020 இன் திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளின் படி, நிறுவனம் மீள்காப்புறுதிக்கான வருமான அங்கீகாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. எவ்வாறாயினும், LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள் - பந்தி 13 இன் படி மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான அத்தகைய கொள்கை தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் படி, விகிதாசார ஒப்பந்த மீள் காப்புறுதி தவணையானது மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலுடன் இடரை மாற்றுகின்ற காப்புறுதி நிறுவனத்திடமிருந்து (cedants with the leader) அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் பெறப்பட்ட போது இனங்காணப்படும். எவ்வாறாயினும், 2021 க்கு முந்தைய மீள் காப்புறுதி தவணையான ரூபா. 723,971,289 மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின்

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

உறுதிப்படுத்தல் மற்றும் அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் ஆகியவை தாமதமாக பெறப்பட்ட காரணத்தால் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா. 684,791,928 ஆனது 2022 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதிக்கு இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாகஇ ஆண்டுக்கான வருமானமானது ரூபா. 39,179,361 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(e.) 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் படி, விகிதாசாரமற்ற ஒப்பந்த மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான மீள் காப்புறுதி தவணையானது ஆண்டுக்கான மொத்த எழுதப்பட்ட தவணை (GWP) ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் ஏற்கனவே நிறுவப்பட்ட ஒப்பந்த தவணையின் அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்இ 2021 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா. 35,138,723 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா. 15,800,799 ஆனது 2022 ஆம் ஆண்டில் அடையாளங்காணப்பட்டிருந்தது. கால முடிவில் கிடைக்கக்கூடிய மேலதிக தகவல்கள் மற்றும் மேம்பாடுகளுடன் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதன் மூலம் தொடர்புடைய சீராக்கங்கள் செய்யப்படாததால் இது நிகழ்ந்தது. இதன் காரணமாகஇ ஆண்டுக்கான வருமானமானது ரூபா. 19,337,924 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(f.) அமையத்திற்கேற்ற (Facultative) மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான கணக்கீட்டு கொள்கையின் படி, மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு காப்புறுதி தவணை இனங்காணப்பட்டிருந்தது. எனவே, முந்தைய ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா. 143,783,983 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேலும் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா. 170,065,932 ஆனது 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டுக்கான வருமானமானது ரூபா. 26,281,949 ஆல் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(g.) நான்கு (04) வங்கிக் கணக்குகளில் ஒன்பது (09) மாதங்கள் தொடர்பில் வங்கி இணக்கக்கூற்றில் இணைக்கப்பட்ட காசுப்புத்தக மீதிகளுக்கும் 19 மே 2022 கணக்காய்வு திகதியில் அமைப்பின் படி காசுப்புத்தக மீதிகளுக்கும் இடையே வித்தியாசம் ரூபா. 3,408,464 ஆனது அவதானிக்கப்பட்டிருந்தது.

(h.) சொத்தினை பயன்படுத்தும் உரிமை தொகை ரூபா.5,351,298, சொத்தினை பயன்படுத்தும் உரிமையின் மீதான குத்தகைப் பொறுப்பு தொகை ரூபா. 7,339,958 மற்றும் சொத்தினை பயன்படுத்தும் உரிமையின் நிதிச் செலவு தொகை ரூபா. 2,259,970 ஆகியவை மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்குரிய ஆவணச்சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

(a.) செலுத்த வேண்டிய வருமான வரி கணக்கில் 2020 ஆம் ஆண்டிலிருந்து தொடர்சியாக வரவு மீதி தொகையான ரூபா. 22,465,243ஐ நிதியம் கொண்டுள்ளது. முகாமைத்துவத்தின் கூற்றுப்படி, இது நிதியத்தினால் செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) ஆகும். எனவே, வருமான வரி செலுத்துதலுக்கு எதிராக ESC கோரப்பட்டிருக்கவில்லை என்று தெரிகிறது, ஆகையால் அதை திரும்பப் பெறுவது தொலைவில் உள்ளது. இருப்பினும், இந்த வரவு மீதிக்கான கூடுதல் சான்றுகள் கிடைப்பனவாக இருக்கவில்லை.

(b.) கொடுப்பனவுக் கைச்சாத்து மற்றும் ரூபா. 2,180,969 தொகையான பெறவேண்டிய வாடகை வைப்புக்கான உடன்படிக்கைகள் மற்றும் ரூபா. 892,692 தொகையான கொடுக்கவேண்டிய திரும்பப்பெறத்தக்க வைப்பு ஆகியவற்றுக்கான மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. மேலும், சான்றுகள் இல்லாததாலும் முகாமைத்துவக் கருத்துகள் கிடைக்காததாலும் மாற்று நடைமுறைகள் சாத்தியமாக இருந்திருக்கவில்லை.

(c.) நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ரூபா. 282,865,828 தொகையான ஐந்து (05) பொதுப் பேரேடு கணக்குகளில் உள்ள மீதிகளின் பற்றுச்சீட்டுக்கள், உடன்படிக்கைகள் போன்ற மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. மேலும், சான்றுகள் இல்லாததாலும் முகாமைத்துவக் கருத்துகள் கிடைக்காததாலும் மாற்று நடைமுறைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

FR 272(1) இன் படி, பணம் செலுத்தப்பட்ட அனைத்து கைச்சாத்துக்களும் அப்புறப்படுத்தப்படும் வரை அவற்றின் இலக்கங்களின் தொடர்ச்சியான வரிசையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். துணை ஆவணங்களுடனான ரூபா 2,490,462 தொகையான 34 கொடுப்பனவுக் கைச்சாத்துக்கள் கணக்காய்விற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது.

ரூபா. 2,584,778,761 தொகைக்கான தொடர்புடைய மூல ஆவணங்களுடனான அறுபத்தொன்பது (69) நாட்குறிப்பு கைச்சாத்துக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நாட்குறிப்பு பதிவு கோப்புகளில் கிடைப்பனவாக இருக்கவில்லை. மேலும், சான்று இல்லாத காரணத்தால் மீதியின் துல்லியம் மற்றும் இருப்பை உறுதிப்படுத்த மாற்று நடைமுறைகளை மேற்க்கொள்ள முடியவில்லை. எழுத்துப்பூர்வ கோரிக்கைகள் மற்றும் நினைவூட்டல்கள் செய்யப்பட்ட போதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான வெள்ளம் மற்றும் வெள்ளம் அல்லாதவற்றிற்காக செலுத்தப்பட்ட மீள்காப்புறுதி உரிமைக்கோரல்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சான்று இல்லாத காரணத்தால் மீதியின் துல்லியம் மற்றும் இருப்பை உறுதிப்படுத்த மாற்று நடைமுறைகளை மேற்க்கொள்ள முடியவில்லை. கணக்காய்வின் கணக்கீட்டின் படி, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கு செலுத்தப்பட்ட உரிமைக்கோரல்களின் தொகை ரூபா. 1,298,922,574 ஆகும்.

(d.) 31 டிசம்பர் 2021 இல் மீள்காப்புறுதிக்கான நிலுவையில் உள்ள உரிமைகோரல் ஒதுக்கீடு ரூபா. 2,623,829,611 ஆகும். இதில் ஒதுக்கீடுகள் ரூபா.2,341,883,754 ஆனது மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களை அழைப்பதற்காக எட்டு (08) காப்புறுதி கம்பனிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது, இது மொத்த உரிமைகோரல் ஒதுக்கீட்டில் எண்பத்தொன்பது (89) சதவீதத்தை குறிக்கிறது. இருப்பினும், இந்த நிலுவைகளுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. மேலும், முகாமைத்துவத்தால் மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களின் பின்தொடர்தல் இல்லாததாலும், இது தொடர்பான அறிவிப்புகள்,

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

இணக்கக்கூற்றுகள், உரிமைகோரல்கள் தீர்ப்பனவு அட்டவணைகள் மற்றும் முகாமைத்துவக் கருத்துக்களைச் சமர்ப்பிக்காததாலும் மாற்று நடைமுறைகளின் செயல்திறன் சாத்தியமற்று இருக்கிறது.

(e.) 31 டிசம்பர் 2021 இல் பெறவேண்டிய நிலுவையிலுள்ள உள்நோக்கிய மீள்காப்புறுதி தவணை ரூபா. 1,590,481,053 மற்றும் அதில் பெறவேண்டியவைகள் ரூபா. 1,457,619,423 ஆனது மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களை அழைப்பதற்காக எட்டு (08) காப்புறுதி கம்பனிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது, இது மொத்த மீள்காப்புறுதி பெறவேண்டியவைகளில் தொண்ணூற்றிரண்டு (92) சதவீதத்தை குறிக்கிறது. இருப்பினும், இந்த நிலுவைகளுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. மேலும், இது தொடர்பான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களின் பின்தொடர்தலில் முகாமைத்துவக ஆதரவு இல்லாமை மற்றும் விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுகள், இணக்கக்கூற்றுகள், மீட்பு அட்டவணைகள், வயது பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவக் கருத்துகள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்காததாலும் மாற்று நடைமுறைகளின் செயல்திறன் சாத்தியமற்று இருக்கிறது.

(f.) இறுதி காலாண்டு ஒதுக்கங்கள் தொடர்பான மதிப்பீட்டிற்காக ஆயுட்கால கணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(g.) எழுத்துப்பூர்வ கோரிக்கைகள் மற்றும் நினைவூட்டல்கள் செய்யப்பட்ட போதிலும், நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடர் (Retro) மற்றும் NNDIS ஆகியவற்றுக்கான பெறவேண்டிய மீள் காப்புறுதி நிலுவை ரூபா. 1,102,142,174 க்கான வயது பகுப்பாய்வு ஆனது கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. எனவே, வயது பகுப்பாய்வு இல்லாத காரணத்தால், இந்த நிலுவைகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்களை அழைக்க மாதிரிகளைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமாக இருக்கவில்லை. மேலும், இது தொடர்பான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களை அழைப்பதில் முகாமைத்துவக ஆதரவு இல்லாமை மற்றும் விலைப்பட்டியல், பற்றுச்சீட்டுகள், இணக்கக்கூற்றுகள், மீட்பு அட்டவணைகள், வயது பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவக் கருத்துகள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்காததாலும் மாற்று நடைமுறைகளின் செயல்திறன் சாத்தியமற்று இருக்கிறது.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் விபரமான வருமானக் கூற்றின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான விடயங்களை மாற்றுவழிகளின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

இதன் காரணமாக நிதிநிலைமைக் கூற்றுஇ விபரமான வருமானக் கூற்றுஇ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் தயாரித்த பெறுமதிகள் அல்லது விடயங்களின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக ஏதாவது செம்மையாக்கல் செய்வதற்கு அவசியம் என எனக்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

## 2 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரீட்சிப்புக்களிலிருந்து தோன்றுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கைகளை நிதியம் பேணி வந்திருந்தது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படை மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்துவதற்குள் பின்வருனவற்றை வெளிப்படுத்துமளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் நிருவாக சபையின் எவராவது ஒரு அங்கத்தவருக்கு நிதியத்துடன் தொடர்புபட்ட ஏதாவது ஒரு உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ மறைமுகமாகவோ வழமையான வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளன என்று,

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது உரிய எழுத்துமூலச் சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் நிருவாகசபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளது என்று,

| சட்டவிதிகள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| i. 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரிவு 7, 31(2) மற்றும் 49 | நான்கு (04) காலாண்டு திரும்பல்கள் அதன் சார்பாக உருவாக்கப்பட்ட விதிகளாகத் கொண்ட தகவல்களை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், காலாண்டு மற்றும் வருடாந்திர அறிக்கைகள் 17 முதல் 363 நாட்கள் தாமதத்துடன் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| ii. 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 6(1)(e) | சட்ட ஏற்பாடுகளின் படி, நிதி, வங்கி, காப்புறுதி, முகாமைத்துவம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் தகுதிகள் அல்லது நிபுணத்துவம் பெற்ற நபர்களில் இருந்து மூன்று (03) நபர்கள் அமைச்சரால் நிதியத்தின் சபையிற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும். இருப்பினும், 31 டிசம்பர் 2021 நிலவரப்படி, இரண்டு (02) சபை பதவிகள் இன்னும் வெற்றிடமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. |
| iii. 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 13(e) | சட்ட ஏற்பாடுகளின் படி, நிதியம் தொடர்பாக ஒரு பொதுவான கணக்கும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பிரிக்கக் கூடிய தனியான கணக்கும் பேணப்பட வேண்டும். இருப்பினும், தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரிக்கக் கூடிய தனியான கணக்குகள் நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv. (2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பந்தி 13(g) மற்றும் (h) | ஒவ்வொரு முதலீட்டின் முகமதிப்பு, கொள்முதல் விலை மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றைக் காட்டி முதலீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு முதலீட்டு அறிக்கையின் நகலையும் அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். எவ்வாறாயினும், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான அத்தகைய அறிக்கை நிதியத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 31 டிசம்பர் 2021 இல் சபையின் மொத்த முதலீடு ரூபா 24,954,265,916 ஆகும். |
| v. 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பந்தி 23 | சட்ட ஏற்பாடுகளின் படி, அத்தகைய காப்புறுதி கம்பனிகள் துல்லியமாக நிதியத்திற்கு திரட்டப்பட்ட தொகையை விலைப்பட்டியலிட்டு அனுப்பியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதிக் கம்பனியின் பதிவுகளை ஆய்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நிதியம் எடுக்கவில்லை. |
| vi. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 40(1) | நிறுவனத்தின் ஆளுகைக் குழு நிதியத்திற்கு உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும். இருப்பினும், பெப்ரவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரை உள்ளக கணக்காய்வுச் செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

| | |
|---|---|
| vii. நிதி ஒழுங்குவிதிகள் 386(7) | காசோலைகள் ரத்துச் செய்யப்பட்டாலும் கூட அது அடியிதழோடு பொருத்தப்பட்டு காசோலைப் புத்தகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும். நிதியமானது கொடுப்பனவுக் கைச்சாத்தோடு காசோலை அடியிதழை இணைத்திருக்கிறது. இதன் விளைவாக, உறுச்சீட்டு ஏதேனும் இடம் தவறி விட்டால் ரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான அனைத்து விபரங்களும் தொலைந்து போகலாம். |
| viii. நிதி ஒழுங்குவிதிகள் 395(b) | வங்கி இணக்கக் கூற்று சம்மந்தப்பட்ட பணம் செலுத்தும் அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்இ மற்றும் ஆய்வுக்காக கணக்காய்விற்கு கிடைப்பனவு உள்ளதாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பதினெட்டு (18) வங்கிக் கணக்குகளுக்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்கள் பெயர்இ பதவி மற்றும் திகதி இல்லாமல் சான்றளிக்கப்பட்டிருந்தன. |
| ix. நிதி ஒழுங்குவிதிகள் 446 | தொடர் எண் வரிசை கிடைக்காததாலும் மாற்றங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கையொப்பங்கள் கிடைக்காததாலும் SRCC & Tr நிதியத்தின் சில்லறைக் காசேடு சரியாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| x. நிதி ஒழுங்குவிதிகள் 446(1)(c) | வேலைநிறுத்தம்இ கலவரம்இ சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத் (SRCC & Tr Fund) திணைக்களமானது காசேட்டினை இன்றுவரை எழுதியிருக்கவில்லை, மற்றும் தினசரி அல்லது மாதாந்த அடிப்படையில் மொத்தப்படுத்தியோ சமப்படுத்தியோ இருக்கவில்லை மற்றும் மேற்பார்வை அல்லது பொறுப்பான பணி அதிகாரி மூன்று (03) வங்கிக் கணக்குகள் தொடர்பான பணப் புத்தகத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. |
| xi. 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி 2.'.2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்கான செலவை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டும். இருப்பினும், நிதியமானது 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 168,700 செலவு செய்வதன் மூலம் ஊழியர்களுக்கான கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்திருந்தது. மேலும், நிதியத்தினால் 2016 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் வாங்கிய கையடக்கத் தொலைபேசிகளுக்கு ரூபா 2,601,071 மொத்தச் செலவு செய்யப்பட்டிருந்தது. |
| xii. அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2(a)(ii) வழிகாட்டுதல் | சட்டத்தின் விதிகளின் படி, குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறை சபைக் கூட்டங்கள் தவறாமல் நடத்தப்பட வேண்டும். இருப்பினும், 2021 ஏப்ரல், ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சபைக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. |
| xiii. அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2 (b) (xii) வழிகாட்டுதல் | வழிகாட்டுதலின் படி, சபைத் துணைக் குழுக்களின் நியமனம் மற்றும் முறையான செயல்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இடர் குழு, தொடர்புடைய கட்சி கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு போன்ற சபைத் துணைக்குழுக்கள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் செயற்பட்டிருக்கவில்லை. |
| xiv. 2017 பெருநிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைக்கான கொள்கை G.2 குறியீடு | சபை ஒரு தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரியை (CISO) நியமிக்கவில்லை அல்லது அந்த நிறுவனத்திற்காக இணைய பாதுகாப்பு இடர் முகாமைத்துவக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து நிதியத்தின் அதிகாரம் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று,

(a.) பெற வேண்டிய மீள் காப்புறுதி தவணை ரூபா. 142,595,979 தொகையானது ஒரு (01) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த மீள் காப்புறுதி தவணையில் 11.3% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மற்றும் ரூபா. 104,522,202 தொகையானது இரண்டு (02) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த தொகையில் 11.8% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரூபா. 151,033.057 தொகையானது மூன்று (03) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது மொத்த நிலுவைத் தொகையில் 12% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதன்படி, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெற வேண்டிய மீள் காப்புறுதி மீதிகளை மீளப்பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(b.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், நிதியமானது முறையான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் காப்புறுதி கம்பனிகளுக்கு 20% தரகினை செலுத்தியிருந்தது. மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான மோட்டார் அல்லாத காப்புறுதிக் கொள்கைகளுக்கு தரகாக செலுத்தப்பட்ட தொகை ரூபா. 1,228,933,582 ஆகும்.

(c.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்பிற்காக காப்புறுதி கம்பனிகளால் வசூலிக்கப்பட்ட மொத்த தவணையில் 12% மட்டுமே மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் இருந்து சரியான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் நிதியம் வசூலித்துள்ளது. எனவேஇ மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான நிதியத்திற்கான தவணையின் குறைப்பு ரூபா. 10,155,796.304 ஆகும்.

(d.) 2007 இன் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் 21 டிசம்பர் 2012 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் எண் 1791/4 இன் படிஇ இலங்கையின் பொது (ஆயுள் அல்லாத) மீள் காப்புறுதியில் 30% கட்டாயக் கூறாக நிதியம் வைத்துள்ளது. எவ்வாறாயினும், கட்டாயக் கூறை மீள் காப்புறுதி செய்யும் காப்புறுதியாளர்களுக்கு நிதியம் ஒரு தரகினை வழங்கியது அவதானிக்கப்பட்டது. நிதியமானது 13 பொதுக் காப்புறுதி கம்பனிகளுக்கு 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதிகளுக்காக மேற்கூறிய கட்டாயக் கூறுக்காக மீள் காப்புறுதி தரகாக ரூபா. 7,390,263,635 தொகையினை உரிய சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் செலுத்தியிருந்தது.

(e.) முதலீட்டு நடவடிக்கைகள்

(i) நிதியத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு கொள்கை இருக்கவில்லை. வரைவுக் கொள்கை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, முன்மொழியப்பட்ட முதலீட்டு வரம்புகளுடன் வரைவுக் கொள்கையைச் சமர்ப்பிக்க குழு பரிந்துரைத்தது. இருப்பினும், மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதியத்தின் வரைவு முதலீட்டுக் கொள்கையின் பந்தி 17 இன் படி, முதலீட்டுக் குழு அவ்வப்போது கூடி, முதலீட்டுக் குழுவின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக முதலீட்டுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) முதலீட்டுக் கொள்கையை வழக்கமான அடிப்படையில் மீளாய்வு செய்ய முதலீட்டுக் கொள்கையில் எந்த ஏற்பாடும் இல்லை. மேலும், முதலீட்டுக் கொள்கையானது அதன் அமுலாக்கத்திற்குப் பிறகு சபையால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் சரியான நேரத்தில் கொள்கையில் தேவையான மேம்பாடுகளை இணைத்திருக்கவில்லை.

(iv) முதலீட்டு முகாமையாளரின் வகிபாகம் வரைவு முதலீட்டுக் கொள்கையின் பந்தி 13 இல் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இந்த பதவி 13 ஆகஸ்ட் 2020 முதல் வெற்றிடமாகவே உள்ளது.

(v) முதலீட்டுக் கொள்கையின் படி, பொருளாதார நிலைமைகள்இ வட்டி வீதங்களின் நடத்தை, எதிர்காலப் போக்குகள் மற்றும் நிதியத்தின் செயல்பாட்டு காசுப்பாய்ச்சல் தேவை ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் முதலீடுகளை தேர்ந்தெடுக்கிறது. எவ்வாறாயினும், முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுப்பதற்காக அதிகப்படியான காசுப்பாய்ச்சல் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களின் நேரத்தை அடையாளம் காண்பதற்கு காசுப்பாய்ச்சல் முன்கணிப்புக்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் (முதலீடுகள்) ரூபா. 24,954,265,916 ஆகும். இது நிதியத்தின் மொத்தச் சொத்துக்களில் 79%ஐ பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் முதலீட்டு முடிவுகளுக்கான நிதி அதிகாரத்தின் பிரதிநிதித்துவமானது முதலீட்டுக் கொள்கையில் முதலீடுகளின் பெறுமதி மற்றும் முதலீடுகளின் மூலங்களின் அடிப்படையில் வரையறுக்கப்படவில்லை. முதலீடுகளின் பெறுமதி மற்றும் மூலங்களைப் பொருட்படுத்தாமல் அனைத்து முதலீடுகளும் முதலீட்டுக் குழுவால் மட்டுமே அங்கிகரிக்கப்பட்டன.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

(f.) மதிப்பீட்டு செயல்பாடு

(i) தரவு பிடிப்பு, வணிகத்தின் முக்கிய வகுப்பைப் பிரித்தல், உரிமைகோரல் எண்ணிக்கைகளை வழங்குதல் மற்றும் உரிமைகோரல் கையாளுதல் செலவுகள் தொடர்பான பரிந்துரைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து ஆயுட்கால மதிப்பீட்டாளரால் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், நிதியத்தின் தரவு நம்பகத்தன்மையை அதிகரிக்க தேவையான மேம்பாடுகளைச் செய்வதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டு அறிக்கை சபை மட்டத்திலோ அல்லது முகாமைத்துவத்தின் பொருத்தமான மட்டத்திலோ கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை.

(ii) தேவையான ஆயுட்கால மதிப்பீட்டு தகவல்களை சேகரிக்க, தக்கவைக்க மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டாளர் மற்றும் தேவையான கட்சியினருக்கு வழங்க நிதியத்தினால் ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்படவில்லை.

(g.) ரூபா. 2,726,557 தொகையான 03 காலங்கடந்த மென் கடன் கணக்கு நிலுவைகளின் மீட்பு நினைவூட்டல்கள் 31 டிசம்பர் 2021 வரை நிறுவனத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலம் கோரப்பட்ட பிறகு, மீட்பு நினைவூட்டல்கள் 23 ஆகஸ்ட் 2022 அன்று அனுப்பப்பட்டிருந்தன.

(h.) 23 ஆகஸ்ட் 2013 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1842/23 இன் படி, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக 10 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து ரூபா.2,681,980 தொகையான நிலுவையில் உள்ள பயிர் வரி கட்டணத்திலிருந்து அபராதம் விதிக்கப்பட்டு நிதியத்தால் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 24 ஆம் பந்தியின் விதிகளின் படி வரியைச் செலுத்தாமைக்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து நிதியத்தின் வளங்கள் சிக்கனமாக, ஆக்கபூர்வமாக மற்றும் வினைத்திறனாக காலப்பகுதிக்குள் சட்டவிதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று,

### 2.5 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(a.) மீள் காப்புறுதி உரிமைக்கோரல் செயல்முறையைக் கையாளுவதற்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் செலுத்த வேண்டிய கடப்பாடுகளை அடையாளம் காண்பதற்கு நிதியத்திற்கு கிடைப்பனவு அற்ற தன்மையாக இருக்கிறது. எனவேஇ முதன்மை அறிக்கை ஆவணத்திலிருந்து மீள் காப்புறுதி கடப்பாட்டினை நிதியம் அடையாளம் கண்டு பதிவு செய்கிறது.



**டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# விரிவான வருமானக் கூற்று

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் | 1 | 10,630,972,523 | 9,818,040,011 |
| அக்ரஹாரவிற்காக கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | 1 | 6,283,159,919 | 5,469,298,738 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதிக் கட்டணம் | | 2,193,825,976 | 1,626,851,259 |
| ஒப்பளிக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் | | (589,680,363) | (1,101,890,156) |
| **தேறிய எழுதப் பட்ட தவணைக் கட்டணம்** | | 18,518,278,055 | 15,812,299,851 |
| ஈட்டப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டின் தேறிய மாற்றம் | | (408,441,178) | 867,768,751 |
| UPR இல் மீள்காப்புறுதி பங்கு மாற்றம | | (730,932,477) | 794,959,214 |
| **தேறிய ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம** | | 17,378,904,399 | 17,475,027,816 |
| **ஏனைய தொழிற்பாடுகளில் இருந்தான வருமானம்** | | | |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 2 | 1,329,693 | 1,935,395 |
| முதலீடுகளும் ஏனைய வருமானமும் | 3 | 1,588,798,090 | 1,385,087,715 |
| **ஏனைய வருமானம்** | | 1,590,127,784 | 1,387,023,110 |
| உற்றறப்பட்ட மொத்த நன்மைகளும் உரிமைக் கோரிக்கைகளும் | 4 | (10,147,096,018) | (7,978,035,907) |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள | 4 | - | - |
| ஒப்பந்தப் பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | 1,176,026,553 | 97,522,388 |
| மீள்காப்புறுதி செய்பவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஒப்பந்த பொறுப்புகளில் மொத்த மாற்றம் | 4 | - | - |
| IBNR இல் மொத்த மாற்றம் | 4 | (1,790,211,581) | (74,002,744) |
| **தேறிய நன்மைகளும் உரிமைக்கோரிக்கைகளும்** | | (10,761,281,045) | (7,954,516,263) |
| எழுத்துறுதி மற்றும் கொள்ளல் கிரயம் (மீள்காப்புறுதி உள்ளடங்களாக) | 5 | (1,863,920,737) | (1,614,860,946) |
| ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | 6.1 | (392,242,269) | (409,175,576) |
| நிதி ஆகுசெலவு மற்றும் ஏனைய தொடர்புடைய ஆகுசெலவு | 6.2 | (15,866,209) | (17,571,769) |
| **மொத்த நன்மைகள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவினங்கள்** | | (13,033,310,261) | (9,996,124,555) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | 5,935,721,923 | 8,865,926,371 |
| இந்த ஆண்டிற்கான வருமான வரி | | (991,504,005) | (1,339,826,929) |
| **இந்த ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்)** | | 4,944,217,918 | 7,526,099,442 |
| **ஏனைய முழுமையான மொத்த வருமானம்** | | | |
| நிதி சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (346,028,774) | 134,541,150 |
| ஓய்வூதிய நன்மைகளுக்கன தேவைப்பாடு மீது உண்மையான ஈட்டுகை / (நட்டம்) | | 29,237,258 | (7,943,165) |
| **அந்த வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி** | | | |
| **மொத்த விரிவான வருமானம்** | | 4,627,426,402 | 7,652,697,427 |

# நிதி நிலைமைக் கூற்று

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| அருவச் சொத்துக்கள் | 7 | 19,673,246 | 5,998,484 |
| ஆதனங்களும், பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் | 8 | 35,294,751 | 42,225,902 |
| குத்தகைச் சொத்துக்களின் பயன்படுத்துவதற்கான உரிமை | 9 | 62,145,998 | 94,511,709 |
| நிதிச் சொத்துக்கள் | 10 | 24,954,265,916 | 21,666,072,511 |
| கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி | 11 | 1,102,142,174 | 1,102,142,174 |
| கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள் | 12 | 3,791,265,630 | 2,849,482,173 |
| மென் கடன்கள் | 13 | 2,726,557 | 2,726,557 |
| ஏனைய நிதியல்லா சொத்துக்கள் | 14 | 103,107,368 | 112,092,419 |
| பிற்போடப்பட்ட தரகு | 15 | 778,394,410 | 713,547,137 |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 16 | 715,633,708 | 769,514,934 |
| **மொத்த சொத்துகள்** | | 31,564,649,760 | 27,358,314,000 |
| | | | |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புகள்** | | | |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகள் | | 17,007,415,074 | 13,887,197,157 |
| ஏனைய உரிமைப்பங்கு கூறு | | (139,342,604) | 177,448,911 |
| ஓதுக்கு மீள்மதிப்பீடு | | (2,102,126) | (2,102,126) |
| **மொத்த உரிமைப்பங்கு** | | 16,865,970,344 | 14,062,543,942 |
| | | | |
| **பொறுப்புகள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள் | 19 | 11,580,703,508 | 9,825,591,002 |
| ஓய்வூதிய நன்மைகள் தேவைப்பாடு | 20 | 29,677,230 | 50,120,616 |
| குத்தகை கடன்கொடுனர் | 21 | 85,708,121 | 113,263,614 |
| ஏனைய பொறுப்புகள் | 17 | 3,002,590,554 | 3,306,794,823 |
| வங்கி மேலதிகப் பற்று | 16 | - | - |
| **மொத்தப் பொறுப்புகள்** | | 14,698,679,413 | 13,295,770,055 |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | 31,564,649,760 | 27,358,314,000 |

Iஇந்த நிதியத்தின் நிதிக்கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றது என்பதை சான்றுபடுத்துகின்றேன்.

**தம்மிகா வீரகோன்**
**பிரதான நிதி அலுவலர் (பதில் கடமை)**
**உதவி பொது முகாமையாளர் - நிதி**

**எல். ஏ. ஜி. என். லியனாராச்சி**
**பிரதான நிறைவேற்று அலுவலர்**

பக்கம் 45 தொடக்கம் 76 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன. நிதிக் கூற்றுகளைத் தயாரித்து முன்வைப்பதற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளன.

**மவாஹிப் மவ்ஜூட்**
**தலைவர்**

**பணிப்பாளர்**

25 பெப்பிரவரி 22
கொழும்பு

# உரிமைப்பங்கு மாற்றக்கூற்று

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | தக்கவைக்கப்பட்ட உழைப்புகள் | விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2016 டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு மீதி** | 7,831,705,609 | (266,847,481) | | 7,564,858,128 |
| ஆண்டுக்கான இலாபம் | 976,233,935 | | | 976,233,935 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | - | 208,755,171 | | 208,755,171 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (1,500,000,000) | | | (1,500,000,000) |
| வருட இறுதியில் முடிவுறுத்தப்பட்ட வேறுபாடு | (44,253,311) | | | (44,253,311) |
| செலுத்த வேண்டிய வருமான வரி - 2016/2017 | (97,669,225) | | | (97,669,225) |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 26,235,147 | | | 26,235,147 |
| AAIB பயிர் மீளளிப்பு | 42,871,673 | | | 42,871,673 |
| 2016 ஊக்கத் தொகை | (3,140,650) | | | (3,140,650) |
| RI பொதுத் தவணைக் கட்டணம் | (2,921,713) | | | (2,921,713) |
| ஆரம்ப மீதி - AR கட்டுப்பாட்டு RI | (38,856,406) | | | (38,856,406) |
| ஆரம்ப மீதி- AR கட்டுப்பாட்டு மோட்டார் அல்லாத | 83,109,718 | | | 83,109,718 |
| காசோலைத் திருப்பம் | (324,575) | | | (324,575) |
| ஊ.ந.நிதியம் 3% | 305,147 | | | 305,147 |
| மோட்டார் சைக்கில் முற்பணம் மற்றும் மோட்டார் கிடைப்பனவுகள் | (57,582,588) | | | (57,582,588) |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | (2,068,743) | | | (2,068,743) |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (493,887) | | | (493,887) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/ நட்டம் | - | (8,699,331) | | (8,699,331) |
| **31 டிசம்பர் 2017 இல் மீதி** | **7,213,150,131** | **(66,791,641)** | **-** | **7,146,358,490** |
| ஆண்டுக்கான இலாபம் | 3,183,238,866 | | | 3,183,238,866 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | (390,587,646) | | (390,587,646) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (2,750,000,000) | | | (2,750,000,000) |
| சொத்துக்களின் மீள்மதிப்பீடு | | | (2,102,126) | (2,102,126) |
| அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீது மீள்மதிப்பீடு | 6,276,415 | | | 6,276,415 |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 25,070,657 | | | 25,070,657 |
| NNDIS மீள்நிறுவல் மற்றும் சீராக்கல் கட்டணம் | (291,472,452) | | | (291,472,452) |
| கிடைக்க வேண்டிய RETRO மீள்காப்புறுதி நாணயப்பரிமாற்ற நட்டம் | (3,888,779) | | | (3,888,779) |
| தீர்க்கப்பட்ட இன்வொயிஸ் மற்றும் CN இரத்தாக்கம் | 41,810,528 | | | 41,810,528 |
| மீள்காப்புறுதி ஆரம்ப மீதியின் காணமல் போன இன்வொயிஸ் | 10,980,047 | | | 10,980,047 |
| NNDIS இரத்துசெய்யப்பட்ட காசோலை | 12,682,341 | | | 12,682,341 |
| காசோலை இரத்தாக்கம் | 2,080,928 | | | 2,080,928 |
| பிணைக் கூப்பன் வட்டி | (8,856,250) | | | (8,856,250) |
| சம்பளத் திருத்தம் | (1,037,300) | | | (1,037,300) |
| விடுமுறை காசாக்கல் | (2,764,983) | | | (2,764,983) |
| நகல் CN மீள்காப்புறுதி இரத்தாக்கம் | (7,458,551) | | | (7,458,551) |
| யூரோ அமெரிக்க டொலர் நாணயப்பரிமாற்ற ஈட்டுகை ஒதுக்கம் | (5,082,679) | | | (5,082,679) |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (83,955) | | | (83,955) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/ நட்டம் | | (9,075,505) | | (9,075,505) |
| **31 டிசம்பர் 2018 இல் மீதி** | **7,424,644,965** | **(466,454,792)** | **(2,102,126)** | **6,956,088,048** |
| ஆண்டுக்கான இலாபம் | 3,114,086,727 | | | 3,114,086,727 |
| ஏனைய முன்னைய வருட சீராக்கங்கள் | (139,165,533) | | | (139,165,533) |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (3,267,970,000) | | | (3,267,970,000) |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | 11,501,557 | | | 11,501,557 |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | 517,879,752 | | 517,879,752 |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | | (574,033) | | (574,033) |
| **31 டிசம்பர் 2019 இல் மீதி** | 7,143,097,716 | 50,850,927 | (2,102,126) | 7,191,846,517 |
| ஆண்டுக்கான இலாபம் | 7,526,099,442 | | | 7,526,099,442 |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | | (7,943,165) | | (7,943,165) |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | | 134,541,150 | | 134,541,150 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (782,000,000) | | | (782,000,000) |
| **31 டிசம்பர் 2020 இல் மீதி** | **13,887,197,157** | **177,448,912** | **(2,102,126)** | **14,062,543,942** |
| ஆண்டுக்கான இலாபம் | 4,944,217,918 | | | 4,944,217,918 |
| பணிக்கொடை மதிப்பீட்டின் மீது திரட்டிய (ஈட்டுகை)/நட்டம் | | 29,237,258 | | 29,237,258 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | - | | | - |
| நிதிச் சொத்துக்கள் விற்பனையில் கிடைக்கக்கூடிய தேறிய மாற்றம் | (346,028,774) | | (346,028,774) | |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | (1,824,000,000) | | | (1,824,000,000) |
| **31 டிசம்பர் 2021 இல் மீதி** | **17,007,415,075** | **(139,342,604)** | **(2,102,126)** | **16,865,970,344** |

பக்கம் 45 தொடக்கம் 76 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இந்நிதிக்கூற்றுகளில் முக்கியமான பகுதியினை உருவாக்குகின்றன.

அடைப்புக் குறிக்குள் உள்ள உருக்கள் கழித்தலைக் குறிக்கின்றது

# காசுப்பாச்சல் மாற்றக்கூற்று

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 5,935,721,923 | 8,865,926,371 |
| **சீராக்கங்கள் :** | | | |
| வட்டி வருமானம் | | (1,424,696,277) | (1,334,565,453) |
| தேய்மானம் | | 9,049,428 | 10,704,723 |
| கடன் கரைப்பு | | 7,868,701 | 2,149,221 |
| குத்தகை செலவுகள் | | 15,866,209 | 17,571,769 |
| தேறிய முகப்பெறுமதி மாற்றங்கள் | | (316,791,516) | 126,597,985 |
| முன்னைய வருட சீராக்கங்கள் | | | |
| நிலையான சொத்தக்களின் அகற்றலின் மீதான இலாபம் / நட்டம் | | - | - |
| | | 4,227,018,467 | 7,688,384,616 |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | A | (965,279,969) | (262,001,625) |
| தொழிற்பாட்டு பொறுப்புகளின் மாற்றம் | B | 411,405,353 | (1,559,158,338) |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாச்சல் | | 3,673,143,852 | 5,867,224,653 |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தேறிய காசு | | 3,673,143,852 | 5,867,224,653 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாச்சல்** | | | |
| நிதி முதலீட்டின் தேறிய அகற்றல் / கைக்கொள்ளல் | | (3,288,193,406) | (6,221,405,247) |
| பெற்றுக்கொண்ட வட்டி | | 1,424,696,277 | 1,334,565,453 |
| பிணைகள் மீதான கழிவின் கடன் கரைப்பு | | - | - |
| மென் கடன்களின் மீள்பெறுகை | | - | 1,028,424 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் அகற்றல் | | | |
| கட்புலனாகச் சொத்துக்களின் கைக்கொள்ளல் | | (21,543,462) | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணக் கைக்கொள்ளல் | | (2,118,276) | (12,433,322) |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | (1,887,158,867) | (4,898,244,692) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான பாச்சல்** | | | |
| குத்தகை செலவுகள் | | (15,866,209) | (17,571,769) |
| திரட்டுநிதியத்திற்கு மாற்றப்பட்ட காசு | | (1,824,000,000) | (782,000,000) |
| நிதிச் செயற்பாடுகளில் பாவிக்கப்பட்ட தேறிய காசு | | (1,839,866,209) | (799,571,769) |
| **காசும் காசுக்கு சமனானவற்றியனதும் தேறிய அதிகரிப்பு/குறைவு** | C | (53,881,226) | 169,408,194 |
| ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 769,514,934 | 600,106,740 |
| ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 715,633,708 | 769,514,934 |
| **காசுப் பாச்சல் கூற்றிற்கான குறிப்புகள்** | | | |
| **அ. தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | | |
| பிற்போடப்பட்ட தரகில் (அதிகரிப்பு)/குறைவு | | (64,847,273) | 45,284,164 |
| கிடைக்கவேண்டிய மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்தில் (அதிகரிப்பு)/குறைவு | | - | 497,478,268 |
| கிடைக்கவேண்டிய தவணைக்கட்டணத்தில் (அதிகரிப்பு)/குறைவு | | (941,783,457) | (838,666,693) |
| ஏனைய நிதி சாராச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைவு | | 8,985,051 | (2,236,806) |
| குத்தைகையைப் பயன்படுத்துவத்கான உரிமையின் (அதிகரிப்பு)/குறைவு | | 32,365,710 | 36,139,441 |
| | | (965,279,969) | (262,001,625) |
| **ஆ. தொழிற்பாட்டுப் பொறுப்புகளில் மாற்றம்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகளில் (அதிகரிப்பு)/குறைவு | | 1,755,112,506 | (1,978,288,607) |
| ஓய்வூதிய நன்மைத் தேவைப்பாடுகளின் (அதிகரிப்பு)/குறைவு | | (20,443,386) | 15,928,153 |
| ஏனைய பொறுப்புகளின் (அதிகரிப்பு)/குறைவு | | (1,295,708,274) | 431,740,347 |
| குத்தகை கடன் பெறுனர்களின் (அதிகரிப்பு)/குறைவு | | (27,555,493) | (28,538,231) |
| | | 411,405,353 | (1,559,158,338) |
| **இ காசும் காசுக்கு சமனானவற்றினதும் அதிகரிப்பு/(குறைவு)** | | | |
| ஆண்டு இறுதியில் தேறிய காசும் காசுக்கு சமனான விடங்களும் | | 715,633,708 | 769,514,934 |
| கழி: ஆண்டுத் தொடக்கத்தில் தேறிய காசும் காசுக்கு சமனான விடயங்களும் | | 769,514,934 | 600,106,740 |
| காசும் காசுக்கு சமனான விடயங்களின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (53,881,226) | 169,408,194 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 11. கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

2007ஆம் ஆண்டு 28ஆம் இலக்க திருத்தச் சட்டத்துடன் இணைந்த “2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்” மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையானது (“இச் சபை”) உருவாக்கப்பட்டு இலங்கையில் அமையப் பெற்றுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல.95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம்முகவரியிலேயே அமைந்துள்ளது.

### 1.2 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்

சபையின் தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

### 1.3 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இச்சபையின் பிரதான செயற்பாடுகளானவை ஆயுள் அல்லாத (பொது) காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதித் தொழில் என்பவற்றை நடாத்திச் செல்லல் ஆகும்.

மேலும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாத நிதியம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகளின் வரிக்குப் பின்னரான இலாபத்தில் 1% பயிர் தீர்வை சபையினால் சேகரிக்கப்பட்டு விவசாயக் காப்புறுதித் திட்டத்திற்கு பயிர் தீர்வையிலிருந்து செலுத்தப்படுகின்றது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் சபையின் பிரதான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு

பணிப்பாளர் சபையானது இந் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து முன்னளிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

### 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியிலுள்ளவாறு இச்சபையின் ஊழியர் வலு 265 (2020 - 365) ஆக இருந்தது.

### 1.6 பணிப்பாளர் சபையினால் நிதிக்கூற்றுகளுக்கான அங்கீகாரம்

பணிப்பாளர் சபையினால் 31 டிசம்பர் 2021ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான அனுமதி மற்றும் விநியோகிப்பதற்கான அங்கீகாரம் 28 பெப்பரவரி 2021ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்கும் வகையில் 25 பெப்ரவரி 2022ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது.

## 2. தயாரிப்பதற்கான அடிப்படை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 இணக்கக்கூற்று

வேறுவகையில் குறிப்பிடப்பட்டால் அன்றி இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA - இலங்கை) பிரகடனம் செய்யப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு அமைவாகவும், 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்கமைப்புச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும், நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.

- காலாண்டு இறுதியில் சபையின் நிலை மீதான தகவல்களை நிதி நிலைமைக்கூற்று (பக்கம் 40) வழங்குகின்றது.
- மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் சபையின் நிதியியல் செயலாற்றுகை தொடர்பான தகவல்களை விரிவான வருமானக்கூற்று வழங்குகின்றது. (பக்கம் 39)
- பங்குதாரர்களின் உரிமைப்பங்குகளில் ஏற்பட்ட அனைத்து மாற்றங்களையும் உரிமைப் பங்குகளின் மாற்றக்கூற்று வெளிப்படுத்துகின்றது. (பக்கம் 41)
- சபையின் காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றை உருவாக்கும் திறன் மற்றும் அந்த காசுப் பாய்ச்சல் பயன்படுத்தல் தொடர்பான விபரங்களை பயன்படுத்துனர்களுக்கு காசுப் பாய்ச்சல் கூற்று வழங்குகின்றது (பக்கம் 44) மற்றும் நிதி மற்றும் நிதியல்லா தகவல்களைக் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் உள்ளடக்கியுள்ளன. (பக்கம் 45 இருந்து 76).

### 2.2 அளவீடுகளின் அடிப்படை

நிதியியல் கூற்றுகளில் உள்ள கீழ்வரும் பொருண்மை அயிட்டங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுகளில் ஏனைய அனைத்தும் வரலாற்றுக் கிரயம் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

| அயிட்டம் | அளவீடுகளின் அடிப்படை | குறிப்பு இல. |
|---|---|---|
| கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய நிதியியல் சொத்துக்கள் | உண்மைப் பெறுமதியில் | 10.1 |
| விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் | உண்மைப் பெறுமதியில் | 10.2 |
| வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள். | வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி உண்மையில் பெறுமதி மதிப்பிடப்பட்டதுடன் அடையாளம் காணப்பட்டது. | 20 |
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் பொறுப்புகள் | கணிப்பீட்டு தீர்மானப் பெறுமதி IRCSL இனால் விநியோகிக்கப்பட்ட கணிப்பீட்டு வழிகாட்டலின் அடிப்படையில் அமைந்துள்ளது. | 19.1 |
| உற்றப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத/ உற்றப்பட்ட ஆனால் போதியளவில் அறிக்கையிடப்படாத | கணிப்பீட்டு தீர்மானப் பெறுமதி கணிப்பீட்டுப் பொறிமுறைகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | 19.3 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 2.3 நிதியியல் கூற்றுகளின் சமர்ப்பிப்பு

அதனுடன் தொடர்புடைய திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் நிதி நிலமைக் கூற்றினை சபை சமர்ப்பிக்கின்றது. நிதியியல் கூற்றுகளைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு எவ்வித சீராக்கங்களும் செய்யப்படவில்லை.

நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றன மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொகையை சபையானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினைப் பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை முன்னளிக்கப்படும்.

## 2.4 தொழிற்பாட்டு மற்றும் முன்னளிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை ரூபாவில் (LKR) முன்னளிக்கப்படுகின்றன. இலங்கை ரூபாவில் முன்னளிக்கப்படும் சகல நிதித் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி மிகக் கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

## 2.5 பொருண்மியமும் ஒருங்கிணைவும்

ஒவ்வொரு ஒரேமாதிரியான பொருண்மையுடைய அயிட்டங்கள் வெவ்வேறாக வெளியிடப்பட்டுள்ளது. அவை பொருண்மையுடையனவாக இல்லாதிருந்தாலொழிய அயிட்டத்தின் தன்மை அல்லது செயற்பாடு தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.6 அறிக்கையிடும் காலப்பகுதி

அறிக்கையிடும் காலப்பகுதி 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையாகும். பொருத்தமானவிடத்து கணக்கீட்டுக் கொள்கைகள் அடுத்துவரும் குறிப்புகளில் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன

## 2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

இலங்கை கணக்கியல் தரநிலைகள் / SLFRS களுக்கு இணங்க நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கை அளவுகளை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். இந்த மதிப்பீடுகளிலிருந்து உண்மையான முடிவுகள் வேறுபடலாம்.

கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலத்திலும் மற்றும் பாதிக்கப்படும் எந்த எதிர்கால காலங்களிலும் அங்கீகரிக்கப்படுகின்றன. .

நிச்சயமற்ற தன்மையை உள்ளடக்கிய முக்கிய குறிப்பிடத்தக்க கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் கீழே விவாதிக்கப்படுகின்றன, அதேசமயம் அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தொடர்புடைய அளவுகள் தொடர்புடைய குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.7.1 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

சபையின் முகாமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாகத் தொடர்வதற்கான சபையின் ஆற்றல் மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தினைத் தொடர்வதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதிலும் திருப்தி கண்டுள்ளது. மேலும், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான சபையின் ஆற்றலின் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை விளைவிக்கக்கூடிய ஏதேனும் முக்கியமான நிச்சயமற்ற தன்மைகளைப் பற்றி முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆதலால், தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

### 2.7.1 நிதியியல் கருவிகளின் உண்மைப் பெறுமதி

கணித நுட்பங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்திக் கவனிக்கத்தக்க சந்தைவிலை நிர்ணயிக்கப்படாதவைக்கு நிதியியல் சொத்துகளினதும் நிதியியல் பொறுப்புகளினதும் உண்மைப் பெறுமதிகளின் தீர்மானமானது நிதியியல் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரிக்கான உள்ளீடுகள் அவதானிக்கக்கூடிய சாத்தியமான சந்தைத் தரவுகளில் இருந்து தருவிக்கப்பட முடியும், ஆனால் அது கிடைக்கப்பெறாவிடில், உண்மைப் பெறுமதியை நிறுவுவதற்கு தீர்ப்பு அவசியமாகும்.

### 2.7.2 குறைவு மதிப்பீடு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து ஒன்றிற்கு அல்லது காசு பிறப்பாக்கல் அலகு ஒன்றுக்கு ஏதேனும் குறைவு குறிகாட்டிகள் உள்ளனவா என்பதை சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய தனிப்பட்ட சொத்தின் அல்லது காசு பிறப்பாக்கல் அலகிலிருந்து மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கும் மற்றும் உரிய காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பிடும் பொருட்டு ஒரு பொருத்தமான கழிவு வீதத்தினை தெரிவு செய்து கொள்வதற்கும் முகாமையினை தேவைப்படுத்தப்படுகின்றது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்கள் மற்றும் கழிவு வீதங்களைப் பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் இம் மதிப்பீடானது சபையினை தேவைப்படுத்தப்படுகின்றது ஆதலினால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன.

### 2.7.3 பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்கான ஏற்பாடு

சபையையானது சாதாரண வியாபார நடவடிக்கையில் இதற்கு எதிரான சட்ட ரீதியான உரிமைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் வெற்றியீட்டும் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் சாத்தியப்பாடு தொடர்பில் தீர்வுகளை முகாமையானது மேற்கொண்டுள்ளது. சாத்தியமான பொருளாதார நன்மை வெளிப் பாய்ச்சல் தொகை காணப்படுவதனால் சட்ட உரிமைக் கோரிக்கையை முடிவுறுத்தும் காலமானது நிச்சயமற்றது. கால அளவும் கிரயமும் இறுதியாக உரிய சட்ட நியாயாதிக்கங்களிலுள்ள உரிய செய்முறையில் தங்கியுள்ளன.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் வழக்கு ஏற்பாட்டுக்காக மொத்த சட்டக் கோரிக்கைகளில் 15% வீதத்தை வழங்குவதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

## 2.8 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.8.1 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

சபையின் நிதியில் கூற்றுகள், சபை பயன்படுத்தும் நாணயமான இலங்கையின் ரூபா நாணயத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்நியச் செலவாணிகளிலான மாற்றங்களானவை கொடுக்கல் வாங்கல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணி வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

அந்நியச் செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடல் திகதியில் நிலவும் தொழிற்பாட்டுச் செலாவணிப் பரிமாற்ற வீதத்தில் மீள்மாற்றப்படுகின்றன. அனைத்து வேறுபாடுகளும் இலாப அல்லது நட்டக்கூற்றுக்கு எடுக்கப்படுகின்றது.

### 2.8.2 நிதிசாராச் சொத்துக்கள் குறைவடைதல்

சொத்தொன்று குறைவடையலாம் என்னும் குறிகாட்டியொன்று உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சபையானது மதிப்பிடுகின்றது. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான வருடாந்த குறைவடைதல் பரிசோதிப்பு தேவைப்படுத்தப்படும் போது சபையானது சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. சொத்தொன்றின் மீளப்பெறக்கூடிய தொகையானது விற்பதற்கான கிரயங்கள் மற்றும் அதன் பாவனைப் பெறுமதி என்பவற்றைக் கழித்து சொத்தொன்றின் அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகளின் உண்மைப் பெறுமதியிலும் அதிகமாகும் தனிப்பட்ட சொத்தொன்றுக்கான மீளப்பெறக்கூடிய தொகையானது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக் கூட்டங்களிலிருந்தானவற்றிலிருந்து பெருமளவு சுயாதீனமான காசு உட்பாய்ச்சல்களை அச் சொத்து பிறப்பிக்காதிருந்தாலொழிய வரையறுக்கப்படும். சொத்தொன்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது அல்லது காசுப் பிறப்பாக்கல் அலகுகள் அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் அதிகமாகவிருக்குமிடத்து அச் சொத்தானது குறைவடைகின்றது எனக் கருதப்பட்டு அதன் மீளப் பெறக்கூடிய தொகைக்கு குறைத்து விடப்படும், பாவனைப் பெறுமதி மதிப்பீட்டில், மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களானவை குறித்தான ஆபத்துகளையும் பிரதிபலிக்கும் முன்-வரி கழிவு வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்குக் கழிவிடப்படுகின்றன. விற்பதற்கான கிரயங்களைக் கழித்த உண்மைப் பெறுமதியினை வரையறுப்பதில் அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பின் அத்தகைய பரிவர்த்தனைகளை அடையாளம் காண முடியாவிட்டால், பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.

அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இனங்காணப்பட முடியாதிருப்பின் பொருத்தமான விலைமதிப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும். குறைவடைந்த சொத்தின் தொழிற்பாட்டுடன் ஒத்திசையும் அச்செலவின் வகுதிகளில் வருமானக்கூற்றில் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் குறைவடைதல் நட்டங்கள் இனங்காணப்படும்.

### 2.8.3 நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்

சபையானது நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் குறைவடைகின்றதா என மதிப்பீடு செய்கின்றது. ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இச் சபையானது மதிப்பிடுகின்றது.

சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்டுள்ள ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் (நேரிட்ட "இழப்பு நிகழ்வு" ஒன்று) விளைவாக குறைவின் யதார்த்தமான சான்று இருப்பின் அத்துடன் நம்பகரமான மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துக் கூட்டத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு தாக்கத்தினை அந்த இழப்பு நிகழ்வு கொண்டிருந்தால் மாத்திரமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக் கூட்டம் ஒன்று குறைவடைந்திருப்பதாகக் கருதப்படும்.

- **கடன்கரைப்புக் கிரயத்தில் நிதியியல் சொத்துக்களின் குறைப்பு**

கடன் கரைப்புக் கிரயத்தில் சொத்துக்கள் மீது குறைப்பு நட்டம் சான்றாக அவதானிக்கப்பட்டால், குறைப்பு இழப்பின் அளவு சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணத்தின் தற்போதைய மதிப்புக்கும் (எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளைத் தவிர) அளவிடப்படுகின்து, நிதிச் சொத்தின் அசல் பயனுள்ள வட்டி விகிதத்தில் தள்ளுபடி செய்யப்படுகின்றது. சொத்தின் கொண்டு செல்லும் தொகை குறைக்கப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் நட்டமாக பதிவுசெய்யப்படுகின்றது.

சபையானது முதலில் குறைபாடுகளுக்கான புறநிலைச் சான்றுகள் தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துக்களுக்கு தனித்தனியாக இருக்கின்றதா, தனித்தனியாக அல்லது கூட்டாக தனித்தனியாக கையொப்பமிட முடியாத சொத்துக்கள் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. தனித்தனியாக மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களுக்குக் குறைபாடுகளுக்கான புறநிலை சான்றுகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டால், குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொத்து ஒத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுகின்றது மற்றும் அந்த நிதிச் சொத்துக்களின் கூட்டம் பலவீனத்திற்காகக் கூட்டாக மதிப்பிடப்படுகின்றது. குறைபாட்டிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படும் மற்றும் குறைபாட்டு இழப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் குறைபாடுகளின் கூட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் குறைபாடு மதிப்பீடு செய்யப்படுகின்றது.

அடுத்தடுத்த காலகட்டத்தில், குறைபாடு இழப்பின் அளவு குறைந்த, குறைபாடு அங்கீகரிக்கப்பட்ட பிறகு நிகழும் ஒரு நிகழ்வுக்கு புறநிலை ரீதியாக தொடர்புடையதாக இருந்தால், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாடு இழப்பு மாற்றப்படும். அந்தச் சொத்தின் எடுத்துச் செல்லும் மதிப்பு திருப்பப்பட்ட திகதியில் அதன் கடன்கரைப்புத் தொகையைத் தாண்டாத அளவுக்கு ஒரு குறைபாடு இழப்பின் எந்த மாற்றமும் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

- **விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் கருவிகள் குறைவடைதல்.**

விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சொத்து குறைப்புடையதாக இருந்தால், அதன் செலவுகள் (ஏதேனும் முதன்மை திருப்பிச் செலுத்துதல் மற்றும் ஈடுசெய்யும் நிகர) மற்றும் அதன் தற்போதைய நியாயமான மதிப்பு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு அடங்கிய தொகை, மற்ற வருமான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட குறைபாடு இழப்பு குறைவாக இருந்து விரிவான வருமான அறிக்கையின் சமநிலை விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தியுள்ள சமபங்கு கருவிகள் தொடர்பான மீள் திருப்பம் விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படவில்லை.

விரிவான வருமானக் கூற்றின் ஊடாக விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் என வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகள் மீதான குறைப்பு நட்டங்களின் திருப்பங்களானது திருப்பப்பட்டது, கருவிகளின் உண்மைப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டால், விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்ட குறைப்பு நட்டங்களின் பின்னர் எழுகின்ற நிகழ்வுக்கு புறள்நிலையாக இருக்கும்.

- **கிரயத்தில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களின் குறைவடைதல்**

நியாயமான மதிப்பில் எடுத்துச் செல்லப்படாத மேற்கோள் காட்டப்படாத உரிமைப்பங்கு கருவியில் குறைபாடு இழப்பு ஏற்பட்டதற்கான புறநிலை சான்றுகள் இருந்தால், அதன்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

நியாயமான மதிப்பை நம்பத்தகுந்த அளவீடு செய்ய முடியாது, அல்லது ஒரு வழித்தோன்றல் சொத்தின் மீது இணைக்கப்பட்ட மற்றும் அதை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுதல் வேண்டும் மேற்கோள் காட்டப்படாத உரிமைப்பங்கு கருவி, குறைப்பாட்டு இழப்பின் அளவில் நிதியியல் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் எதிர்கால மதிப்பீடு செய்யப்பட்ட தற்போதைய பண மதிப்புக்கும் இடையிலான வித்தியாசம் அளவிடப்படுகின்றது.

### 2.8.4 ஏற்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள்

கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக தற்காலக் கடப்பாடு ஒன்றினை (சட்ட அல்லது உட்கிடையான) சபையானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அத்துடன், பொருளாதார நலன்கள் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், ஒரு நம்பகரமான மதிப்பீடானது கடப்பாட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட முடியும். சபையானது ஏற்பாடொன்றின் சிலவற்றை அல்லது சகலதையும் மீளளிக்கப்பட எதிர்பார்க்குமிடத்து மீளளிப்பானது மென்நிகராக நிச்சயமாக இருக்கும் போது மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளிப்பு இனங்காணப்படும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புபட்ட செலவினமானது ஏதேனும் தேறிய மீளளிப்பு வருமானக் கூற்றில் முன்னளிக்கப்படும். பணத்தின் நேரப் பெறுமதியின் விளைவானது அடிப்படையானதாகவிருப்பின் பொருத்தமானவிடத்து, பொறுப்புக் குறித்தான ஆபத்துக்களைப் பிரதிபலிக்கும் நிகழ்கால முன் வரி வீதம் ஒன்றினைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவிடப்படுகின்றன. கழிவிடல் பயன்படுத்தப்படுமிடத்து காலம் முன்நோக்கிச் செல்வதன் காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது நிதிக் கிரயம் ஒன்றாக இனங்காணப்படுகின்றது.

சபையின் கருத்துப்படி, தற்போது நிறுவனத்திற்கு எதிராக இருக்கும் வழக்குகள், சாதாரண வணிகப் போக்கில் அறிக்கையிடப்பட்ட நிதி முடிவுகள் அல்லது சபையின் எதிர்கால செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது.

### 2.8.5 காசுப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கியல் நியமம் (SLFRS) 7 - காசுப் பாய்ச்சல் கூற்றுகளுடன் இணங்கும் வகையில் "மறைமுக முறையினை" பாவித்து காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படுகின்றது. கிடைக்கப்பெறும் வட்டிகள் முதலீட்டு காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது, காசு மற்றும் காசுக்கு சமனானவை குறுகிய கால, உயர் திரவ முதலீட்டுகளை உள்ளடக்கியுள்ளது, இவை உடனடியாக காசாக மாற்றப்படக் கூடியவை என அறியப்படுவதுடன் மதிப்பில் ஏற்படும் மாற்றத்திற்கு உட்படுபவையாகும். காசு மற்றும் காசுக்குச் சமனானவை கையிலுள்ள காசு மற்றும் வங்கியில் உள்ள மீதியை உள்ளடக்கியுள்ளது. காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்காக, வங்கியின் தேறிய மிகைப்பற்று காசு மற்றும் காசுக்கு சமனானவையாக வெளிப்படுத்தப்படுகின்றது,

### 2.8.6 புதிய நியமங்களும் பொருள்விளக்கங்களும் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

அ) இலங்கை நிதி அறிக்கை தரநிலை (SLFRS) 17- காப்புறுதி ஒப்பந்தங்கள்

இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவனம் SLFRS 17 - காப்புறுதி ஒப்பந்தங்களை ஜனவரி 2020 இல் வழங்கியது, இது 01/01/2023 அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் வருடாந்த காலங்களுக்கு நடைமுறைக்கு வரும். இந்த புதிய தரநிலையானது SLFRS 4 - காப்புறுதித் தொடர்புகளை முறியடிக்கிறது. ஆலோசனை நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் IFRS 17ஐ செயல்படுத்துவதற்கான பணிகளைத் தொடங்க சபை எதிர்பார்க்கிறது.

ஆ) இலங்கை நிதி அறிக்கை தரநிலையின் (SLFRS) திருத்தங்கள் ஆனால் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

இலங்கை கணக்கியல் நியமங்களுக்குக் கீழ்க்கண்ட திருத்தங்கள் 01 ஜனவரி 2022 முதல் நடைமுறைக்கு வந்தன. அதன்படி, நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் பின்வரும் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

(i) SLFRS 09 இல் திருத்தம்- நிதி பொறுப்புகளை அங்கீகரிப்பதற்காக "10 சதவிகிதம்" கட்டணம்

(ii) SLFRS 03க்கான திருத்தங்கள் - கருத்தியல் கட்டமைப்பின் குறிப்பைப் புதுப்பித்தல்

(iii) LKAS 41-க்கு திருத்தம் - நியாயமான மதிப்பு அளவீடுகளில் வரிவிதிப்பு.

## 3 தொழிற்பாட்டுப் பிரிவுகள்

தொழிற்பாட்டுப் பிரிவானது நிறுவனத்தின் ஒரு அங்கமாகும்.

(அ) இது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது, அதில் இருந்து வருமானங்களை உழைக்கலாம் மற்றும் செலவுகள் ஏற்படலாம் (அதே நிறுவனத்தின் ஏனைய அங்கங்களுடனான கொடுக்கல் வாங்கல் தொடர்பான வருமானங்கள் மற்றும் செலவுகள் உள்ளடங்கலாக)

(ஆ) அந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட வளங்கள் தொடர்பாகத் தீர்மானங்களை எடுப்பதற்கும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காகவும் அவர்களின் தொழிற்பாட்டு பெறுபேறுகள் ஒழுங்குமுறையில் நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டுத் தீர்மானம் எடுப்பவரினால் மீளாய்வு செய்யப்படுகின்றது மற்றும்

(இ) எந்த தனித்துவமான நிதியியல் தகவல்களை கிடைக்கப் பெறுவதற்கு

முகாமைத்துவ நோக்கத்திற்காக, சபை பண்டங்கள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் பிரதான வியாபாரத்தை நான்கு வியாபார பகுதிகளாக பிரதான வியாபாரத்தை ஒழுங்கு செய்துள்ளதுடன் நான்கு அறிக்கையிடக்கூடிய பிரிவுகளும் உள்ளன.

கீழே அறிக்கையிடப்பட்ட பிரிவுகளின் தகவல்கள் வளங்களின் ஒதுக்கீடு மற்றும் செயலாற்றுகையின் மதிப்பீட்டிற்காக பிரதான தொழிற்பாட்டு தீர்மானம் எடுப்பவரினால் பயன்படுத்தப்படுகின்றது.

- பொது - மோட்டார் காப்புறுதி
- பொது - மோட்டார் அல்லாத காப்புறுதி
- அக்ரஹார
- என்என்டிஎஸ்
- மீள்காப்புறுதி
- எஸ்ஆர்சிசி அன்ட் ட
- பயிர்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

கீழே குறிப்பிடப்பட்ட பண்ட வகைகளுக்கான பொறுப்பேற்றல் விளைவுகளுக்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

| | 2021 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மோட்டார் | மோட்டார் அல்லாதவை | தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம் | மீள்காப்புறுதி | வே.க.சி.ப | சுகாதார திட்டம் அக்ரஹார/பா.உ | பயிர் காப்புறுதித் திட்டம் | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **தவணைக் கட்டணம்** | | | | | | | | |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள் | 175,571,681 | 132,482,523 | - | 3,548,784,649 | 6,754,133,669 | 20,000,000 | - | 10,630,972,523 |
| அக்ரஹாரவில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு | - | - | - | - | - | 6,283,159,919 | - | 6,283,159,919 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதித் தீர்வை | - | - | - | - | - | - | 2,193,825,976 | 2,193,825,976 |
| ஒப்படைக்கப்பட்ட மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் | - | - | (123,387,679) | (466,292,684) | - | - | - | (589,680,363) |
| **தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்** | **175,571,681** | **132,482,523** | **(123,387,679)** | **3,082,491,965** | **6,754,133,669** | **6,303,159,919** | **2,193,825,976** | **18,518,278,055** |
| UPR இல் மொத்த மாற்றம் | 27,580,952 | 35,869,369 | - | (109,658,643) | (362,232,857) | - | - | (408,441,178) |
| UPR இல் மீள்காப்புறுதி பங்கு மாற்றம் | - | - | - | (653,409,837) | (77,522,640) | - | - | (730,932,477) |
| உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கத்தின் தேறிய மாற்றம் | 27,580,952 | 35,869,369 | - | (763,068,480) | (439,755,497) | - | - | (1,139,373,655) |
| **உழைக்கப்பட்ட தேறிய தவணைக்கட்டணங்கள் (அ)** | **203,152,634** | **168,351,892** | **(123,387,679)** | **2,319,423,485** | **6,314,378,172** | **6,303,159,919** | **2,193,825,976** | **17,378,904,399** |
| கட்டண வருமானம் (ஆ) | 1,306,795 | 22,898 | | | | | | 1,329,693 |
| **மொத்த பொறுப்பேற்றல் வருமானம் (அ + ஆ)** | **204,459,429** | **168,374,790** | **(123,387,679)** | **2,319,423,485** | **6,314,378,172** | **6,303,159,919** | **2,193,825,976** | **17,380,234,093** |
| கைக்கொள்ளல் ஆகுசெலவு | (47,836) | (6,033,981) | - | (720,168,759) | (1,087,484,898) | - | - | (1,813,735,475) |
| இலாப ஆணைக்குழு செலவு | - | - | - | - | (115,032,536) | - | - | (115,032,536) |
| பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்தில் மாற்றம் | - | (16,865) | - | 6,001,212 | 58,862,926 | - | - | 64,847,273 |
| **தேறிய கைக்கொள்ளல் கிரயம் (இ)** | (47,836) | (6,050,846) | - | (714,167,547) | (1,143,654,508) | - | - | (1,863,920,737) |
| மொத்த உற்றறப்பட்ட கோரிக்கைகள் | (193,264,456) | (193,396,401) | (9,016,333) | (2,114,353,891) | (2,039,823) | (6,133,924,646) | (325,073,914) | (8,971,069,465) |
| மீள்காப்புறுதி அறவீடுகள் | - | | | | | | | |
| IBNR இல் மாற்றம் | (9,090,486) | (44,250,304) | 15,591,777 | (264,761,256) | (34,859,156) | (625,467,045) | (827,375,110) | (1,790,211,581) |
| **கொடுப்பனவு செய்யப்பட்ட தேறிய கோரிக்கைகள்** | (202,354,942) | (237,646,705) | 6,575,444 | (2,379,115,147) | (36,898,979) | (6,759,391,691) | (1,152,449,025) | (10,761,281,045) |
| நிலுவைக் கோரிக்கைகளில் மீள்காப்புறுதி பங்கின் மாற்றம் | - | - | | | | | | |
| உற்றறப்பட்ட தேறிய கோரிக்கைகள் (ஈ) | (202,354,942) | (237,646,705) | 6,575,444 | (2,379,115,147) | (36,898,979) | (6,759,391,691) | (1,152,449,025) | (10,761,281,045) |
| **பொறுப்பேற்றல் பெறுபேறு (அ+ஆ+இ+ஈ)** | **2,056,651** | **(75,322,761)** | **(116,812,236)** | **(773,859,209)** | **5,133,824,686** | **(456,231,772)** | **1,041,376,952** | **4,755,032,310** |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

4 வருமானம்

5 மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

கணக்கீட்டுக் கொள்கை - காப்புறுதியின் பண்ட வகை மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள், காப்புறுதி இடர் பரிமாற்ற மட்டக் காப்புறுதியாளரினால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள், காப்புறுதி இடர் பரிமாற்ற அளவைப் பொறுத்து “காப்புறுதி ஒப்பந்தங்கள்” அல்லது “முதலீட்டு ஒப்பந்தங்கள்” என வகைப்படுத்தப்பட வேண்டும்.

காப்புறுதி ஒப்பந்தங்கள் என்பது சபையினால் (காப்புறுதியாளர்) ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு (காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு) காப்புறுதிப் பூட்கையாளர்களை மோசமாகப் பாதித்தால், காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஒப்புக்கொள்வதன் மூலம் மற்றொரு தரப்பினரிடமிருந்து (காப்புறுதிப் பூட்கையாளர்கள்) குறிப்பிடத்தக்க காப்புறுதி இடரை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்கள் ஆகும்.

ஒரு பொது வழிகாட்டியாகக், காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு நடக்கவில்லை என்றால், செலுத்த வேண்டிய நன்மைகளுடன் ஒப்பிடுவதன் மூலம், அது குறிப்பிடத்தக்க காப்புறுதி இடரைக் கொண்டிருக்கின்றதா எனச் சபை தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்களால் நிதி இடரை மாற்றவும் முடியும்.

முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பது குறிப்பிடத்தக்க நிதி இடரை இடம்மாற்றும் மற்றும் குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர் இடமாற்றம் அல்லாத ஒப்பந்தங்கள் ஆகும். நிதி இடர் என்பது ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எதிர்கால மாற்றத்திற்கான இடர் ஆகும், நிதியியல் கருவி விலை, நுகர்வுப் பண்டத்தின் விலை, வெளிநாட்டு நாணய வீதம், விலைச் சுட்டெண் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கடன் சுட்டெண் அல்லது ஏனைய மாறிலிகள் ஆகியவற்றில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடமாற்ற இடர் ஆகும். ஒரு நிதியல்லாத மாறிகள், அந்த ஒப்பந்தத்திற்கு அந்தத்தரப்பினருக்கு குறித்துரைக்கப்படவில்லை.

ஒரு காப்புறுதி ஒப்பந்தம் ஒரு காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டவுடன், இந்தக் காலகட்டத்தில் அனைத்து உரிமைகளும் கடமைகளும் முடிவடையாமல் அல்லது காலாவதியாகும் வரை, காப்புறுதி இடர் குறிப்பிட்டளவு குறைக்கப்பட்டாலும், அதன் வாழ்நாள் முழுவதுமான ஒப்பந்தமாக இருக்கும். இருப்பினும், காப்புறுதி இடர் குறிப்பிடத்தக்கதாக இருந்தால், முதலீட்டு ஒப்பந்தங்களை ஆரம்பித்ததன் பின்னர் காப்புறுதி ஒப்பந்தங்களாக மீள வகைப்படுத்தப்படலாம்.

சபையினால் விற்கப்படும் அனைத்துத் தயாரிப்புகளும் காப்பீட்டு ஒப்பந்தங்கள், எனவே SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்களின் கீழ் காப்பீட்டு ஒப்பந்தங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு, சபை அதன் தயாரிப்பு வெட்டுமுகத்தினுள் எந்த முதலீட்டு ஒப்பந்தங்களையும் அறிக்கையிடல் திகதியில் கொண்டிருக்கவில்லை.

கணக்கியல் கொள்கை - மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை அங்கீகரிப்பது அபாயங்களைக் குறைப்பதற்காக சபை வசூலிக்கும் தவணைக் கட்டணத்தைக் குறிக்கின்றது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது.

ஆயுள் அல்லாத காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அந்தக் கணக்கீட்டு காலப்பகுதியினுள் ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தத்தினுள் வரும்போது மொத்தத் தவணைக் கட்டணம் கிடைக்கப்பெற்ற/கிடைக்க வேண்டியவற்றை உள்ளடக்கியுள்ளது. தவணைக் கட்டண விகிதத்தின் ஒரு பகுதியை உருவாக்கும் தள்ளுபடிகள், அதாவது கோரிக்கை தள்ளுபடிகள் இல்லை, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் இருந்து கழிக்கப்படுகின்றன, வணிகத்தின் முக்கிய வகுப்புகளின் ஆண்டிற்கான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் பின்வருமாறு.

| | 2021<br>ரூபா. | 2020<br>ரூபா |
|---|---|---|
| **மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணங்கள்** | | |
| வருடத்திற்கான தவணைக் கட்டண வருமானம் பிரதான வியாபார வகைகளாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | | |
| உள்முக மீள்காப்புறுதி | 3,548,784,649 | 3,235,474,242 |
| SRCC & Tr தவணைக் கட்டணம் | 6,754,133,669 | 6,088,496,099 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் | 175,571,681 | 260,600,235 |
| பொதுக் காப்புறுதி - மோட்டார் அல்லாதவை | 132,482,523 | 213,469,435 |
| தேசிய இயற்கை அனர்த்தத் திட்டம (NNDIS) | - | - |
| பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கான மருத்துவத் திட்டம் | 20,000,000 | 20,000,000 |
| | 10,630,972,523 | 9,818,040,011 |
| **அக்ரஹாரா மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு சேகரிக்கப்பட்டது** | | |
| அங்கத்தவர்களிடமிருந்தான பங்களிப்பு | 4,778,171,594 | 4,090,359,038 |
| திறைசேரியிடமிருந்தான பங்களிப்பு | 824,000,000 | 782,000,000 |
| ஓய்வூதியதாரர்களின் காப்புறுதித் திட்டம் | 236,438,800 | 166,837,400 |
| அரச சார் துறையினருக்கான திட்டம் | 444,549,525 | 430,102,300 |
| | 6,283,159,919 | 5,469,298,738 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 6 உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம்

கணக்கீட்டுக் கொள்கை - உழைக்கப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஒதுக்கு மாற்றம் என்பது உழைக்கப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு வருடத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் பகுதியைக் குறிக்கின்றது, ஆனால் காலாவதியான காலாவதி காலத்துடன் தொடர்புடையது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி கைத்தொழில் நடைமுறைகளுக்கு ஏற்ப மோட்டார் காப்புறுதி மற்றும் மோட்டார் அல்லாத காப்புறுதி மற்றும் அக்ரஹார உடல்நலத் திட்டம், எஸ்ஆர்சீசீக்கு 1/24ஆவது அடிப்படை மற்றும் 35% மீள்காப்புறுதிக்கான மொத்தத் தவணைக் கட்டண அடிப்படையில் 365ஆவது அடிப்படையில் கணக்கிடப்படாத தவணைக் கட்டணங்கள் கணக்கிடப்படுகின்றன. காப்புறுதியல்லாத காப்பீட்டு பிரிமியத்திற்கான ஒதுக்கு மாற்றமானது, காப்புறுதிப்பூட்கைகளின் காலாவதியான காலத்தை ஈடுசெய்யும் ஆண்டின் போது பெறப்படாத தவணைக் கட்டண ஒதுக்குக்கு மாற்றப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் நிகரப் பகுதியைக் குறிக்கின்றது.

## 7 மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம்

கணக்கியல் கொள்கை - மீள்காப்புறுதியாளர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம் எழுதப்பட்ட ஆயுள் அல்லாத மொத்த மீள்காப்புறுதித் தவணைக் கட்டணம் ஒப்பந்தத்திற்கு வந்த காலத்தின் முழுக்காலத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்தத் தவணைக்கட்டணத்தை உள்ளடக்கியுள்ளதை அடையாளம் காணுதல் மற்றும் பூட்கை ஆரம்பிக்கப்பட்ட திகதி மீது அடையாளம் காணுதல் கணக்கீட்டுக் காலங்களுக்கு முன்னராக ஆரம்பிக்கப்பட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பாக எழும் ஏதேனும் சீராக்கங்களையும் தவணைக் கட்டணம் உள்ளடக்கியுள்ளது.

## 8 உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம்

கணக்கியல் கொள்கை - உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கில் மாற்றம் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடர் காலத்துடன் தொடர்புடைய வருடத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் விகிதாசாரமாக உழைக்கப்படா மீள்காப்புறுதித் தவணைக்கட்டணம் இருக்கும். உழைக்கப்படாத மீள்காப்புறுதித் தவணைக்கட்டணம் நேரடிக் காப்புறுதிப் பூட்கைகளின் அடிப்படை நியதிகளின் மீது பிற்போடப்படும் பூட்கைகளின் எதிர்பாரத காலத்தினைக் காப்பீடு செய்வதற்கு அந்த வருடத்தின் உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான தவணைக் கட்டணத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட தேறிய மீள்காப்புறுதியின் தேறிய பங்கினை உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான ஒதுக்கீட்டு மாற்றம் பிரதிபலிக்கின்றது.

## 9 தேறிய கோரிக்கைகள்

கணக்கீட்டுக் கொள்கை - அறிக்கையிடப்பட்டதோ அல்லது அறிக்கையிடப்படவில்லையோ, வெளிவாரிக் கோரிக்கைகள் தொடர்பான செயன்முறைப்படுத்துவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஏதேனும் கையாளுகை ஆகுசெலவு மற்றும் கோரிக்கைகளின் தீர்ப்பனவு, காப்பின் பெறுமதிக்கான ஒரு குறைப்பு மற்றும் ஏனைய மீட்புகள் மற்றும் முன்னைய வருடங்களில் இருந்து வரும் கோரிக்கை நிலுவைகளுக்கு ஏதேனும் சீராக்கங்கள் என அந்த வருடத்தினுள் நிகழும் அனைத்துக் கோரிக்கைகளை உள்ளடக்கி ஆயுள் அல்லாத காப்புறுதிக்கான மொத்தக் கோரிக்கைகளை அடையாளம் காணுதல் தனிப்பட்ட கோரிக்கைக் கோப்பினை மீளாய்வு செய்வதன் ஊடாக மற்றும் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உண்மையில் செலவாகும் செலவு என்பவற்றை மதிப்பீடு செய்து கோரிக்கை நிலுவைகள் மதிப்பீடு செய்யப்படும்.

கோரிக்கைச் செலவு மற்றும் பொறுப்புகளுக்கான கோரிக்கை நிலுவைகள் நேரடிக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக அடையாளம் காணப்படுகின்றன. பொறுப்பு பூட்கைக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கான உற்றறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்க்கும் நேரடி மற்றும் நேரடியல்லாத ஆகுசெலவுகள் அறிக்கையிடப்பட்டது, ஆனால் இந்தக் கோரிக்கைகள் இன்னும் கொடுப்பனவு செய்யப்படவில்லை. உற்றறப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத கோரிக்கைகளுக்கான ஏற்பாடு, கடந்த கால அனுபவம் மற்றும் போக்கினை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலப் பொறுப்பினை யதார்த்தமாக மதிப்பீடு செய்வதற்கு நடைமுறையில் காலாண்டு அடிப்படையில் பெறுமதி கணிப்பீடு செய்யப்படுகின்றது.

அதேவேளையில் பணிப்பாளர்கள் கோரிக்கைக்கான ஏற்பாடுகள் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் நியாயமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்கின்றனர், அடுத்தடுத்த தகவல்கள் மற்றும் நிகழ்வுகளின் விளைவாக உண்மையான பொறுப்பு மாறுபடும். இதன் பெறுபேறாக வழங்கப்பட்ட தொகைக்கு சீராக்கங்கள் காணப்படும். அந்தத் தொகைகள் அந்தக் காலத்திற்கான நிதிக்கூற்றுகளில் பிரதிபலிக்கின்றன. மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கை - மீள்காப்புறுதிக் கோரிக்கைகளை அடையாளம் காணுதல் - உரிய ஒப்பந்தங்களின் நியதிகளுக்கு அமைவாகத் தொடர்புடைய மொத்தக் காப்புறுதிக் கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்ட போது மீள்காப்புறுதிக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கருதப்பட்ட மீள்காப்புறுதி மீதான கோரிக்கைகள், மீள்காப்புறுதியானது நேரடி வியாபாரம் எனக் கருதப்பட்டால் வருமானம் அல்லது செலவாக மீள்காப்புறுதி பண்ட வகைப்படுத்தல் கணக்கில் சேர்க்கப்பட்டு அதேவகையில் அடையாளம் காணப்படுகின்றன.

## 10 பொறுப்பேற்றல் மற்றும் கைக்கொள்ளல் கிரயங்கள்

கணக்கீட்டுக் கொள்கை - பொற்றுப்பேற்றல் மற்றும் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயங்களை அடையாளம் காணல். கைக்கொள்ளல் செலவுகள், தரகுகளை வெளிப்படுத்தல் என்பன வியாபாரச் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புடையதுடன் மாறுபடுவன, எந்தக் காலத்தில் எழுதப்பட்ட தவணைக் கட்டணம் உழைக்கப்பட்டதோ அதனுடன் தொடர்புடைய காலத்திற்குப் பிற்போடப்படுவதுடன் கடன்கரைப்பு செய்யப்படுகின்றது.

மீள்காப்புறுதித் தரகும் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்திற்குள் அதேவகையில் நடத்தப்படுகின்றது

## 11 ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள்

கணக்கீட்டுக் கொள்கை - ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகளை அடையாளம் காணல். ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக்கூற்றில் வியாபாரத்தைக் கொண்டு நாடாத்துவதற்கு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தைப் பாராமரித்தல் தொடர்பாக உற்றறப்பட்ட ஏனைய செலவுகள் அனைத்தும் அறவிடப்படுகின்றன.

### ஊழியர் செலவுகள்

கணக்கீட்டுக் கொள்கை - குறுகிய கால ஊழியர் நன்மைகள். குறுகிய கால ஊழியர் நன்மைக் கடப்பாடுகள் கழிப்பனவல்லாத அடிப்படையில் அளவிடப்படுவதுடன், வழங்கப்பட்ட சேவையுடன் தொடர்புடையதாகச் செலவிடப்படுகின்றது. ஊழியரின் கடந்த கால சேவையின் விளைவாக இந்தத் தொகையை செலுத்துவதற்குச் சபையானது சட்ட ரீதியாக அல்லது ஆக்கபூர்வமான கடமையைக் கொண்டுள்ளதாக வெளிப்படுத்தினால் மற்றும் அந்தக் கடப்பாடானது மெய்யாக மதிப்பிடக்கூடியதாக இருந்தால், பொறுப்பாக குறுகிய கால காசு மிகைக்கொடுப்பனவு அல்லது இலாப பங்கீட்டுத் திட்டங்களின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை அடையாளம் காணப்படுகின்றது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

கணக்கீட்டுக் கொள்கை - வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள். வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த ஏனைய பின்னைய ஊழியர் நன்மைத் திட்டமாகும். இலாப அல்லது நட்டக் கூற்றில் ஊழியர் செலவுகளின் கீழ் வரையறுக்கப்பட்ட நன்மை கடப்பாடுகளில் மாற்றங்கள் உள்ளது என சபையால் அடையாளம் காணப்பட்டவை.

மேலதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகளுக்கான குறிப்பு 34ஐப் பார்க்கவும்.

(அ) தற்போதைய சேவை ஆகுசெலவு

(ஆ) வட்டி ஆகுசெலவு

கணக்கீட்டுக் கொள்கை - வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் என்பது ஒரு நிறுவனம் வேறொரு நிறுவனத்திற்குச் செய்யும் நிலையான பங்களிப்பாகும் மற்றும் இவை மேலும் தொகையைச் செலுத்துவதற்கான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு எதுவும் இல்லாதவையுமாகும். இலாப அல்லது நட்டக் கூற்றில், அவை நிலுவையாக உள்ள போது, ஊழியர் நன்மைச் செலவாக அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி அடையாளம் காணப்பட்ட ஊழியர் நன்மைச் செலவாக அடையாளம் காணப்பட்ட 1958ஆம் ஆண்டு 15ஆம் இலக்கத் திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 1980ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் கீழான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் கீழ் மேற்கொள்ளும் பங்களிப்புகளுக்கான தேவைப்பாடுகள்.

## 12 கட்டண வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை - பூட்கை நிர்வாகச் செலவுகள் மற்றும் ஏனைய ஒப்பந்தக் கட்டணங்களுக்காக அறவிடப்பட்டவைகள் பூட்கையாளர்களுக்கான கட்டணமாக அடையாளம் காணுதல். இந்தக் கட்டணங்கள் கிடைக்கப் பெற்றால் அல்லது நிலுவையாக இருந்தால் வருமானமாக அடையாளம் காணப்படும்.

## 13 தேறிய மெய்ப் பெறுமதி ஈட்டுகைகள்

மெய்ப் பெறுமதி ஈட்டுகைகள் மற்றும் இழப்புகளை அடையாளம் காணல். முதலீடுகளின் மீது இலாப மற்றும் நட்டக் கூற்றில் தேறிய மெய்ப் பெறுமதியாகப் பதிவுசெய்யப்பட்டவைகளினுள் நிதியியல் சொத்துக்களின் மீதான ஈட்டுகைகள் மற்றும் இழப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலீடுகளின் விற்பனையின் மீதான ஈட்டுகைகள் மற்றும் இழப்புகள் தேறிய சொத்து விற்பனை வருமானம் மற்றும் அசல் அல்லது கடன்கரைப்புக் கிரயத்திற்கு இடையிலான வேறுபாடு கணிப்பீடு செய்யப்படுவதுடன் விற்பனைக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழும் போது பதிவுசெய்யப்படுகின்றன.

## 14 ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அழிவு மீட்பு, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான அகற்றல் ஈட்டுகைகள்.'.(நட்டங்கள்) மற்றும் நானாவித வருமானத்தை உள்ளடக்குகின்றன. அந்தக் காலப்பகுதியில் ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்படும் மற்றும் விற்பனை நிகழ்கின்றது என அடையாளம் காணப்படும் ஆதனம், பொறி மற்றும் உபரகணங்கள் மீதான இலாபம் அல்லது நட்டம்.

## 15 வரிக்கு முன்னரான இலாபம்

கீழ்வரும் செலவுகள் அறவிட்டதன் பின்னர் அந்த வருடத்திற்கான வரிக்கு முன்னரான இலாபம் குறிப்பிடப்படும்.

## 16 வருமான வரிச் செலவுகள்

வருமான வரிச் செலவாக அடையாளம் காணுதல். தற்போதைய வருமான வரி வருமான வரிச் செலவாக அடையாளம் காணப்படுகின்றது. தற்போதைய வருமான வரிகள் அடையாளம் காணப்படுகின்றன.

**வருமான வரித் திருப்புதல்கள்/(செலவுகள்)**

31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டுகான வருமான வரியின் பிரதான ஆக்கக்கூறுகள் பின்வருமாறு:
இலாப நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரி
31 டிசம்பர் 2021 முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| தற்போதைய வருமான வரி | - | - |
| நடைமுறை வருட இலாபத்தின் மீதான வருமான வரி | 991,504,005 | 1,339,826,929 |
| முன்னைய வருடங்கள் தொடர்பான நடைமுறை வரிகளுக்கான மிகை/பற்றாக்குறை ஏற்பாடுகள் | - | - |
| **மொத்த வருமான வரி (திருப்புதல்)/செலவு** | 991,504,005 | 1,339,826,929 |

## 17 அருவச் சொத்துகள்

சபையின் அருவச் சொத்துகள் கைக்கொள்ளப்பட்ட கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்கியுள்ளது.

அருவச் சொத்தினை அடையாளம் காண்பதற்கான அடிப்படையாகச் சொத்துக் காரணமான அதனுடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்குக் கிடைக்கக்கூடியதாகவும், சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடவும் வாய்ப்புள்ளது எனில், அது அருவச் சொத்தாக அங்கீகரிக்கப்படும்.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாகக் குறிப்பிடப்படுகின்றது.

தொடர்ச்சியான கிரயம், ஆரம்ப அடையாளம் காணலைத் தொடர்ந்து அருவச் சொத்தின் பெறுமதி திரட்டிய கடன்கரைத்தல் மற்றும் திரண்ட குறைவு நட்டங்களைக் கழித்த கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றது.

அங்கீகரிக்கப்படுவதற்கான அடிப்படையானது, சொத்துக்குக் காரணமான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் சபைக்குக் கிடைப்பதுடன், சொத்தின் விலையை நம்பகத்தன்மையுடன் அளவிடவும் வாய்ப்புள்ளது எனில் ஒரு அருவமான சொத்து அங்கீகரிக்கப்படும்.

சபையினால் கைக்கொள்ளப்பட்ட மென்பொருள் செலவானது திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட குறைவு நட்டங்கள் என்பனவற்றைக் கழித்து வரும் கிரயமாக குறிப்பிடப்படுகின்றது.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

மென்பொருள் சொத்துக்களுக்கான அடுத்தடுத்த செலவுகள் அது தொடர்புடைய குறிப்பிட்ட சொத்தில் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரிக்கும் போது மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவுகளும் உற்றுப்பட்டதாக செலவழிக்கப்படுகின்றன.

கடன்கரைப்பு அருவச் சொத்துக்கள் நான்கு வருடங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையில் கடன்கரைப்புச் செய்யப்படுகின்றது. இலாப அல்லது நட்டக் கூற்றில் கடன்கரைப்பு பதிவுசெய்யப்படுகின்றது.

பயனுள்ள பொருளாதார ஆயுளின் மீது வரையறுக்கப்பட்ட ஆயுளுடன் அருவச் சொத்துக்கள் கடன்கரைப்பு செய்யப்படுகின்றன. ஒரு பயனுள்ள வரையறுக்கப்பட்ட ஆயுள் கொண்ட ஒரு அருவச் சொத்துக்கான கடன்கரைப்புக் காலம் மற்றும் கடன்கரைப்பு முறை குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு எதிர்பார்க்கப்படும் முறை, தகுந்தபடி, கடன்கரைப்புக் காலம் அல்லது கடன்கரைப்பு முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுகின்றன, மேலும் அவை கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அருவச் சொத்துகளின் செயற்பாட்டுடன் ஒத்துப்போகும் செலவு வகையில் இலாப அல்லது நட்டக் கூற்றில் வரையக்கப்பட்ட ஆயுளைக் கொண்ட அருவச் சொத்துகள் மீதான கடன்கரைப்புச் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

பின்வருவனவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளில் அவற்றின் மீதமுள்ள மதிப்புகளுக்கு அசையாச் சொத்துக்களின் விலையை எழுதுவதற்கு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி கடன் கரைப்பு கணக்கிடப்படுகின்றது.

அருவச் சொத்துக்களை ஐந்தொகையில் இருந்து அகற்றுதல். ஒரு அருவச் சொத்து அகற்றப்படும் போது அல்லது எதிர்கால நன்மைகளை எதிர்பார்க்காத போது, அது ஐந்தொகையில் இருந்து அகற்றப்படுகின்றது. அந்த அருவச் சொத்தை ஐந்தொகையில் இருந்து அகற்றுவதன் ஊடாக எழும் ஈட்டுகை அல்லது இலாபம், அது ஐந்தொகையில் இருந்து அகற்றப்படும் போது இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கை - அருவச் சொத்தின் குறைப்பு. குறைப்புக்கான அறிகுறி இருக்கும் போதெல்லாம் குறைப்பு மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. எப்போது கொண்டு செல்லும் பெறுமதியை விட மீட்சி பெறக்கூடிய தொகை குறைவாக இருக்கும் போது, இலாப அல்லது நட்டக் கூற்றில் குறைப்பு நட்டம் அடையாளம் காணப்படுகின்றது. மேலும், ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்குமான கடுமையான ஒப்பந்த ஏற்பாடுகளை நிறுவும் போது சேவைக்கான உரிமைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**17.1** முழுமையாக கடன்கரைப்பு செய்யப்பட்ட பயன்பாட்டிலுள்ள சொத்துகளின் பெறுமதி ரூ.பா 7,067,073 அறிக்கையிடல் திகதியில் முழுமையாக கடன்கரைப்பு பயன்பாட்டில் உள்ள அல்லது பயனற்ற அருவச் சொத்துகள். (2020 - 7,067,073).

**17.2** அருவச் சொத்துக்களின் உரிமைக் கட்டுப்பாடு. அருவச் சொத்துக்களின் உரிமையில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை மற்றும் பொறுப்புகளுக்கான பத்திரங்கள் என உறுதியளிக்கப்படவில்லை.

**17.3** 2020ஆம் ஆண்டு கைக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்களின் கைக்கொள்ளல் பெறுமதி (2020 - 21,543,462).

**17.4** அருவச் சொத்துக்களின் குறைப்பு மதிப்பீடு. பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2021 அன்று அருவச் சொத்துக்களின் காட்டிகளின் உத்தேசக் குறைப்பினை மதிப்பீடு செய்தது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், எந்தவொரு குறைப்புக் காட்டிகளும் அடையாளம் காணப்படவில்லை மற்றும் அதனால் அறிக்கையிடும் திகதியில் உரிய அருவச் சொத்துகளுடன் நிதியியல் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு குறைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

## 18 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கட்புலனாகும் சொத்துகளாகும், இவை சேவைக்காக அல்லது நிர்வாக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுவதுடன், இவற்றினை ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபரகணங்கள் அலுவலக உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்திகள், நானாவித சொத்துக்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை உள்ளடக்கியுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அங்கீகரித்தலின் அடிப்படைச் சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு சாத்தியமாயின் மற்றும் அந்தச் சொத்தின் கிரயத்தை மதிப்பிட முடியுமாயின் அது அங்கீகரிக்கப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அங்கீகரிப்பதற்கு ஆரம்பத்தில் அந்தச் சொத்து அதன் கிரயத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இந்தக் கிரயம் அந்தச் சொத்தைக் கொள்வனவு செய்வதற்கு நேரடியாக பங்களிப்பு செய்த மற்றும் அதன் ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு மாற்றுவதற்கான செலவு பின்னர் சுய நிர்மாணித்த சொத்தக்களின் விலை பொருட்கள், நேரடி உழைப்பு ஆகியவை அடங்கும் மற்றும் பொருட்களை அகற்றுதல் மற்றும் அவை அமைந்துள்ள தளத்தில் மீட்டமைத்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாகக் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள், அந்த உபகரணத்துடன் செயற்பாட்டுடன் தொடர்புடைய பகுதியாகக் கருதப்பட்டு மூலதனமாக்கப்பட்டுள்ளது.

பொறி மற்றும் உபகரணங்களுக்குக் கிரய மாதிரியை சபை பிரயோகிக்கின்றதுடன் பதிவுகள் கொள்வனவு அல்லது கட்டுமானம் மற்றும் அதனுடனிணைந்த ஏதேனும் நிகழ்வுச் செலவுகளின் கிரயத்திலிருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டிய குறைவு நட்டங்களைக் கழித்த தொகையைப் பதிவுசெய்கின்றது.

திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகள் உற்றப்பட்ட நிதியியல் காலத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அறவிடப்படுகின்றது. அந்தச் சபைக்கு மிஞ்சியிருக்கும் சொத்துக்களின் நியமங்களை மிக அண்மையில் மதிப்பீடு செய்யும் போது எதிர்காலப் பொருளாதார நன்மைகள் மிகையாகவிருந்து கிடைக்குமாயின் அந்த சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகையையும் அந்த சொத்தின் அடையாளம் காணப்பட்ட பகுதியை புதிப்பித்தல் பதிலீடு செய்யுமாயின் அதனையும் பாரிய புதிப்பித்தல் கிரயங்கள் உள்ளடக்கியுளளது. பாரிய புதுப்பித்தல்கள், அந்த சொத்துத் தொடர்பான எஞ்சியிருக்கும் பயனுள்ள ஆயுள் தேய்மானம் செய்யப்படும்.

| | |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 10 வருடத்திற்கு மேல் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணங்கள் | 13.33 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| பெயர்ப் பலகை | கட்டடத்தின் குத்தகைக் காலத்திற்கு மேல் |

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை நீக்குதல்

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் கொண்டு செல்லும் தொகை அகற்றலின் போது அல்லது

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உட்பாயாது என எதிர்பார்க்கும் போது நீக்கப்படும். ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் நீக்கலில் இருந்து எழும் ஈட்டுகை அல்லது நட்டங்கள், அந்த உருப்படி நீக்கப்பட்டால் இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் கொண்டு செல்லும் தொகையாவன: பதிலீட்டுக் கிரயம் இனங்காணப்பட்டால், பதிலீட்டுப் பகுதியின் எஞ்சியிருக்கும் கொண்டு செல்லும் தொகை நீக்கப்படும். ஒவ்வொரு மூதலீட்டாக்கலின் போதும், பரீட்சித்தல் ஆகுசெலவின் முன்னைய கிரயத்தின் எஞ்சியிருக்கும் கொண்டு செல்லும் தொகை நீக்கப்படும்

**18.1** வழமையான வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் பயன்படுத்தப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களைக் கொண்டிருக்கும். அறிக்கையிடல் திகதியில் இன்னும் பயன்பாட்டில் இருக்கும் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்பக் கிரயம் கீழ்வருமாறு:

**18.2** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது உரிமைக் கட்டுப்பாடு. அறிக்கையிடல் திகதியில் சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உரிமையில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை மற்றும் பொறுப்புகளுக்கான பத்திரங்கள் என உறுதியளிக்கப்படவில்லை.

**18.3** இந்த ஆண்டில் கையகப்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம். நிதியாண்டில் சபை ரூபா 4,272,623 (2020 ரூபா 12,633,322) பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றை கொள்வனவு செய்தது.

**18.4** பொறுப்புக்குப் பிணையாக உறுதியளிக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள். எந்தவொரு ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் 31 டிசம்பர் 2021 அன்று பொறுப்புக்குப் பிணையாக உறுதியளிக்கப்படவில்லை. (2020 - எதுவுமில்லை)

**18.5** தற்காலிகமாக செயலற்றுப்போன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள். 31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று தற்காலிகமாகச் செயலற்றுப்போன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எதுவுமில்லை. (2020 - எதுவுமில்லை)

**18.6** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மதிப்புக் குறைப்பு மதிப்பீடு. பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2021 அன்று ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் காட்டிகளின் உத்தேச மதிப்புக் குறைப்பினை மதிப்பீடு செய்தது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில், எந்தவொரு மதிப்புக் குறைப்புக் காட்டிகளும் அடையாளம் காணப்படவில்லை மற்றும் அதனால் அறிக்கையிடும் திகதியில் உரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் நிதியியல் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு மதிப்புக் குறைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

**18.7** ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கைக்கொள்ளலுக்கான ஒப்பந்த ஈடுபாட்டுத் தொகை. அறிக்கையிடும் திகதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கைக்கொள்ளலுக்கான ஒப்பந்த ஈடுபாட்டுத் தொகை ஏதுமில்லை.

**18.8** **ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிற்கால மதிப்பீடு**

தொழில்சார் முறையில் தகைமைபெற்ற மதிப்பீட்டாளர்களினால் திறந்த சந்தைப் பெறுமதியில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. சொத்துக்கள் காலத்திற்குக் காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2018 இல் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மீள்மதிப்பீடுகள் ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒருமுறை உள்நாட்டில் நியமிக்கப்பட்ட குழு அல்லது வெளிப்புற மதிப்பீட்டாளர்களால் தேவைப்படும் இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. மீள்மதிப்பீட்டு மிகை சொத்தின் தேறிய கொண்டு செல்லும் தொகை மீது இனங்காணப்பட்டுள்ளதுடன் சொத்துகளின் மீள்பெறுமதித் தொகையை மீளக் குறிப்பிட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்குக்கு மாற்றப்பட்டது. மீள் மதிப்பீட்டு ஒதுக்கு நீங்கள் புள்ளியின் போது தக்கவைத்த உழைப்புகளுக்கு இடமாற்றம் செய்யப்படும்.

## 19 நிதியியல் முதலீடுகள்

கணக்கீட்டுக் கொள்கை - நிதியியல் முதலீடுகளை வகைப்படுத்தல். கடன்களும் வருமதிகளும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே சபையானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. சபையானது ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாப அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் சாட்டப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது விடயம் ஒன்றுக்காக நிதிச் சொத்தானது அதன் கொள்ளல் அல்லது வழங்கலுடன் நேரடிக் காரணமாயிருந்த கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

முதலீட்டுச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான நோக்கம் மற்றும் இயலுமை மீது தங்கியிருக்கின்றது, சபை வழித்தோன்றல் அல்லாத நிதிச் சொத்துக்களைப் பின்வரும் வகுதிகளில் ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.:

- இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதி FVTPL); • கடன்களும் வருமதிகளும (L & R); • விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான (AFS) நிதிச் சொத்துக்கள்; மற்றும் பொருத்தமுடையதாக முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள் (HTM)

எனினும், சபையானது அறிக்கையிடல் திகதியில் முதிர்ச்சி முதலீடுகளாக வைத்துக்கொள்வதற்கு எந்தவொரு முதலீட்டையும் வகைப்படுத்தவில்லை மற்றும் முதலீடு நியாயப் பெறுமதியில் இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடாக முதலீடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. (2020 - எதுவுமில்லை)

கணக்கீட்டுக் கொள்கை - நிதிச் சொத்துக்களை நீக்கல். நிதிச் சொத்துக்களில் இருந்து வரும் காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்துக்களின் உரிமையின் கணிசமானளவு அனைத்து வெகுமதிகளும் இடர்களும் மாற்றப்பட்ட நிதிச் சொத்து இடமாற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் நிதிச் சொத்தின் மீதான காசுப் பாய்ச்சல்களுக்கு ஒப்பந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை மாற்றப்பட்டால் அவ்வாறன நிதிச் சொத்துக்களை சபை நீக்குகின்றது. மாற்றம் செய்யப்பட்ட நிதிச் சொத்தின் ஏதேனும் வட்டி, சபையினால் உருவாக்கப்பட்டால் அல்லது தக்கவைக்கப்பட்டால், அது வேறான சொத்து அல்லது பொறுப்பாக இனம்காணப்படும்.

கணக்கீட்டுக் கொள்கை - நிதிக் கருவிகளை ஈடாக்குதல். நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் ஈடாக்கப்பட்டு அத்துடன் இனங்காணப்பட்ட தொகையினை ஈடாக்குவதற்கு தற்போது வலுவிலுள்ள சட்ட உரிமை உள்ளதாயின் அத்துடன் தேறிய அடிப்படை ஒன்றில் தீர்ப்பதற்கான அல்லது சொத்துக்களை பணமாக்கி ஒரே நேரத்தில் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான உள்நோக்கம் ஒன்றும் காணப்பட்டால் மாத்திரமே நிதி நிலைமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

சபையின் நிதி முதலீடுகள் அளவீட்டு வகையின் படி சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வகுதி | நிதிச் சொத்துக்கள் |
|---|---|
| இலாப அல்லது நட்டத்தின் ஊடான முகப்பெறுமதி | இல்லை |
| விற்பனைக்காக கிடைக்கக் கூடியன | திறைசேரி முறிகள்<br>திறைசேரி உண்டியல்கள் |
| கடன்களும் வருமதிகளும் | REPO,<br>மீள்எழுதப்பட்ட REPO |
| முதிர்ச்சிக்காக நிறுத்திவைக்கப்பட்டது | வெளிநாட்டு நாணயம்<br>அபிவிருத்திப் பிணையங்கள்<br>திறைசேரிப் பிணைங்கள் |

சபையின் ஏற்கனவேயுள்ள நிதிச் சொத்துக்களின் வகைகள் மற்றும் அவற்றின் வகைப்பாடு என்பன கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடான மற்றும் விற்பனைக்குக் கிடைக்கப் பெறும் முதலீடுகளின் ஊடான நியாயப் பெறுமதிகள் என்பன நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடன்கள் மற்றும் முதலீட்டு வருமதிகள் என்பன கடன்கரைப்புக் கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குணாம்சங்கள் மீதான நிதியியல் முதலீடுகளின் பகுப்பாய்வு. கீழ்வரும் குறிப்புகள் ஒவ்வொரு வகுப்புக் கருவிகளினதும் குணாம்சங்கள் மீதான நிதியியல் முதலீடுகளின் அடிப்படையிலான வெளிப்படுத்தல்களை வழங்குகின்றது.

**19.1** இலாப அல்லது நட்டத்தின் ஊடான நியாயப் பெறுமதி கணக்கீட்டுக் கொள்கை - இலாப அல்லது நட்ட முதலீடுகளின் ஊடான நியாயப் பெறுமதியை அடையாளம் காணல். வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்டவற்றையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்பதற்கான உள்நோக்கத்துடன் எடுத்துக்காட்டாக வாங்கப்பட்ட முதலீடுகளானவை வியாபாரத்திற்காக வைக்கப்பட்டவையாகக் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயங்கள் இலாப அல்லது நட்டக் கூற்றுகளில் உற்றறப்பட்டவையாக இனங்காணப்படும். இந்த முதலீடுகள் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, அவை நியாயப் பெறுமதியில் மீள்மதிப்பிடப்படுகின்றன.

உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களானவை இலாப அல்லது நட்டக் கூற்றில் "உண்மைப் பெறுமதி இலாபங்கள் மற்றும் நட்டங்களில்" பதிவு செய்யப்படுகின்றன. சபையானது அதன் நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான உள்நோக்கம் இன்னமும் பொருத்தமானதாகவிருப்பின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் (வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட) மதிப்பிடுகின்றது.

**19.2** கடன்கள் மற்றம் வருமதிகள். கடன்கள் மற்றும் முதலீட்டு வருமதிகளை இனங்காணல் மற்றும் கிடைப்பனவுகள் செயலுக்காகச் சந்தையில் பட்டியலிடப்படாத, நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான நிதிச் சொத்துக்களைச் சேர்ந்தவையாகும். இம் முதலீடுகளானவை முதலீட்டுக் கொள்ளலுக்காகச் செலுத்தப்பட்ட கருத்திற்கொண்ட உண்மைப் பெறுமதியாக இருக்கும் கிரயத்தில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. இக் கொள்ளலுக்கு நேரடிக் காரணமாயிருந்த சகல கொடுக்கல் வாங்கல் கிரயங்களும் முதலீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைதலுக்கான படியினைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப் (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் வருமதிகளும் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பில் ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கல் ஏதேனும் இருப்பின் அதனைக் கவனத்திற் கொண்டு கடன்கரைப்புக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது.

இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ள செலவு மதிப்புக் குறைப்பினில் இருந்து எழுவதாக இனங்காணப்பட்டு பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடன்கரைப்பானது இலாப அல்லது நட்டக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

முதலீடுகளானவை இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது அல்லது குறைக்கப்படும் போது அதேபோல கடன்கரைப்பு செய்முறைக்கூடாக இலாப அல்லது நட்டக் கூற்றில் ஈட்டுகைகளும் நட்டங்களும் இனங்காணப்படும். கடன்கள் மற்றும் வருமதிகள் முதலீட்டில் மீள்கொள்வனவு ஒப்பந்தங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

**19.2.1** மீள்கொள்வனவு உடன்படிக்கைகள். சபை இலக்கங்களுடனான அரசாங்க பிணையங்களுக்குச் சாட்டப்பட்டதற்கு எதிரான முழுமையான பாதுகாப்பைக் கொண்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி, என்எஸ்பி பண்ட் மனேஜ்மன்ட் (பிறைவட்) லிமிட்ட் நிறுவனங்களுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளைத் திருப்பியது. நிலுவை மீதிக்கான ரிப்போ வீதங்கள் 4.98% - 8.26% வீத வீச்சினுள் காணப்படும், இது வேறுபட்ட முதிர்ச்சி மீது தங்கியிருக்கும்.

## 19.3 விற்பனைக்குக் கிடைக்கப் பெறும்

கணக்கீட்டுக் கொள்கை – விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் முதலீட்டை இனங்காணல். விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் முதலீடுகள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகளை உள்ளடக்கக்கூடும்.

ஆரம்ப அளவீட்டுக்குப் பின்னர், கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் அதைத் தொடர்ந்து நியாயப் பெறுமதியில் தேறப்படாத ஏனைய விரிவாக்கத்தில் விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் ஒதுக்கின் கீழ் இனங்காணப்பட்ட ஈட்டுகைகள் அல்லது நட்டங்கள் அளவிடப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் வேளை ஈட்டிய வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானமாக அறிக்கையிடப்படும். கொடுப்பனவு உரிமை உருவாக்கப்பட்டுள்ள போது, விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முதலீடுகளை வைத்திருக்கும் போதான கடனழிவு செய்யப்பட்ட தவணைக் கட்டணங்கள் அத்துடன்/அல்லது கழிவுகள் 'முதலீட்டு இலாப அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும். சொத்தானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது முதலீட்டு வருமானத்தில் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும். சொத்தினைக் குறைப்பதற்கு வரையறுக்கப்பட்டதால் 'முதலீட்டு வருமானத்தில்' இலாப அல்லது நட்டக் கூற்றில் திரண்ட நட்டமானது இனங்காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கிலிருந்து நீக்கப்படும்.

சபையானது அதன் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதிச் சொத்துக்களை, கிட்டிய காலப்பகுதியில் அவற்றை விற்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசம் என்பன இன்னமும் பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை வரையறுப்பதற்காக மதிப்பீடு செய்யும். செயலூக்கமற்ற சந்தைகள் மற்றும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கான முகாமையினது உத்தேசம் குறிப்பிடத்தக்களவு மாறுதல் போன்ற காரணங்களினால் இந் நிதிச் சொத்துக்களை விற்பதற்கு சபையினால் இயலாது போகும் பட்டசத்தில் அரிதான

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

சந்தர்ப்பங்களில் இந் நிதிச் சொத்துகளை மீள வழங்கப்படுத்தலை சபையானது தேர்வு செய்யலாம்.

நிதிச் சொத்தானது கடன்களினதும் வருமதிகளினதும் வரைவிலக்கணத்தைப் பூர்த்தி செய்யும் போதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்கு அல்லது முதிர்வு வரை நிதிச் சொத்தினை வைத்திருப்பதற்கான ஆற்றல் மற்றும் உத்தேசத்தினை நிறுவனமானது கொண்டுள்ள போது மட்டுமே முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதற்கான மீள் வகைப்படுத்தல் அனுமதியளிக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கக்கூடிய வகுதியில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்தொன்றாக, உரிமை முதலில் இனங்காணப்பட்டுள்ள இச் சொத்தின் மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய ஆயுட் காலத்திற்கு கடனழிவு செய்யப்படுகின்றது. அச் சொத்தானது பின்னர் குறைவாக இருக்குமென வரையறுக்கப்படின் அதன் பின்னர் உரிமை முதலில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படும்.

புதிய கடன்கரைப்பு கிரயத்திற்கும் முதிர்ச்சி தொகைக்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி சொத்தின் மீதமுள்ள ஆயுளும் கடன்கரைப்பு செய்யப்படும். சொத்தானது அடுத்து மதிப்புக் குறைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டால், அத்தொகை உரிமைப்பபங்கில் இலாப அல்லது நட்டக் கூற்றுக்கு மீள்வகைப்படுத்தப்படும்.

19.3.1 விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதியியல் முதலீடுகளின் மதிப்புக் குறைப்பு. அறிக்கையிடும் திகதியில் எந்தவொரு நிதியில் முதலீடுகளும் காலம் கடந்ததாக அல்லது மதிப்புக் குறைக்கப்பட்டதாக இல்லாததனால் விற்பனைக்கு கிடைக்கப்பெறவில்லை.

## 20 மீள்காப்புறுதி வருமதிகள்

கணக்கீட்டுக் கொள்கை – மீள்காப்புறுதி வருமதிகள். சபையானது அதன் சகல வியாபாரத்திற்குமான சாதாரண வியாபார நடவடிக்கையில் காப்புறுதி ஆபத்தினை ஒப்பளிப்புச் செய்கின்றது. மீள்காப்புறுதி சொத்துக்களானவை மீள்காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய மீதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி செய்பவர்களிடமிருந்து மீளப்பெறக்கூடிய தொகைகளானவை மீள்காப்புறுதி செய்பவரின் கொள்கைகளுடன் இணைந்த நிலுவையிலுள்ள உரிமைக்கோரிக்கை ஏற்பாட்டுக்கு அல்லது தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளுக்கு ஒத்திசைவான விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் தொடர்புபட்ட மீள்காப்புறுதி ஒப்பந்தத்துக்கு இணக்கமாகவும் உள்ளன.

ஒப்பளிப்புச் செய்யப்பட்ட மீள்காப்புறுதி ஒழுங்குகளானவை சபையினை ஆவணதாரிகளுக்கான அதன் கடப்பாட்டிலிருந்து விடுவிப்பதில்லை.

மீள்காப்புறுதி வருமதிகள் இழப்பீட்டின் முகப்பெறுமதியில் கிடைத்தல் அல்லது கிடைக்க வேண்டியிருந்தால் இனங்காணப்பட்டன. மீள்காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

ஒப்பந்த உரிமைகளானவை காலாவதியாகி செல்லுபடியற்ற தாக்கப்படும் போது அல்லது ஒப்பந்தமானது இன்னொரு தரப்புக்கு மாற்றப்படும் போது மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இனங்காணலிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

அறிக்கையிடும் வருடத்தின் போது குறைவுக் குறிகாட்டி ஒன்று எழும் போது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அல்லது கூடுதலாக அநேக தடவைகளில் மீள்காப்புறுதிச் சொத்துக்களானவை குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சபையானது ஒப்பந்த நியதிகளின் கீழ் வரவேண்டிய சகல இனங்காணலின் பின் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றினதும், சபையானது மீள்காப்புறுதி செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் தொகைகள் மீது நம்பகரமாக அளவிடக்கூடிய தாக்கம் ஒன்றினைக் கொண்டுள்ள நிகழ்வினதும் விளைவாக அடிப்படையான சான்று இருக்கும் போது குறைவு நிகழ்கின்றது. இலாப அல்லது நட்டக் கூற்றில் மதிப்பு குறைப்பு நட்டம் பதிவுசெய்யப்படுகின்றது.

## 21 காப்புறுதி வருமதிகள்

காப்புறுதி வருமதிகளானவை நிலுவையாகவிருந்து அத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்திற்கொள்ளப்படும் உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் தொடர்பில் அளவிடப்படும் போது இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பின்னர், காப்புறுதி வருமதிகளானவை பயனுறுதி வாய்ந்த வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி கடனழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைவு நட்டத்துடன் கொண்டுசெல்லல் தொகையானது மீளப்பெறமுடியாது போகலாம் என்று நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை சுட்டிக்காட்டும் போதெல்லாம் காப்புறுதி வருமதிகளின் கொண்டு செல்லல் பெறுமதியானது குறைவுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

இலங்கை காப்புறுதிச் சபை வெளியிட்டுள்ள தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாத பணிப்புரையின் படி, அனைத்துப் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளும் தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாதத்திற்கு உட்பட்டவை மற்றும் 60 நாட்களில் காலாவதி முடிந்தால் முடிக்கப்படாவிட்டலோ இரத்து செய்யப்படும்.

எனினும், அரச நிறுவனங்கள் மற்றும் மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சீசீ போன்ற கட்டாயக் காப்புறுதித்திட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தவணைக்கட்டணங்கள் 60 நாட்களைக் கடந்து கிடைக்கப்பெற்றால் இரத்து செய்யப்படமாட்டாது.

அரச நிறுவனங்கள் மற்றும் மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சீசீ போன்ற கட்டாயக் காப்புறுதித்திட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய தவணைக்கட்டணங்கள் தவிர தவணைக் கட்டணவு கொடுப்பனவை சபை ஏற்றுக்கொண்டால், நீண்ட கால நிலுவைத் தொகை தவணைக் கட்டணங்கள் பெறத்தக்கதாக இல்லை. எனினும், மேலதிக கீழே பொதுக் காப்புறுதி மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாதவைக்கான வழங்கப்பட்ட தொகைகள் தவிர்த்து மதிப்புக் குறைப்பு நட்ட ஏற்பாடுகளுக்கான தேவையில்லை.

50% வீதம் வழங்கப்படும் - → 60 நாட்கள் ← 90 நாட்கள்
100% வீதம் வழங்கப்படும் - → 90 நாட்கள்

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

### மீள் காப்புறுதி

| வயது | 2021 | 2020 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 284,335,234 | 41,598,382 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 276,698,418 | 19,169,527 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 475,571,969 | 755,909,721 |
| 365 நாட்களுக்கு மேல் | 553,875,433 | 451,128,820 |
| | 1,590,481,053 | 1,267,806,450 |

### மோட்டார்

| வயது | 2021 | 2020 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 6,804,239 | 3,304,755 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 2,735,986 | 2,181,646 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 9,127,576 | 4,652,398 |
| 365 நாட்களுக்கு மேல் | 92,405 | 467,366 |
| | 18,760,206 | 10,606,165 |

### மோட்டார் அல்லாத

| வயது | 2021 | 2020 |
|---|---|---|
| 30 நாட்கள் வரை | 955,325 | 45,532,523 |
| 31 முதல் 60 நாட்கள் வரை | 888,531 | 535,425 |
| 61 முதல் 365 நாட்கள் வரை | 3,830,965 | 11,830,708 |
| 365 நாட்களுக்கு மேல் | 23,062,747 | 12,514,249 |
| | 28,737,568 | 70,412,904 |

## 22 பிற்போடப்பட்ட செலவுகள்

கைக்கொள்ளல் ஆகுசெலவுகள், புதிய வணிகங்களை வாங்குவதற்கான செலவுகள், தரகு, பொறுப்பேற்றல், சந்தைப்படுத்தல் மற்றும் பூட்கை காப்புறுதிச் செலவுகள், புதிய வணிகங்களின் உற்பத்தியுடன் மாறுபடும் மற்றும் நேரடியாக தொடர்புடையவை. இந்த செலவுகள் எதிர்கால தவணைக் கட்டணங்களில் இருந்து திரும்பிப் பெறுமளவுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு எதிர்பார்க்கப்படும் முறை ஆகியவை கடன்கரைப்புக் காலத்தை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்பட்டு கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றமாகக் கருதப்படுகின்றன.

அதனுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் காலாவதியானால் அல்லது இரத்துசெய்யப்பட்டால் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயம் அகற்றப்படும்.

பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயத்தின் மதிப்புக் குறைப்பு ஒவ்வொரு திகதியிலும் அல்லது அடிக்கடி குறைப்பு அறிகுறி எழும்போது செய்யப்படுகின்றது. மீட்கக்கூடிய தொகை, சுமந்து செல்லும் மதிப்பை விடக் குறைவாக இருக்கும் போது, நட்ட அல்லது நட்ட அறிக்கையில் குறைப்பு நட்டம் இனங்காணப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்கும் போதுமான சோதனையில் பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் கிரயம் கருதப்படுகின்றது.

மீள்காப்புறுதி தரகு. வெளிவாரி மீள்காப்புறுதி ஒப்பந்தங்களின் மீதான கிடைக்க வேண்டிய தரகுகள் பிற்போடப்படுவதுடன் கொடுப்பனவு செய்ய வேண்டிய தவணைக் கட்டணத் தொகை நேர்கோட்டு அடிப்படையில் கடன்கரைப்பு செய்யப்படுகின்றது.

## 23 ஏனைய சொத்துகள்

ஏனைய சொத்துக்களை அங்கீகரித்தல். நிதியல்லா சொத்துக்களை உள்ளடக்கிய ஏனைய சொத்துகள் ஏதேனும் மதிப்புக் குறைப்பு நட்டத்தில் இனங்காணப்பட்டது.

### ஊழியர் கடன்கள்

இது சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்கிய இடர் கடன்கள் மற்றும் விழா முற்பணம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எந்தவொரு கடனோ அல்லது முற்பணமோ சபையின் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படவில்லை..

### மென் கடன்கள்

இந்தக் கடன்கள் எஸ்ஆர்சிசி அன்ட் டி நிதியத்தில் இருந்து இலங்கை வங்கியினால் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான நிறுவனங்கள்/ஹொட்டல்களுக்கு வழங்கப்பட்டது

### வரி மீட்புகள்

வரி மீட்புகள் சபையின் வரி மீட்புகள் நிறுத்திவைத்தல் வரிக் கிடைப்பனவுகள் மற்றும் பொருளாதார சேவைக் கட்டண கிடைப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 24 காசு மற்றும் வங்கி மீதிகள்

காசு மற்றும் வங்கி மீதிகள் - நிதியியல் நிலமைக் கூற்றில் உள்ள மாற்றப்படும்போது குறிப்பிடத்தக்க இடரல்லாத காசு மற்றும் வங்கி மீதிகள் வங்கி மற்றும் கையிலுள்ள மீதிகளை உள்ளடக்கியிருக்கும்.

### காசு மற்றும் காசுக்கு சமனானவை

காசு முகாமைத்துவம் மற்றும் சேமிப்புகணக்குகளின் ஒருங்கிணைந்த பகுதியாகிய வங்கி மேலதிகப்பற்றுகள் காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமனானவைகளை உள்ளடக்கியிருக்கும். நிதி நிலமைக் கூற்றில், வங்கி மேலதிகப்பற்று பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும். சபை எந்தவொரு வங்கியிடமிருந்தும் மேலதிகப்பற்றினைப் பெற்றிருக்கவில்லை. எனினும் புத்தகத்தின் மேலதிகப்பற்று ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது.

## 25 தக்கவைத்த உழைப்புகள்

## 26 கிடைக்கப்பெறும் விற்பனைக்கான ஒதுக்குகள்

விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்குகள். விற்பனைக்கு கிடைக்கப்பெறும் ஒதுக்குகள் விற்பனைக்கு கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் திரட்டிய தேறிய மாற்றத்தை உள்ளடக்கியிருக்கும் மற்றும் அந்த குறிப்பிட்ட சொத்துகள் நீக்க அல்லது மதிப்பு குறைப்பு செய்யும் வரை முன் கொண்டு செல்லப்படும்..

## 27 ஒதுக்குகளின் மீள்மதிப்பீடு

ஏனைய ஒதுக்குகள் LKAS 19 இன் (ஊழியர் நன்மைகள்) ஊடாக கோரப்படும் பணிக்கொடை பொறுப்பின மதிப்பிலிருந்து எழும் உண்மை ஈட்டுகைகளை/ (நட்டங்களை) உள்ளடக்கியிருக்கும்.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 28 காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புகள்

கணக்கீட்டு கொள்கை – தேறிய உழைக்கப்படாத தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடுகள். உழைக்கப்படாத தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடுகள், இதுவரை காலாவதியான இடர்களுக்காக கிடைக்கப்பெற்ற தவணைக் கட்டணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும். பொதுவாக, ஒதுக்கானது ஒப்பந்தக் காலப்பகுதியில் வெளியிடப்படுகின்றதுடன் தவணைக் கட்டண வருமானமாக இனங்காணப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், சபை உழைக்கப்படாத தவணைக்கட்டணத்தின் மீது பிற்போடப்பட்ட கைக்கொள்ளல் செலவு மற்றும் எதிர்பாராத கோரிக்கைகளின் ஏதேனும் மொத்த மிகையினைத் தீர்மானிப்பதற்கு அதனுடைய காலாவதியாகாத இடர் மற்றும் பொறுப்பு போதுமைப் பரீட்சையை செயற்படுத்துகின்றது. ஆயுள் அல்லாத காப்புறுதி தொழில்நுட்ப ஏற்பாடுகளுக்குரிய தொடர்புடைய சொத்துகளின் மீது எதிர்பார்க்கும் முதலீட்டு பெறுபேற்றினைக் கவனத்தில் கொண்டதன் பின்னர் எதிர்கால ஒப்பந்த காசுப்பாச்சல்களின் தற்போதைய மதிப்பீடுகளை கணிப்பீடு பயன்படுத்தும். இந்த மதிப்பீடானது, உழைக்கப்படாத தவணைக்கட்டணங்கள் கொண்டு செல்லும் தொகை போதவில்லையெனக் காட்டினால், பொறுப்பு போதுமானதாக இருப்பதற்கான ஏற்பாட்டை அமைப்பதன் மூலம் இலாபம் அல்லது இழப்பு அறிக்கையில் குறைபாடு அங்கீகரிக்கப்படுகின்றது

SLFRS 4 இன் தேவைக்கேற்ப காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு ஏற்ப, சபையினால் வெளிவாரி செயற்பாடொன்றின் துணையுடன் ஆயுள் அல்லாத கடன் ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, சபையின் பொறுப்பு தொடர்பிலான போதுமானளவு பரீட்சிப்பு (LAT) இனால் மேற்கொள்ளப்படுகிறது.

கணக்கியல் கொள்கை - மொத்த நிலுவையில் உள்ள உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு ஒப்பந்தங்களுக்கு முற்படும் போது மற்றும் தவணைக் கட்டணங்களை அறவிடும் போது ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த பொறுப்புகள் நிலுவையில் உள்ள உரிமைகோரல் ஏற்பாடுகள் என அறியப்படுகின்றதோடு, அவை அறிக்கையிடப்பட்டுள்ள அல்லது அறிக்கையிடப்படாதவை என்ற அடிப்படையில் இருந்தாலும், குறிப்பிடப்பட்ட உரிமைகோரல்களை கையாளும் செலவுகள் மற்றும் மீட்பில் எதிர்பார்க்கப்படும் பெறுமதியைக் குறைத்தல் மற்றும் பிற மீட்டெடுப்புகள் அறிக்கையிடப்படும் திகதிக்கு தீர்க்கப்படாத சகல உரிமைகோரல்களினதும் மதிப்பிடப்பட்ட இறுதி செலவை அடிப்படையாகக் கொண்டு காணப்படும்.

பணத்தின் நேரப் பெறுமதிக்கான பொறுப்பு தள்ளுபடி செய்யப்படவில்லை. சமநிலைத்தன்மை அல்லது பேரிடர் இருப்புக்கான எந்தவொரு ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தம் காலாவதியாகும் போது, விடுவிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்படும் போது பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

கணக்கியல் கொள்கை - மொத்தமாக இடம்பெற்றுள்ள ஆனால் அறிக்கையிடப்படாத உரிமைகோரல்களுக்கான ஏற்பாடுகள் ஒருசில வகையான உரிமைகோரல்களை அறிவித்தல் மற்றும் தீர்க்கப்படும் போது ஏற்படும் தாமதங்களை அனுபவிக்க முடியும், எனவே இவற்றின் இறுதி செலவை அறிக்கையிடும் திகதியில் உறுதியாக அறிந்து கொள்ள முடியாதுள்ளது. அனுபவத் தரவுகள் மற்றும் பாதகமான விலகலுக்கன விளிம்பை உள்ளடக்கிய தற்போதைய அனுமானங்களின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு உரிமைகோரல் இயல்பான உரிமைகோரல் திட்ட நுட்பங்களைப் பயன்படுத்தி அறிக்கை திகதியில் பொறுப்பு கணக்கிடப்படுகிறது.

ஆயுள் அல்லாத காப்புறுதி ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை, அறிக்கையிடல் திகதியில் அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்படும் இறுதி உரிமைகோரல் செலவு மற்றும் அறிக்கையிடல் திகதியில் அறிக்கையிடப்படாத (IBNR) உரிமைகோரல்களின் எதிர்பார்க்கப்படும் இறுதிச் செலவு ஆகிய இரண்டினையும் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இறுதி உரிமைகோரல் செலவு உறுதியுடன் நிறுவப்படுவதற்கு முன்னர் அதற்கு சில காலம் அவகாசம் எடுக்கும் என்பதோடு ஏதேனும் ஒரு விதத்திலான கொள்கைக்காக, IBNR உரிமைகோரல்கள் நிதி நிலை அறிக்கையில் பெரும்பான்மையான பொறுப்புக்களை ஏற்படுத்துகின்றன.

சங்கிலித் தொடர் ஏணி முறை, போர்ன்ஹீட்டர் - பெர்குசன் முறை மற்றும் அதிர்வெண் / தீவிரத்தன்மை முறை போன்ற நிலையான இயல்பான உரிமைகோரல் திட்ட நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலுவையில் உள்ள உரிமைகோரல்களின் இறுதிச் செலவு மதிப்பிடப்படுகிறது.

இந்த முறைமைகளுக்கு கீழ் உள்ள முக்கிய அனுமானம் என்னவென்றால், ஒரு நிறுவனத்தின் கடந்தகால உரிமைகோரல் விருத்தி அனுபவம் எதிர்கால உரிமைகோரல் விருத்தியை திட்டமிட்டு பயன்படுத்தப்படலாம், எனவே இறுதி உரிமைகோரல்கள் செலவுகளாகும். எனவே, இந்த முறை மூலம் செலுத்தப்பட்ட பணம் மற்றும் ஏற்பட்ட நட்டங்கள், உரிமைகோரலுக்கான சாதாரண செலவுகள் மற்றும் உரிமைகோரல் எண்களின் அடிப்படையில், முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுள்ள அபிவிருத்திகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. வரலாற்று உரிமைகோரல் விருத்தி முக்கியமாக பகுப்பாய்வு செய்யப்படுவது திடீர் விபத்துக்கள் நடைபெற்ற வருடங்களுக்கிடையே, புவியியல் பிரதேசங்களைப் போன்றே குறிப்பிடத்தக்க வணிக கோடுகள் மற்றும் உரிமைகோரல் வகைகள் மூலம் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்யப்பட முடியும். பேரிய உரிமைகோரல்கள் வழக்கமாக தனித்தனியாக அழைக்கப்படுகின்றதோடு, அவை நட்டங்களை சீராக்கம் செய்யும் மதிப்பீடுகளில் முகப்பெறுமதியை வேறுபடுத்துவதன் மூலமாகவோ அல்லது அவற்றின் எதிர்கால வளர்ச்சியை மறுபரிசீலனை செய்வதற்காக வெவ்வேறாக திட்டமிடப்படுள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், உரிமைகோரல்கள் அல்லது நட்ட விகிதங்களில் எதிர்கால உரிமைகோரல்கள் குறித்து வெளிப்படையான அனுமானங்கள் எதுவும் செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் அனுமானங்கள் கணிப்பதனை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று உரிமைகோரல் விருத்தித் தரவுகளில் பொதிந்துள்ளது.

எதிர்கால போக்குகள் குறித்து எதிர்காலத்தில் எந்த அளவுக்கு பொருந்தாது என்பதை மதிப்பிடுவதற்காக மேலதிக தரமான தீர்ப்பு பயன்படுத்தப்படுகிறது, (உதாரணமாக, ஒரு தடவையில் நிகழ்வுகளை மீள கவனம் செலுத்துதல், உரிமைகோரலுக்கு பொது மக்களின் மனப்பாங்கு, பொருளாதார நிலைமைகள், உரிமைகோரலுக்கு மட்டம் போன்ற வெளிவார் அல்லது சந்தைக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள், நீதிமன்றத் தீர்ப்புக்கள் மற்றும் சட்டத் தொகுப்புக்களைப் போன்றே Profile கலவை, கொள்கை சார்ந்த அம்சங்கள் மற்றும் உரிமைகோரல்களைக் கையாளும் நடைமுறைகள் போன்ற உள்ளக காரணிகள்) மதிப்பிடப்பட்ட இறுதி உரிமைகோரல் செலவுகளை அடைவதற்காக, ஏற்பட முடியுமான விளைவுகளின் வரம்பிலிருந்து சாத்தியமான விளைவுகளை முன்வைக்கும் உரிமைகோரல்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளாகும்.

கண்டுபிடிக்கப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகளில் போதுமான மதிப்பீட்டில் இதே போன்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

காப்புறுதி ஒப்பந்தக் கடன்கள் தொடர்பான உரிமைகோரல் விருத்தி அட்டவணைகள் மற்றும் உணர்திறன் பகுப்பாய்வுகள் என்பன அனர்த்த முகாமைத்துவக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**28.1 காப்புறுதி ஒப்பந்தக் கடன்கள்**

**28.2 தேறிய ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஏற்பாடு**

**28.3 மொத்த நிலுவை உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு**

**28.4 மொத்த IBNR க்கான உரிமைகோரல்களுக்கான ஏற்பாடு**

**28.5 காப்புறுதி வழங்கல் மற்றும் தொழில்நுட்ப இருப்புக்களுக்கு இடையிலான நல்லிணக்கம்**

28.6 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு SLFRS 4 – காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு அமைய தொழிற்துறை நடவடிக்கைகளுக்குரிய நிறுவனமான NMG நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் பொறுப்புக்கள் போதுமானளவு பரிசோதனை (LAT) இனால் மேற்கொள்ளப்பட்டுள்ளது, கொண்டு செல்லும் போதுமானளவு மதிப்பிடுவதற்காக காப்புறுதி ஒப்பந்தத்தில் தெளிவுபடுத்தப்படாத தவணைக் கட்டணத்திற்கான ஏற்பாடுகளாகும். மதிப்பீடு செய்யும் நடவடிக்கை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு முறையின் அடிப்படையில் அமைந்துள்ளதோடு, அது காலாண்டு அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றது. NMG நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, சபையினால் முன்வைத்தத பொறுப்பு போதுமானதாக இருந்தது. எனவே, 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான கட்டுப்பணத்தைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை (2020 - இல்லை).

28.7 IBNR மற்றும் IBNER இனால் மதிப்பீடு 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் NMG நிதிச் சேவை ஆலோசனை வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் அறிக்கையிடப்படாத உரிமைகோரல் இருப்புக்களின் செயற்பாட்டு ரீதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

28.8 அனுமானங்களில் மாற்றங்கள் ஏற்படல் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய நிலவரப்படி நிலுவைக்கான முன்னைய மதிப்பீட்டிலிருந்து பொருள் மதிப்பீட்டு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**29 ஊழியர் வரையறுக்கப்பட்ட நலன்களுக்கான உரிமைகள்**

வரையறுக்கப்பட்ட நலன்களுக்கான திட்டம் என பிந்தைய வேலைவாய்ப்பில் ஈடுபடுகின்ற ஒரு திட்டமாகக் காணப்படுவதோடு, பங்களிப்பு அல்லாத திட்டத்தைச் சாராத மற்றொரு திட்டமாகும். திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் நிதி அறிக்கைகளில் அடையாளங் காணப்பட்டுள்ள பொறுப்புக்காக அறிக்கையிடப்படும் திகதிக்கு ஏற்ப பொறுப்புக்களின் தற்போதைய பெறுமதியாகும். LKAS 19 – ஊழியர் நலன்கள் திட்டமிடப்பட்ட அலகுக் கடன் (PUC) முறையைப் பயன்படுத்தி, அறிக்கையிடப்படும் திகதிக்கு ஏற்ப, பொறுப்புக்களின் பெறுமதி உசிதமான சட்டமொன்றின் மூலம் கணக்கிடப்படுகின்றன. ஒரு நடைமுறை மதிப்பீட்டில் விலைக்கழிவு வீதம், சம்பள உயர்வு வீதம் மற்றும் ஊழியர்களின் இருப்பு சேவைக் காலம் பற்றிய அனுமானங்களைச் செய்வதும் அடங்குகின்றன. திட்டங்களின் நீண்டகாலத் தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கும் உட்பட்டவையாகும்.

செயற்பாட்டு அனுகூலங்கள் மற்றும் நட்டங்களை உள்ளடக்கிய தேறிய கடன்களை மீள கணக்கிடுதல், அவை எழும் காலப் பகுதியினுள் விரிவான வருமான அறிக்கையில் விதிக்கப்படுகிறது அல்லது வரவு வைக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் படி, ஒரு ஊழியருக்கு பணிக்கொடை செலுத்துவதற்கான பொறுப்பு, ஊழியர் சபையுடன் இணைந்து 5 வருடங்கள் தொடர்ச்சியான சேவையை முழுமையாக நிறைவேற்றியதன் பின்னரே எழுகின்றது.

**பயன்படுத்தப்பட்ட பிரதான ஒத்திசைவாக்க கருதுகோள்கள்**

| கணிப்பீட்டுத் தகவல்கள் | 2021 | 2020 |
|---|---|---|
| அ. கழிவு வீதம் | 10.10% | 9.09% |
| ஆ. சம்பள உயர்வு | 5.00% | 9.00% |
| இ. இறப்பு விகிதங்கள் | நிரந்தர உத்தரவாதம், ஆண்கள், ஒருங்கிணைந்த – ஏ1967 -70 | |
| ஈ. அங்கவீன வீதம் | அங்கவீன வீதங்கள் எதனையும் நாங்கள் கருதவில்லை | |
| உ. மீள்பெறுகை வீதம் | | |
| வயது வீச்சு | | |
| 0 - 20 | 0.0% | 0.0% |
| 20 - 25 | 0.0% | 0.0% |
| 25 - 30 | 3.6% | 2.9% |
| 30 - 35 | 2.8% | 1.8% |
| 35 - 40 | 3.2% | 1.9% |
| 40 - 45 | 0.0% | 0.0% |
| 45 - 50 | 0.0% | 0.0% |
| 50 - 55 | 0.0% | 0.0% |
| 55 - 100 | 0.0% | 0.0% |

| ஊழியர் தகவல்கள் | | |
|---|---|---|
| அ. சராசரி வயது | 36.3 | 35.3 |
| ஆ. சராசரி சேவைக் காலம் (வருடங்கள்) | 8.6 | 7.6 |
| இ. எதிர்பார்கரும் எதிர்கால ஆயுட்காலம் (வருடங்கள்) | 13.15 | 15.58 |
| ஈ. ஊழியர்களின் எண்ணிக்கை | 227 | 234 |

# நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 30 பிற நிதிப் பொறுப்புகள்

